திராவிடன்

ஆசிரியர்: என். வி. நடராசன்.

மாலை : 9 19—8—55 வெள்ளி : 24-பக்கங்கள் : விலை 6 அணா மலர் : 1

திராவிடன்

சென்னை : 19—8—55 : வெள்ளி

ஒன்பதாம் ஆண்டு

வணக்கமும் வேண்டுகோளும்

★

அன்புள்ள தோழர்களே, உங்களின் ஆதரவை பெருந் துணையாகக் கொண்டு பணியாற்றிவரும் திராவிடன் எட்டாம் ஆண்டினைக் கடந்து இன்று முதல் ஒன்பதாம் ஆண்டுப் பயணத்தைத் துவக்குகிறான் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

கடந்த எட்டு ஆண்டுகளாக திராவிடத்தின் தனி உரிமைக்காக திராவிடன் ஆற்றிவந்துள்ள தொண்டினை நீங்கள் யாவரும் அறிந்த தாதலால் அதுபற்றிக் கூறுவது தற்புகழ்ச்சியாகும் என்று அஞ்சி விவரிக்காது விடுக்கிறோம்.

பத்திரிகை உலகில், ஒரு உயர்ந்த உறுதிப்பாட்டினைக் கொண்டு குறிப்பாக நம் கழக மூலாதார கொள்கைகளான நாட்டுப் பிரிவினை, சமுதாயத்தில் மலிந்துள்ள கண்மூடி வழக்கங்களை அறவே அகற்றி அனைவரையும் தலைநிமிர்ந்து வாழச் செய்யும் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு, அவைகள் வெற்றி யுறுவதற்கான வகையில் நடத்தப்படும் ஏடுகளுக்கு எங்தெந்த வகையில் தொல்லைகள் ஏற்படும் என்பதை விளக்கப் புகுந்தால் இடம் கொள்ளாது. எனினும் அவ்வித சலசலப்புகளை யெல்லாம் சமாளித்து திராவிடன் தனது பயணத்தில் தொடர்ந்து நடைபோட்டு வருகிறான் என்றால் கழகத் தோழர்கள்—வாசகர்களாகிய நீங்கள் அளித்துவரும் ஆதரவேயன்றி வேறில்லை.

கழகப் பத்திரிகைகள் என்றால் இன்றைய அரசியலாரின் அல்லது பெரும் வணிகர்களின் **"விளம்பரப் பாதுகாப்புகள்"** கிடைப்பதில்லை யென்பது நாடறிந்த உண்மையாகும். எனினும் கழக ஏடுகள் அனைத்தும் தங்களுக்கு வாய்த்துள்ள மிகச் சாதாரண அமைப்பையே அஸ்திவாரமாகக் கொண்டு பணியாற்றி வருகின்றன. ஆனால் அந்த அஸ்திவாரம் தன்மானமுடையதாதலால் இடையிடையே ஏற்படும் நெருக்கடிகளையும் சகித்துக் கொண்டு கொள்கையை சிறிதும் விட்டுக் கொடுக்காமல் கழக ஏடுகள் நடைபோட்டு வருகின்றன. அதிலும் திராவிடனுக்கு உள்ள மிகச்சாதாரண வசதியையும் அதேசமயத்தில் கடந்த எட்டாண்டு காலப் பயணத்தையும் எண்ணுந்தோறும் எம்மையே திகைத்திடச் செய்கிறது. எனினும் நமது அண்ணா அவர்கள் அளித்துள்ள கேடயமாம் 'எதையும் தாங்கும் இதயமுண்டு" என்பதையே அந்நேரங்களில் மனதில் கொண்டு தொடர்ந்து பணியாற்றி வருகிறான் திராவிடன்.

அதுபோலவே மேலும் தளரா உறுதியுடன் இன்பத் திராவிடத்தை உருவாக்கும் பணியினை ஏற்று தனது 9-ம் ஆண்டின் பயணத்தைத் துவக்குகிறான். அப்பயணம் எவ்வித இடையூறுமின்றி இனிது நிறைவேற வாசகர்களையும் ஆதரவாளர்களையுமே பெருந் துணையாக நம்பியிருக்கிறான்.

நிற்க, திராவிடன் தனது சென்ற கால பயணத்தில் எட்டாம் ஆண்டினை மிகச் சிரமப்பட்டு கடந்திருக்கிறான் என்பதை வெளிப்படையாகத் தெரிவித்துக் கொள்கிறோம். கழக ஏடுகள் பக்கங்களின் எண்ணிக்கையை விரித்துக் காட்டி நடமாடுபவைகள் அல்ல என்பதுடன் கொள்கையை வளர்க்கும் கருத்துக்களைத் தாங்கி நிற்பதே அவைகளின் தனிச்சிறப்பாகவும் இருந்து வருகிறது என்பதைத் தோழர்கள் அறியாததல்ல,

இந்த எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டே கழக ஏடுகளுக்கெல்லாம் வழிகாட்டியாக உள்ள 'நம் நாடு' 'திராவிட நாடு' முதல் 'திராவிடன்' வரையுள்ள கழக ஏடுகள் அனைத்தும் பணியாற்றி வருகின்றன.

எனினும் நம் கழக ஏடுகளில் ஒன்று பக்கங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தித் தனது வலிமையைக் காட்ட முன் வந்ததால், அதற்கேற்ப கூடுமானவரை திராவிடனும் பலவித தொல்லைகளுக்கிடையே இதையும் சமாளித்து நிற்க வேண்டியதாயிற்று. இதனால் கடந்த ஆண்டு, திராவிடன் மிகுந்த சிரமங்களை ஏற்க நேர்ந்தது.

நிற்க பக்கங்களை அதிகமாக்கிக் காட்டிய அச் சகா ஏடுக்காகிலும் இலாபமா யென்றால் அதுவும் ஐயப்பாட்டிற்குரியதே, எனினும் இச்சிரமத்தைக் கூடுமான வரைச் சமாளிப்பதென்றே உறுதி கொண்டிருக்கிறோம்.

ஒருக்கால் அந்த தொல்லை நம்மை மிகவும் பாதிக்கப்படுகிறதென்ற சூழ்நிலை ஏற்படுமானால், கடந்த ஆண்டுக்கு முன்பு வெளிவந்ததைப் போன்றே திராவிடன் 12-பக்கங்களாக 3 அணா விலையில் வெளியிடப்பட நேரிடலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன் வாசகர்களும் இதைக் குறையாகக் கொள்ளாமல் பொருத்தருளி எமது இப்பணிவன்பான வேண்டுகோளினை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்வார்களென்றே எதிர்பார்த்திருக்கிறோம்.

தவிர, திராவிடன் தனது கடமையை இனிது நிறைவேற்ற பக்கத் துணையாய் நிற்கும் ஏஜெண்டுத் தோழர்களில் மிகமிகச் சிலர் கண்ணியமுடன் நடந்து கொள்ளத் தவறி விட்டாலும், **பெரும்பான்மையான ஏஜெண்டுத் தோழர்கள் தரும் ஒத்துழைப்புக்காக** அவர்களுக்கு எமது மனப்பூர்வமான நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அது போன்றே வாசகர்களுக்கும், சந்தாதாரர்களுக்கும் எமது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், **சந்தாதாரர்களாகிய ஆதரவாளர்கள் தங்களின் கட்டணத்தை அவ்வப்போது தவறாது அனுப்பி உதவ வேண்டுகிறோம்.**

திராவிடன் வாரந்தோறும் கருத்துப்படையலை காலந்தவறாது சிறப்புடன் அளிப்பதற்கு துணையாய் நின்று தங்கள் தங்கள் கருத்துக்களைத் தீட்டி வரும் தோழர்களுக்கும் "திராவிடன்" அலுவலகத் தோழர்களுக்கும் ஏனையோருக்கும் எமது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வித ஒத்துழைப்புடன் திராவிடன், நம் கழக ஏடு 'நம்நாடு' காட்டும் வழியையும் சகா ஏடுகளின் துணையையும் அறிஞர் அண்ணா அவர்களின் அறிவுரையையும் ஏற்று இன்பத் திராவிடம் காண தனது 9-ம் ஆண்டின் பயணத்தை இனிது நிறைவேற்ற உறுதியுடன் பணியாற்றுவான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வாழ்க திராவிடம்

அன்புள்ள,

என். வி. நடராசன்

தலைமைக் கழகம் : அறிக்கை—24/55

இந்திக் கமிஷன் பற்றி:

"ஹிந்தி கமிஷன் முன் சாட்சியம் கொடுக்க ஸ்ரீ அண்ணாதுரை தயார்," என்று தலைப்பிட்டு, "தி. மு. க. தலைவரான ஸ்ரீ ஸி. என். அண்ணாதுரை மட்டும் கமிஷன் முன்பு சாட்சியம் கொடுக்கத் தயாராயிருப்பதாக அறிவித்துள்ளார்," என்று, டாக்டர் சுப்பராயன் அவர்கள் நிருபர் பேட்டியில் கூறியதாக, 'சுதேசமித்திரன்' வெளியூர் ஆகஸ்டு 10, 1955 இதழில் செய்தி ஒன்று வெளிவந்துள்ளது. இந்தச் செய்திக்கு ஆதாரம் எதுவும் இல்லை என்று தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் தலைமைக் கழகத்திற்குத் தெரியப் படுத்தியுள்ளார்கள்.

இந்திய யூனியன் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருக்கும் இந்திக் கமிஷன் (அரசியல் மொழிக் கமிஷன்) 'இந்தி வேண்டுமா அல்லது வேண்டாமா' என்று கேட்கவில்லை; 'இந்தியை எப்படி யெல்லாம் புகுத்தலாம்' என்று ஆலோசனை கேட்கவே வருகிறபடியால் திராவிட முன்னேற்றக் கழகம், இந்திக் கமிஷனின் அழைப்பை ஏற்றுக் கொள்ளவோ, அதன் ஆலோசனை கூறவோ உடன்படாது என்பதை இதன் மூலம் தெரியப் படுத்திக் கொள்கிறேன்.

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

அடுத்த வாரம்

● தோழர் கௌதமன் தீட்டும் சரித்திரச் சித்திரம்—**சுல்தானா ரஸியா!**

● திருவேடம் தரும் அரசியல் குறிப்புகள் **பஞ்சாபில்** மூன்று நாட்கள்,

○ திராவிட நாட்டுக் கல்வி வரலாறு மற்றும் கேள்வி பதில், செய்திகள். முதலியன **திராவிடன் 26—8—55-ம் நாள் இதழில் வெளிவரும்.**

தாயக நினைவுகள்

முன்னுரை :

நீண்ட நாட்களுக்கு முன்பு மேலை நாட்டு சிறு கதைத் தொகுதி ஒன்று படித்தேன் அதிலிருந்த 'கலங்கரை விளக்கின் காவலாளி' என்ற ஒரே ஒரு கதை மட்டும் இன்னும் என் நினைவில் அன்றிருந்த இளமை அழியாமல் இருக்கிறது. அத்தனை ஜீவப் பொலிவோடு அமைந்திருந்தது அந்தக் கதை. அதை எழுதியவரின் பெயர் நினைவில்லை. ஆனல் அவர் போலந்து நாட்டின் சிறந்த எழுத்தாளர் என்பது மட்டும் நிச்சயம். நிறைந்த மேதாவிலாசம் படைத்தவர் என்பதும் நிச்சயம். அதற்கு அத்தாட்சியாக விளங்குகிறது இந்தக் கதை. அவர் அமைத்திருந்த அதே சூழலைவைத்து அவரது பண்பட்ட சிருஷ்டி சக்தியில் பிறந்த அதே கதாபாத்திரத்தை நினைவில் கொண்டு இதை எழுதுகிறேன்.

●

கடலில் வரும் கப்பல்களுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கம் அந்த சின்னஞ்சிறு தீவின் மலையுச்சியில் இருந்தது. அதன் காவலாளியை திடீரென்று ஒரு நாள் காணவில்லை. முதல் நாளிரவு வீசிய புயலில் சிக்கி அவன் தவறிப்போய் கடலில் விழுந்துவிட்டானே என்னவோ!

அந்தத் தீவிற்கு சிறிது தூரத்திலிருந்த துறைமுகத்தில் ஒரே பரபரப்பாக இருந்தது. துறைமுக அதிகாரி கலங்கரை விளக்கிற்கு வேறொரு காவலாளியை உடனடியாகத் தேடிக்கொண்டிருந்தார். ஏனெனில் கப்பல் போக்குவரத்து அதிகமாக உள்ள பிராந்தியம் அது. கப்பல்களுக்கு திசை காட்டும் தீபஸ்தம்பம் ஆளில்லாமல் இருண்டு கிடந்தால் நிலைமை என்னுகும்!

ஆனல் அந்த வேலைக்கு எவருமே முன்வருவதில்லை. வந்தாலும் அதிக நாள் தங்குவதில்லை. ஏனெனில் அந்த இடம் சிறைச்சாலையைவிட மோசமானது. அந்த வேலை சிறைக் கைதியின் வேலையைவிட கடினமானது. அந்தத் தீவில் வேலைக்கு வருவதைத் தவிர வேறு மனிதப் பூண்டில் வாசனையே வீசாது. ஏகாந்தம் மட்டுமே நிறைந்த சூன்யப் பிரதேசம் அது. அந்த வேலைக்கு வருபவன் ஞாயிற்றுக்கிழமை தவிர மற்ற நாட்களெல்லாம் சுடுகாட்டு அமைதி சூழ்ந்த அந்த மலைமுகட்டைவிட்டு கீழே இறங்க முடியாது. பறவைகளின் முணுமுணுப்புகளையும் கடலலைகளின் சீறல்களையும் தவிர வேறு எந்த ஓசையையும் கேட்க முடியாது, அவனுக்கு வேண்டிய உணவை தினமும் ஒருவன் துறைமுகத்திலிருந்து படகில் கொண்டுவந்து தருவான். உணவு தரும் அந்த மனிதனும் வந்த வேகத்திலேயே திரும்பிப் போய்விடுவான். காவலாளி பகலில் வர்ணக் கொடிகள் மூலமாகவும் இரவில் விளக்குமாடத்தின் ஒளிக்கற்றைகள் மூலமாகவும் கப்பல்களுக்கு பாதை காட்ட வேண்டும். தன்னந்தனியாக உணர்ச்சிகளைப் பகிர்ந்துகொள்ள துணையின்றி தானே தனக்கு ஆதரவாக வாழவேண்டிய வாழ்க்கை அது!

நல்ல வேளையாக அந்த வேலைக்கு ஒருவன் முன் வந்தான். அவன் வாழ்க்கையின் ஓரக்கோட்டை நெருங்கிக் கொண்டிருந்தான். வயது எழுபதுக்கு மேலிருக்கும். என்றாலும் வலிவு குறையவில்லை, வெளுத்த தலைமயிர். உள்ளே அழுந்திய விழிகள். ஆனாலும் கண்களில் கூர்மை இருந்தது. அவன் முகத்தில் துயர ரேகைகளும், காலத்தின் சுருக்கங்களும் வேரோடியிருந்தன.

துறைமுக அதிகாரி அவனிடம் வேலையின் கஷ்டத்தை எடுத்துச் சொன்னன்.

'உயரத்திலுள்ள அந்த விளக்கு மண்டபத்துக்கு நீ பலமுறை தினமும் ஏறி இறங்க வேண்டியிருக்கும். உனக்கு தெம்பிருக்கிறதா?

நான் உலகின் பல பகுதிகளையும் சுற்றி வந்திருக்கிறேன். என் வாழ்க்கையின் பெரும்பகுதியை போர் வீரனுக கழித்ததால் நடந்து நடந்து என் கால்கள் தடிப்பேறி விட்டன.

இந்த வேலைக்கு வந்தால் நீ ஒரே இடத்தில் இருக்க வேண்டும்.

ஆமாம். அதையே நானும் விரும்புகிறேன். வாழ்க்கையில் நான் களைத்துவிட்டேன். இப்போது எனக்கு ஓய்வு வேண்டும். நிம்மதியான இடம் வேண்டும்.

ஏனே அவன் குரலில் ஒருவித சலிப்பு படிந்திருந்தது.

*

அன்றிரவு, கலங்கரை விளக்கின் ஒளிக்கதிர்கள் கடலலைகளின் உச்சியில் கொஞ்சி விளையாடின. ஆமாம். அந்தக் கிழவன் வேலையை ஒப்புக் கொண்டு விட்டான்!

இரவு அமைதியாக இருந்தது. கடல் மட்டும் அமைதியின்றி குமுறியது. அலைகள் புரண்டு புரண்டு விளையாடின.

மலை உச்சியிலிருந்த ஒளி மாடத்தில் கைப்பிடி ஓரமாக நின்று கொன்டு அந்தக் கிழவன் கடலையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். சுற்றிலும் மெல்லிய ஒளி கலந்த இருள். வானில் திரண்டிருந்த கருப்புத் திட்டுகளுக்கு இடையே சில இடங்களில் இரண்டொரு ஒளிப்புள்ளிகள், கடலின் 'ஹோ' என்ற இடைவிடாத புலம்பல்!

அவன் தன் எண்ணங்களை ஒன்று சேர்க்க முயன்றான். முடியவில்லை. ஏனே அவன் மனம் பரபரப்பில் துடித்தது. வேட்டைக்காரனின் இலக்குக்கு தப்பிய மிருகம், பாதுகாப்பான தனது குகைக்கு வந்தபின் அடையும் நிம்மதி யுணர்ச்சி அவன் உள்ளத்தை நிரப்பியது அந்த உணர்ச்சியில் மகிழ்ச்சியும் கலந்திருந்தது.

அவன் வாழ்க்கை, புயலில்சிக்கிய படகு போன்றது, அந்தப் புயலின் நினைவுகள் அவன் மனதில் இப்போது வேகமாக வந்து மோதின. அவன் உலகின் நான்கு மூலைகளுக்கும் சென்று வீரத்தோடு போரிட்டான். அவனிடமிருந்த கடுமையான உழைப்பும், நேர்மையும் அவனுக்கு போதிய சுகத்தைத்தர தவறி விட்டன! வசந்தங்கள் பல வந்து போயின. ஆனல் இன்பம் மட்டும் அவன் வாழ்க்கையில் தலை நீட்டவே இல்லை. கடைசியில் தலைமயிர் வெளுத்தது தான் கண்ட பலன்! அவனைத் தெரிந்தவர்கள் எல்லாம் அவனுக்கு அதிர்ஷ்டமில்லை என்றார்கள். விதி சதி செய்து விட்டது என்று பேசினர்கள். ஆனல் அவன் எப்போதும் தன்னம்பிக்கையை இழந்ததே இல்லை!

கடைசியில் அவனிடம் ஓய்வு பெற வேண்டும் என்ற ஒரே ஒரு எண்ணந்தான் எஞ்சி நின்றது. வேறு எந்த ஆசையும் இல்லை, உலகில் ஏதாவது ஒரு மூலையில் ஏகாந்தமான இடத்தில் சாவின் வருகையை எதிர் நோக்கியபடி ஓய்வோடு இருக்க வேண்டும் என்பதைச் சுற்றியே அவன் கனவுகள் மொய்த்தன; அவை இப்போது நிறைவேறிவிட்டன, இப்போது இந்த மலை முகட்டிலிருந்து பழைய வாழ்க்கையை — துன்பங்களும் ஏமாற்றங்களும் நிறைந்த வாழ்க்கையை—பார்த்து ஏளனமாக சிரிக்க முடிந்தது அவனல்.

மாலையில் கலங்கரை விளக்கை ஏற்றியபோது அவனுக்கு ஒரே ஆச்சர்யமாக இருந்தது. இதெல்லாம் கனவா என்று நினைத்தான். இல்லை. உண்மைதான், இதோ ஒளிமாடத்தின் பக்கத்திலிருந்து கொண்டு முதல் முதல் கடலைக் காண்பதுபோல அத்தனை வியப்போடு பார்க்கிருனே, இது உண்மை தான்! கடந்துபோனவைகளை அலட்சியமாக அசைபோடுகிருனே, இதுவும் உண்மைதான்,

அலைகள் ஓய்வின்றி ஊளையிட்டன! கரையில் மோதிமோதி விழுந்தன. 'ஹோ' என்ற அலை ஓசை கடலின் புரியாத பேச்சுபோல அவனுக்கு தோன்றியது எங்கோ ஒரு அண்ட முடியாத ஆழத்திலிருந்து கண்ணைக் குருடாக்கும் இருளிலிருந்து அளவற்ற வலிமையோடு இடி முழக்கத்தைப்போல அந்தப் பேச்சு ஒலித்தது.

அவன் கண்களில் தூரத்தில் செல்லும் ஓர் கப்பலின் சிகப்பு வெளிச்சம் தென்பட்டது. பெருமூச்சுவிட்டபடி விளக்கு மண்டபத்துக்கு பக்கத்திலிருந்த தனது அறைக்குள் சென்று படுக்கையில் சாய்ந்தான்.

*

நாட்கள் பல நழுவி விழுந்தன.

கலங்கரை விளக்கம் அவனுக்கு ஒரு புதைகுழிபோல இருந்தது. இயந்திரம் போன்ற வாழ்க்கை அதன் வேதனையை இளமைத் துடிப்புள்ளவர்களால் உணர்ந்துகொள்ள முடியாது,

அவனுடன் தொடர்பு கொண்டவை இரண்டே இரண்டுதான் ஒன்று வானவெளி. மற்றொன்று கடல். இரண்டுக்குமிடையே ஒரு மனிதப் புழு. அந்தப் புழுவின் வாழ்க்கை, தொடரும் தூக்கத்தைப் போன்றது. அந்தத் தூக்கத்திலிருந்து எதுவும் அவனை எழுப்பவில்லை. பருவத்தில்தான் மாறுதல்கள் ஏற்பட்டன. ஆனல் அவனிடம் எந்தவித மாறுதலும் இல்லை. ஒவ்வொரு நாளும் முன்னைய நாளைப் போலவே நடந்து சென்றன. இந்த வாழ்விலும் அவன் இதுவரை தொட்டுப் பார்த்திராத ஏதோ ஒரு உணர்ச்சியை அனுபவித்தான்.

காலையில் படுக்கையைவிட்டு எழுவான், உணவு முடிந்ததும் விளக்கின் கண்ணாடிகளைத் துடைப்பான். பின் கைப்பிடி ஓரமாக நின்று கொண்டு நீலக் கடலைப் பார்ப்பான். கடல் கதிரொளிபட்டு தங்கத் தகடாக பளபளக்கும். கப்பல்கள் பல மிதந்து செல்லும். வேறொரு புறம் திரும்புவான், தூரத்திலுள்ள துறைமுகமும், அதைச் சுற்றியுள்ள இடங்களும் உள்ளங்கைபோல தோன்றும். துறைமுகத்துக்கு அப்பால் ஒரு பெரிய காடு இருந்தது. தொலை நோக்கி மூலம் அந்தக் காட்டை ஆராய்வான். அந்தக் காட்டிலுள்ள குரங்குகளின் விளையாட்டுகளை ரசித்து மகிழ்வான். சில சமயங்களில் கீழே இறங்கி கடலில் கொஞ்ச தூரம் சென்று அலைகளின் மத்தியில் நிற்பான் சுருக்கம் விழுந்த கைகளால் கடல் நீரை வாரி வீசுவான். கடற்கரையில் தூங்கிக் கிடக்கும் கிளிஞ்சல்களை அர்த்தமில்லாமல் பொறுக்குவான்.

அவனுக்கு சில நண்பர்களும் பொழுது போக்க கிடைத்தனர். மலை வளைவுகளில் முட்டையிடும் கடற் பறவைகள்தான் அந்த நண்பர்கள்! மாலை நேரங்களில் அந்தப் பறவைகள் சிறகடித்து வந்து விளக்கு மண்டபத்தின் மேல் அமரும். அவன் மிஞ்சியுள்ள உணவை அவைகளிடம் எறிவான்! உடனே வெள்ளை இறக்கைகள் அவனைச் சுற்றிலும் படபடக்கும்!

இதைத் தவிர அவனுக்கு வேறு எதுவும் வேண்டியிருக்கவில்லை ஞாயிறு மாலைகளில் அவன் அந்த இடத்தைவிட்டு துறைமுகத்துக்கு செல்வான் தன்னை யொத்த மனிதர்களின் மத்தியில் நடமாடும் போது நீண்ட தூக்கத்திலிருந்து விழித்தவன்போல தென்படுவான். தன்னைப்பற்றி எல்லோரும் நல்ல காவலாளி என்று புகழ்ந்து பேசுவதைக் கேட்பான். பத்திரிகை இதழ்களைப் புரட்டிப் பார்ப்பான். அப்போதுதான் அவனுக்கு தன்னைச்சுற்றிலும் ஒரு உயிருள்ள உலகம் இருக்கிறது என்ற உண்மை புலப்படும்!

ஞாயிறு மாலைகளைத் தவிர வேறு எப்போதும் அவனை எவரும் பார்த்ததில்லை. தினமும் ஏற்றப்படும் கலங்கரை விளக்கின் வெளிச்சத்திலிருந்து அவன் உயிருடன் இருக்கிறன் என்பதை எல்லோரும் தெரிந்து கொள்வார்கள், எதையும் வேடிக்கையாகப் பார்க்கும் அவனது குழந்தை விழிகளைப் பற்றி எல்லோரும் தங்களுக்குள்ளே அதிசயித்துக் கொள்வார்கள்.

கடல் அலை, மலை உச்சி, விளக்கு மண்டபம் இவைகளோடு அவனும் ஒன்றாக ஒன்றிப் போய் விட்டான். தனது வாழ்க்கையின் கடைசி அத்தியாயம் இங்கேதான் எழுதப்படப் போகிறது என்று நம்பினன். அந்தச் சூழ்நிலையில் தன்னைத் தானே விரும்பி புதைத்துக் கொண்டான், கனவுகளை நிர்மானித்து அவைகளின் மீதே தூங்கினன்.

*

ஆனல் ஒரு நாள் அவன் தூக்கம் திடீரென்று எதிர்பாரா விதமாக கலைந்தது.

அன்று அவனுக்கு உணவு எடுத்துவந்த வேலையாள் கூடவே வேறொன்றையும் கொண்டு வந்தான். அது ஒரு புத்தகக் கட்டு! அவனுக்கு வியப்பு தாங்கவில்லை, அதை அவனுக்கு—உலகில் தன்னந் தனியாக நிற்கும் அந்த அனுதைக்கு யார் அனுப்பியிருக்கக்கூடும். அதில் அவனுக்கு என்ன காத்திருக்கிறது! அவசர அவசரமாக கட்டைப் பிரித்தான். அதில் பல புத்தகங்கள் இருந்தன. அவைகளில் ஒன்றை எடுத்தான். அந்தப் புத்தகத்தின் அட்டையை உற்றுப் பார்த்தான், அவ்வளவுதான் அவன் கை நடுங்கியது. இதயம் வேகமாக துடித்தது. உடலெங்கும் ஓர் சிலிர்ப்பு மின்னலைப் போல பாய்ந்தோடியது.

அவன் அந்தப் புக்ககத்தை சட்டென்று கீழே வைத்து விட்டான். அந்தப் புத்தகத்தின் அட்டையில் 'போலந்து' என்ற வார்த்தைகள் பொன்னிறத்தில் பொறிக்கப்பட்டிருந்தன. அவன் தன் கண்களை மூடிக்கொண்டான்...

தில்லை. மறைமுதல்வன்

உயர்ந்த இலக்கியம் உருவாக வழிவகை செய்வோமாக

அவன் வேலை ஒப்புக் கொண்ட புதிதில் ஒரு நாள் பத்திரிகையில் தான் இருக்கும் பகுதியில் 'போலந்து நாட்டு கழகம்' ஒன்று அமைக்கப்பட்டிருப்பதை படித்தான். உடனே தனது வருமானத்தில் பாதியை அக்கழகத்துக்கு அனுப்பினான். ஏனெனில் அவனுக்கு வேறு எந்தவித செலவுமில்லை! அவன் அனுப்பிய பணத்துக்குப் பதில் அக்கழகத்தார் அவனுக்கு இந்த ஏடுகளை அனுப்பி யிருந்தனர் நீண்ட நேரத்துக்குப் பின்னர்தான் இவையெல்லாம் அவனுக்கு நினைவில் வந்தன...

இன்னும் அவன் கண்களை மூடிக் கொண்டிருந்தான். கண்களைத் திறந்தால் கனவு கலைந்துவிடுமோ என்று பயந்தான். அவனைச் சுற்றிலும் ஒரு விசித்திரமான மௌனம் குடிகொண்டிருந்தது. ஏதோ ஒன்று நிகழப் போவதன் அடையாளமாக! ஏதோ ஒரு மாறுதலின் அறிகுறியாக! ஏதோ ஒரு புதுமையின் முன்னறிவிப்பாக!

சிறிது நேரத்துக்குப்பின் மெள்ள தன் கண்களைத் திறந்தான். மெதுவாக அந்தப் புத்தகத்தை எடுத்தான். அது கவிதைத் தொகுதி. அவனுக்கு உயிரூட்டி வளர்த்த தாய்மொழியான போலந்து நாட்டு மொழியில் அது எழுதப்பட்டிருந்தது. முகப்பில் புத்தகத்தின் பெயருக்கு கீழே எழுதியவரின் பெயர் இருந்தது. அந்தக் கவிஞன் பெயரை அவன் எப்போதோ கேள்விப்பட்டிருந்தான். துடிக்கும் உள்ளத்தோடும், கட்டுப்படுத்த முடியாத ஆர்வத்தோடும் அவன் புத்தகத்தை விரித்தான்—

திடீரென்று அங்கே மூட்டமிட்டிருந்த அமைதியைக் கிழித்துக்கொண்டு அவன் குரல் கேட்டது. வாய் விட்டுப் படித்தான்...

ஓ! போலந்தே! அழகிய என் அன்னை நாடே!
என்னென்ன கூறி உன்னை வணங்குவேன்!
எங்கெங்கு சென்று உன் புகழ் பாடுவேன்!
ஓ! போலந்தே! எனை ஈன்ற என் தாயகமே!...

அவன் குரல் விசித்திரமான வெறியோடு உள்ளக் களிப்பின் முத்திரையோடு, ஒலித்தது. அவன் தன் சூழலை அடியோடு மறந்து விட்டான். வானப் பரப்பு நிர்மலமாக இருந்தது. ஓர் மேகங்கூட கிடையாது. கடல் அழகிய கன்னியைப் போல தூங்கியது அலைகள் பெண்ணின் மார்பைப்போல விம்மித் தணிந்து கொண்டிருந்தன. கடலோசை கூட சன்னமாக இழைந்து ஒலித்தது. அவன் அறையிலிருந்த கடிகாரம் மாலை மணி ஐந்து அடித்தது. ஆனால் அந்த ஓசைகள் அவனுடைய உட்புலன்களை தொடவில்லை. அவன் தன் கையிலிருந்த புத்தகத்தில் ஐக்கியமாகி விட்டான்.

பக்கங்கள் புரளப் புரள அவன் குரல் தடுமாறியது எழுத்துக்கள் அவன் கண்முன் நீந்தின. அவன் உள்ளத்தில் ஏதோ ஒன்று பாகாக உருகி வழிந்தது. அவன் இதயத்தில் ஏதோ ஒன்று முளைத்து மேலே மேலே அலை அலையாக, எழும்பியது. அந்த உணர்ச்சி வெள்ளம் தொண்டையை உடைத்துக் கொண்டு பீறிட்டபோது அவன் உரக்க சத்தமிட்டான். தரையில் விழுந்து புழுப்போல துடித்தான்...

அவன் தன் சொந்த நாட்டைப் பார்த்து நாற்பது ஆண்டுகளாகி விட்டன. போர் வீரனாக உலகில் எங்கோ நாடோடி போல சுற்றினான். போரில் சுடுகாடாகிவிட்ட தன் சொந்த வீட்டையும் மறந்து விட்டான். குழந்தையாக இருக்கும் போதே செத்து விட்ட பெற்றோர்களையும் மறந்து விட்டான். கடைசியில் வாழ்வின் அந்திப் பொழுதில் இந்த மலைமுகட்டில் தனிமையின் தனிமையாக கொலு வீற்றிருக்கும் பிரதேசத்தில், தனிப் பறவையைப்போல புகலடைந்தான். ஆனால் இப்போது சென்ற காலம் மீண்டும் அவன் கண் முன்னே உருப்பெற்றது. புத்தகத்தில் தனது தாய்மொழியைக் கண்ட விநாடியிலேயே அவனுள்ளே புதைந்து கிடந்த சம்பவங்கள் வெளிக் கிளம்பின. நீண்ட இடைவெளிக்குப் பின் தனது சொந்த மொழியில் வாய்விட்டுப் படித்தபோது இனம் புரியாத ஆனந்தம் அவனை ஆட்கொண்டது. தனது தாய் மொழியில் அவன் எத்தனை எத்தனை விஷயங்களை கற்றிருக்கிறான்! அந்த மொழி...முதன் முதலாக வாய் திறந்து பேசிய அந்த மொழி, அவனது உயிருக்கு நேரான அந்த இனிய மொழி, அவன் நெஞ்சில் பழைய நினைவுகளை கிளறிவிட்டது. அந்த நெகிழ்ச்சியை சுமக்க முடியாமல் அழுதான். கண்ணுக்கு எட்டாத தொலை தூரத்திலிருந்த பூமியிடமிருந்து மன்னிப்பு வேண்டி யழுதான். அவன் அழுகையில் சோகமில்லை திடீரென்று ஏற்பட்ட விழிப்புதான் இருந்தது...

மனமார அழுததால் அவன் நெஞ்சில் நிம்மதி—ஒருவித ஆறுதலுணர்ச்சி—குமிழிட்டது. மாலை வேளையில் வழக்கம்போல வரும் பறவைகள் வந்தன. வழக்கம்போல உணவுக்காக அவன் தலையருகே வந்து சத்தமிட்டன. ஆனால் வழக்கத்துக்கு மாறாக பிரதிபலிப்பற்ற தன்மையை தங்கள் நண்பனிடம் கண்டன. அவனிடம் ஏற்பட்ட மாறுதலை அவைகளால் புரிந்து கொள்ள முடியவில்லை. சிறிது நேரத்துக்குப் பின் முணுமுணுத்துக் கொண்டே பறந்து சென்று விட்டன.

ஒளி மறைந்து அவனைச் சுற்றிலும் கனத்த இருள் சூழ்ந்தது. கலங்கரை விளக்கை ஏற்ற வேண்டிய நேரம். ஆனால் அவனோ அந்த உணர்வின்றி வானத்தை அண்ணாந்து பார்த்தபடி பாசறையில் படுத்துக்கிடந்தான். வானில் நட்சத்திரங்கள் கண் சிமிட்டின. அந்த ஒளியில் அவன் தான் பிறந்த நாட்டுக்கு பறந்து சென்றான்.

அந்த நாட்டிலுள்ள பனி மூடிய குன்றுகள் அவனை வரவேற்றன. ஆறுகள் சங்கீதம் பாடின. காடுகள் அவனைப் பார்த்து 'உனக்கு எங்களையெல்லாம் நினைவிருக்கிறதா' என்று கேட்டன.

அவனுக்கு இதெல்லாம் நினைவிருக்கிறதா என்ன?

பசுமை நிரம்பிய வயல்வெளிகளில் பயிர்கள் அசைந்தன. குடிசைகள் வரிசை வரிசையாக தென்பட்டன. மக்கள் அங்குமிங்கும் நடமாடினார்கள். கைகளை ஆட்டிக்கொண்டும் கண்களை சிமிட்டிக் கொண்டும் எதையெதையெல்லாம் உணர்ச்சி பொங்கப் பேசினார்கள். காட்சிகள் ஒன்றன் பின் ஒன்றாக அவனது கண்ணிமைகளுக்கிடையே அணிவகுத்துச் சென்றன...

பிறந்த மண்ணின் வாசனை அவனைச் சுற்றிலும் கமழ்ந்தது!

*

விடிந்தது.

பாசறையில் படுத்துக் கொண்டிருந்த அவன் சூரியனின் கதிர்கள் பட்டும் எழவில்லை. யாரோ தன்னை தட்டி எழுப்புவதை உணர்ந்ததும் கண் விழித்தான். அவன் எதிரே துறைமுக அதிகாரி நின்று கொண்டிருந்தார்.

நீ ஏன் இரவு கலங்கரை விளக்கை ஏற்றவில்லை.

அவனுக்கு எதுவும் புரியவில்லை

கலங்கரை விளக்கு இருண்டு கிடந்ததால் நேற்றிரவு வழி தெரியாமல் ஒரு கப்பல் துறையில் மோதி கவிழ்ந்து விட்டது.

அப்போதும் அவனுக்கு குழப்பம் நீங்கவில்லை.

நேற்றிரவு நீ எங்கே போயிருந்தாய்!

என் நாட்டுக்கு...போலந்து தேசத்துக்கு......

இப்பதில் துறைமுக அதிகாரியை திடுக்கிட வைத்தது. சிறிது நேரம் ஏதோ யோசித்தார்.

உயிர்ச்சேதம் ஏற்பட்டிருந்தால் உனக்கு கடுமையான தண்டனை கிடைத்திருக்கும். நல்லவேளை தப்பினாய். ஆனால் உனக்கு இனி இங்கு வேலையில்லை. நீ போகலாம்.

அவன் மெதுவாக—ஆனால் உறுதியாக—நடந்து சென்றான். ஆனால் அவன் கண்களில் இதுவரை யில்லாத ஜொலிப்பு மிதந்தது.

முடிவுரை :

வாழ்வின் பெரும் பகுதியை கழித்துவிட்ட ஒரு வயோதிகன் கலங்கரை விளக்கின் காவலாளியாக வருகிறான். சில நாட்களுக்குப் பின் வேலையிழந்து போகிறான். இது சர்வசாதாரணமான நிகழ்ச்சிதான். ஆனால் அந்த இடைவேளையில் எத்தனைய திடீர்மாறுதல்! வாழ்வின் கசப்பை சுவைத்து மரத்துப்போயிருந்த அந்தக் கிழநெஞ்சில் எத்தனைய உணர்ச்சிப்புயல் வீசிவிட்டது! பிறந்த மண்ணின் வாசனை அவனை என்னபாடு படுத்திவிட்டது. போலந்து கதாசிரியர்களே மனித நெஞ்சில் அடைபட்டுத் தவிக்கும் உணர்ச்சிகளை சொற்களில் சிறை செய்துவிடும் வல்லமை பெற்றவர்கள். இதற்கு முன்னர் நான் எழுதியிருந்த 'முடியாது' என்ற போலிஷ் கதையின் ஆசிரியரும் இவரைப்போலவே சாதாரண பெண்ணின் உணர்ச்சி சுழிப்பில் நம்மை சொருகவைக்கும் வண்ணம் எழுதியிருந்தார். எந்த எளிய நிகழ்ச்சிக்கும் உயர்ந்த கலையுருவம் தீட்டும் ஆற்றல் பெற்றவர்கள் போலிஷ் இலக்கியச் சிற்பிகள். அந்த ஆற்றல் நம்மில் பலரிடம் இன்னும் சரிவர உருவாகவில்லை. வெறும் வார்த்தைகளை வைத்துக்கொண்டு விளையாடுகிறார்கள். ஒரே விஷயத்தை திருப்பித்திருப்பி சலிக்காமல் அதே அம்சங்களோடு கிறுக்கித் தள்ளுகிறார்கள். இந்த நிலை நிச்சயம் மாறவேண்டும் உயர்ந்த இலக்கியம் பிறக்க!

★

கிரேக்க இலக்கியம் தொடர்ச்சி

னுக்கு முன்பே வழக்கத்தில் இருந்து வந்த உண்மைகளை மதித்தான், பிளேட்டோவின் மரணத்திற்கு பின் லிசியம் என்னுமிடத்தில் கல்விச்சாலை யொன்று நிறுவினான். அதன் மூலம் பிளேட்டோவையும், சாக்ரடீஸையும் விமர்சனம் செய்தான். அச்சமயத்தில் அலெக்ஸாண்டரின் தோற்றம் கிரேக்கக் குடியரசை அழித்தது. அரிஸ்டாட்டில் அலெக்ஸாண்டரின் போதக ஆசிரியனாக நியமிக்கப்பட்டான். ஆகவே, அரிஸ்டாட்டல் அடிமைத்தனத்தையும், அரசர்களையும் ஆதரித்தான்.

இயற்கையான ஒரு சரித்திரம் எழுதியவன் அரிஸ்டாட்டில்! இவனுக்கு முன் பலர் எழுத முன்வந்தனர். ஆனால் அவர்களால் இக்காரியம் கைகூடவில்லை. அரிஸ்டாட்டில் இயற்கையைப் பாகுபடுத்தி, அவைகளை ஒன்றுக்கொன்று ஒப்பிட்டு விளக்கினான்.

நாம் வாழ்க்கையைக் கடைப்பிடித்து அதைத் திருத்தி அமைப்போம் என்ற பிளேட்டோவின் கருத்திற்கெதிராக நாம் முதலில் வாழ்க்கையை நன்றாக அறிந்து கொள்வோம். அதனிடைக் காலத்தில் வேந்தனுக்குத் தொண்டு செய்து அவனைப் புகழ்வோம் என்ற கருத்தை வெளியிட்டான்.

ஒரு காலத்தில் ஆசியாவிலும், கிரேக்க நாட்டிலும் ஆயிரக்கணக்கானவர் அரிஸ்டாட்டிலின் இயற்கை சரித்திரத்திற்காக விஷயதானங்களைத் தேடினார்கள் உண்மையிலேயே இவர்கள் கதைகளைத்தான் சேகரித்தார்கள். ஆயினும் இதைப் போன்ற தொரு நிகழ்ச்சியை அதுவரை சரித்திரம் கண்டதில்லை. இயற்கை விஞ்ஞானமும் அரசியல் தத்துவங்களும் தோன்றலாயின. லிசியம் கல்விச்சாலை மாணவர்கள் நூற்று ஐம்பத்து எட்டு அரசியல் தத்துவங்களை ஆராய்ந்தார்கள்...இக் கல்விச் சாலை அரிஸ்டாட்டலின் மரணத்திற்குப் பின் ஐம்பது ஆண்டுகளே நிலைத்து நின்றது.

மகிழ்ச்சி, மேன்மை, நீதி, அறிவின் தூய்மை, இன்பம், விவேகம், தோழமை, முதலியவற்றைப் பற்றி நீதி நூல் விளக்கம் தருகின்றது. விஞ்ஞானம், ஆன்ம தத்துவம், மனோதத்துவம் தர்க்க சாஸ்திரம், நீதி முதலியவற்றில் அரிஸ்டாட்டில் சிறந்து விளங்கினான். அவனது பெரும்பான்மையான உபதேசங்களும், புத்தகங்களும் நமது இந்த நூற்றாண்டிற்கு மிகவும் ஏற்றதாகும்.

அனக்ரியானைப் போன்ற சாகித்ய கர்த்தாக்களையும், பிதகோரஸைப் போன்ற விஞ்ஞானிகளையும், டெமஸ்தனிஸைப் போன்ற சொற்பொழிவாளர்களையும் கிரேக்கம் நமக்குத் தந்தது.

கொரியோலனஸ், ஜூலியஸ் சீஸர் முதலியவற்றை இயற்றின பிளாட்டார்க் கிரேக்க நாட்டிலே புகழ் பெற்றான். இவனது நாடகங்களைத்தான் ஷேக்ஸ்பியர் கையாண்டார். ஷேக்ஸ்பியருக்குக் கிடைத்த பெருமையில் பிளாட்டார்க்கிற்கும் முக்கிய பங்கு உண்டு.

●

புறப்படுவோம் பஞ்சாப்!

"திருவேடம்"

நண்பர் திருவேடம் அவர்கள் திராவிட நாட்டின் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவராக உருவாகி வருகிறார் என்பதை அவரது கட்டுரைகளை வாரந்தோறும் சுவைத்துவரும் 'திராவிடன்' வாசகர்கள் நன்கு அறிவர். நண்பர் திருவேடம் அவர்கள், திராவிடன் வாசகர்களில் பெரும்பாலோர் கடித மூலம் விரும்பியவாறு, 'புறப்படுவோம் பஞ்சாப்' என்னும் இக்கட்டுரையைத் திராவிடன் 9-ம் ஆண்டு பயணத் துவக்கத்தோடு துணையாய்ச் சேர்த்து தொடர்ந்து நடைபோட முற்பட்டுள்ளார்.

'திராவிடன்' வாசகர்கள் இக்கட்டுரையின் வாயிலாகக் கிடைக்கும் அரசியல் அனுபவங்களை வாரந்தோறும் அறிந்து சிந்திக்க வேண்டுகிறோம்.

—ஆசிரியர் : திராவிடன்.

"எண்ணற்ற அன்பர்களிடமிருந்து, 'திராவிடனி'ல் வெளியான (1) 'பஞ்சாப் செலவு!' என்னும் கட்டுரை, (2) யார் இவர்?' என்ற தலைப்பின்கீழ் காட்சி அளித்த உருவப்படம், (3) 'சாதிக்குச் சவக்குழி!' என்ற கட்டுரை, ஆகியவைகளைக் கண்டு வியந்து பாராட்டி, பஞ்சாப் தோழரைப்பற்றி அறிய விரும்பி கடிதக் குவியல்கள் வந்துள்ளன—தாங்கள் பஞ்சாப் தோழரைப்பற்றி எழுதலாம்"—என்ற அன்பு மடலொன்று 'திராவிடன்' ஆசிரியரிடம் இருந்து வந்தது. மகிழ்ச்சிப் பெருக்குற்றேன்! அன்புகெழுமிய ஆசிரியருக்கும் அன்பர்களுக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டு "பஞ்சாப் தோழரை"ப்பற்றி எழுதப் புகுகிறேன்! சரி! இங்கிருந்து புறப்படுவோம்!

நமஸ்தே ஜீ! தும் கஹாங் ஜாதே ஹோ? முஜே புரானீ பாஸீ ஜானு ஹை! வஹ் ய ஹாங் ஸே தோ ஹஜார் மீல் பர் ஹை! அச்சா! அச்சா!......

இப்படிப்பட்ட துக்கடா இந்தியாவது பேசுகிற, பேசினால் புரிந்து கொள்ளுகிற அளவுக்கேனும் பழகிக் கொண்டு, சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனை விட்டுக் கிளம்பினால் டில்லி. டில்லியில் ரயில்மாறிச் சென்றால் ஜலந்தர் நகரம். மீண்டும் அங்கே ரயில் மாறி ஹோஷியார்பூர் நோக்கிப் பயணமாக வேண்டும்.

கிராமப் புறங்களின் அமைதியின் வடிவு! இயற்கை எழிலின், கண் கொள்ளாக் காட்சி! கண்ணுக் கெட்டியவரைப் பச்சைப் பசேலென்ற கோலத்துடன் துலங்கும் விளைநிலங்களின் செழிப்பு! வரப்புகளில் மேய்ந்து ஆடும் மயில்களின் கூட்டம்! நெளிந்து, வளைந்து ஓடும் சிற்றாறுகள்! பேராறுகள்! வெள்ளிக் கூறையோவென வியத்தகு பனிமலைத் தொடர்! சில்லென்று வீசுங்காற்று! மிதமாகக் காயும் வெயில்! எல்லாம் மெய்மறந்து இன்புறும் நிலை!......

அட! இப்போதான் ஜலந்தரைவிட்டோம்! அதற்குள்ளாகவா ஒரு மணி ஓடிவிட்டது! ஓ! இதுதான் ஹோஷியார்பூர்! டெர்மினஸ்ஸோ—ரயிற்றொடர் கோடியோ! சரி! ஹோஷியார்பூர் வந்துவிட்டோம்!

சென்னை ரயிலடிவரைப் பேசப் பேசப் பழகிய ஒட்டு இந்தி, வெட்டு இந்தி. கெட்ட இந்தி!... அதனோடு இந்த நான்கு நாட்களாக ரயில் பிரயாணத்தில் நெடுக காதில் அடிபட்டு அடிபட்டு புளித்துப் போன துண்டு இந்தி சொற்கள்!—எல்லாவற்றையும் நினைவிற்குக் கொண்டு வந்தவனாக ஹோஷியார்பூர் ஸ்டேஷனைவிட்டு வெளியே வந்தேன்.

இந்த பாழாய்ப்போன 'குதிரைக்காரன் மொழி' இந்தியோடே எப்படித்தான் மாரடிக்கப் போகிறோமோ என்ற கவலையும், பயமும் கப்பியவனாய் திசிலுற்ற போதிலும் ஆங்கிலத்தில் பி. ஏ. பட்டம் பெற்ற நமது பஞ்சாப் தோழரை மிகமிக நெருக்கத்தில் தானே கொண்டுள்ளோம். கிட்டத்தட்ட இரண்டாயிரம் மைல்களைத் தாண்டிவிட்டோம்! இன்னும் இரண்டு மைல் தூரந்தானே. எப்படியாவது சமாளித்துவிடலாம் என்ற தைரியம்மட்டும் இல்லாமலில்லை.

அப்பப்பா! என்ன கூச்சல்! போதுமே! மனுஷனை மெய்யாகவே பிடுங்கிவிடுகிறார்களே! பிச்சைக்காரர்கள் அல்ல! அது ரயிலோடு, டில்லியோடே போய்விட்டது என்று கூறலாம்! ஆனால் என்னைப் பிடுங்கியவர்கள் சைகிள் ரிக்ஷாவாலாக்கள்!

பாவம்! அத்தனை ஏக்கத்திற்கும் அலைச்சலுக்கும் காரணம் பாக்கிஸ்தான் பிரிக்கப்பட்டதால் உதிர்ந்த அகதிகளாம் அவர்கள், ஏழ்மையின் அடிமட்டத்தில் தத்தளிப்பவர்

சந்த்ரராம்—சாதியின் வைரி!

களாம். பார்க்கப் பரிதாபமாகத்தான் இருக்கிறது. ஆனால் அவர்கள் படுத்தும்பாடு சகிக்க முடிவதாயில்லை!

நானென்ன "திருட்டுப்பய—கோபால கிருஷ்ணனா?" ஏககாலத்திலே எல்லா வண்டியிலேயும் ஏறிச் சவாரி செய்ய? நான் ஒரு மனிதன் எனக்கு வேண்டியது ஒரே வண்டி. இருபது முப்பது வண்டி வாலாக்களும் ஓடி வந்தால் நானென்ன பண்ணக்கூடும்! இது அவர்களுக்கு விளங்குவதில்லை. விளங்கினாலும் திருப்திக் கொள்வதில்லை. எல்லாம் ஒற்றுமையின்மை. சுயநலம். பேராசை, என்றவாறெல்லாம் எனது எண்ணங்கள் தோன்றி எழுந்து கொண்டிருக்கும் போது எனது இரு கைகளையும் இப்பக்கம் பத்து பேரும் அப்பக்கம் பத்து பேருமாகப் பிடித்து இழுத்தனர். என் பேச்சிலேயும் பாவனையிலேயும் ஏதாவது தோழமை கொண்டாடி விட்டார்களோ என்று கூட நினைத்தேன்.

அப்போதிருந்த எனது தோற்றம், காலில் கருப்பு பூட்ஸ், காக்கி பேண்ட்; காக்கி நிறக் கம்பளி மிலிடெரி ஓவர்கோட் (கம்பிளி இன்றி அங்கு குளிர் தாங்குவது கடினம் கடினமே), தலையில் காக்கி ஹேட்டு கையில் சிகரெட் 'நேவிகட்' டின், வாயில் சிகரெட்டைச் செருகிப் பிடிக்கும் தந்தக் குழாய் சுருள் சுருளாகப் புகை! இத்தோற்றத்துடன் இருந்த என்னை ஒரு மிலிடெரி ஆபீஸரோ என்று நினைத்துப் பயப்படுவார்கள் எனக் கணக்குப் போட்டேன்! பள்ளிப் பருவத்தில் அடிக்கடி தப்புக் கணக்குப் போட்டு சுன்னம் வாங்கி பழகியதைப் போன்று, இந்த எனது மிலிடெரி ஆபீஸர் கணக்கும்தப்பு! தப்பாகவே போய்விட்டது!

மிலிடரி — ஸ்டார்கள், பாட்ஜுகள் இன்னும் மற்ற மற்ற ஒட்டுச் சரக்குகள் இல்லாததைக்கண்டு கொண்டதாலோ, அல்லது பட்டாளத்திற்கு வேண்டிய உடற்கட்டு இல்லை—ஊதினால் உருண்டு விழுந்து எழுவார்—என்று எடை போட்டுவிட்டதினாலோ என்னவோ — என்னைக் கண்ட மாத்திரத்திலேயே ஓ! மத்ராஸீ! ஆவோஜி! என்று கத்தியவாறே என்னை மொய்த்துப் பிய்த்து விட்டார்கள்!

இது ஏதடா! மகா தொந்தரவாப் போச்சுது! என்று அவர்களை உதறிவிட்டு —காடியும் வேண்டாம் மாடியும் வேண்டாம்—எனக்கு 'ரஸ்தா மாலும் ஹை'—'காடிருக்கோ' 'தூர்சலோ' என்று கடிந்துவிட்டு அவ்விடத்தைவிட்டு நகர முற்பட்டேன்!

விடுவார்களா? 'மேரா காடி அச்சிஹை ஜீ! பைடோஜீ! ஆவோஜீ! கஹாங் ஜாதே ஹோஜீ! போலோஜீ!...ஆமாம்! ஹோஜீ!—லோஜீ! போங்கடா! என்று சொல்லிவிட்டு சற்று தூரம் நடந்து போகலானேன்.

நல்லவேளை எல்லோரும் என்னைப் பின் தொடரவில்லை! ஒருவன் மட்டும் விடாது ஆவோ ஜீ! மேரா காடிமே சலோஜீ! என்று 'ஜபம்' பண்ணிக் கொண்டே வந்தான்,

ஒருவன்தானே சமாளிப்பது சுலபம் என்றெண்ணி, அவனது சைகிள் ரிக்ஷாவில் பையையும், பெட்டியையும் வைத்துவிட்டு கூலிபேச முற்பட்டேன்.

எங்கே போக வேண்டுமென்று இந்தியில் கேட்டானவன்.

மு ஜே புரானீபாஸீ ஜானுஹை என்று ரொம்ப தீர்ந்தவன் மாதிரி இந்தியில் பதில் சொன்னேன்.

தோ ருப்யா தேவோ ஜீ என்று கேட்டான். (இரண்டு ரூபாய் கூலியாம்)

புரானீ பாஸீ ய்ஹாங் ஸே ஸிர்ஃப் தோ மீல் பர் ஹை! தோ ருப்யா பஹுத் ஜ்யாதா ஹை! அப் கித்னு லோகே? என்று அப்படியே இந்தியில் மூழ்கி எழுந்தவன் மாதிரி வீரப்பாய் சொன்னேன். (போடா போ!—இரண்டு ரூபாய் அதிகம்! இரண்டு மைல்தானே புரானிபாசி! சரியா கேள்! எவ்வளவு வேண்டும்?) என்று கேட்டேன்.

ஏக் ருப்யா பாரஹ் அனு தேவோஜீ என்றான். (ஒன்றே முக்கால் ரூபாயாம்).

பஹுத் ஜ்யாதா. ஏக் ருப்யா சார் அனே தூங்கா என்றேன். (அதிகமாய் கேட்கிறாய், ஒன்றே கால் ரூபாய் தருகிறேன் என்றேன்)

ஏக் ருப்யா ஆட்டனு என்றான். (ஒன்றரை ரூபாயாம்)

சரி! போய்த் தொலையடா! அதற்கு மேல் ஹிந்தியும் தெரியாது! இவ்வளவு தூரம் உளவு கற்றுக் கொடுத்தவர் (கடித மூலந்தான்) எனதருமை பஞ்சாப் தோழரே யாவர்! அதற்கு இரண்டு மூன்று நாட்களாக இந்தி ஒத்திகை நடத்திக் கற்றுக் கொடுத்தவர்—சென்னை பல்கலைக்கழகத்து (பஞ்சாப் தோழருக்கு நண்பரான) ஹிந்தி பேராசிரியர் ஒருவருமாவார்!

இரண்டு பர்லாங் சென்றிருப்பேன்! அதற்குள் ஒருவர் வழி மறித்து ஏ! ரிக்ஷா

வாவா! கடோ! என்ருர்!

யாரடா? இந்தப் புதுப்பிடுங்கல் வண்டியை நிறுத்துகிறது! ஆபத்தோ!—என வெருண்டு விழிப்பதற்குள் :

ஜீ! கியா தும் "திருவேடம்" ஹை? (நீங்கள் தானே "திருவேடம்" என்று கேட்டார்)

ஓ! இவர், நம் பஞ்சாப் தோழரால், என்னை ஹோஷியார்பூர் ரயில்வே ஸ்டேஷனிலேயே சந்தித்து என்னை சௌகரியமாக அவரிடம் சேர்ப்பிப்பதற்காக அனுப்பப்பட்ட வரவேற்புத் தூதர் என்று உணர்ந்தவாறே, ஜீ ஹாங்! (ஆமாம் ஐயா) என்றேன்.

நான் இந்தியில் பதில் சொன்னதுதான் தாமதம்—பௌஙந்தாரு சரமாரியா இந்தி—இந்தி—பளார்! பளார்! என்று அவர் பாட்டிற்கு பொழிந்து தள்ளுகிருர்!

கொஞ்சம் பேசுவதை நிறுத்தச் சொல்லிவிட்டு I am sorry sir! I do not know Hindi! Please talk in English.—என்றேன்.

அவரும் ஆங்கிலம் பேசினுர். அவர் இண்டர் படித்து முடித்தவராம்! அப்போது போட்டேன் இந்திக்கு ஒரு முழுக்கு! அதிலிருந்து ஆங்கிலம் என்னைக் காப்பாற்றிற்று. துணை நின்றது! எனக்கு மிகமிகச் சிறப்பான அந்தஸ்தையும் தேடித் தந்தது! அங்கே நான் ஒன்று அனுபவ ரீதியாக உணர்ந்தது — தென்னுட்டு இங்கிலீஷ்கிட்டே வடநாட்டு இங்கிலீஷ் பல்லுடைபட்டுப் போம்!—தென்னுட்டுக் கல்வியறிவு இந்தியாவிலேயே தனிதனிதான்! என் 'ஒன்னே காலணு' இங்கிலீஷுக்கு அப்படியென்ருல் நம்ப அறிஞர் இராமசாமி இலக்குமணசாமி போன்ருரின் இங்கிலீஷ் கிட்ட எதிர்நிற்க முடியுமா? — இப்படியெல்லாம் எண்ணியவாறே நான் சைகிள் ரிக்ஷாவில் போய்க் கொண்டிருக்க, என்னை வழியில் வரவேற்க வந்த தூதுவத் தோழர் சைகிளில் எனக்கு முன்பு மிதித்துச் சென்று கொண்டிருந்தார்.

அவர் ஒருசந்து தெருமுனையில் இறங்கி நின்றுவிட்டார். அதற்குமேல் சைகிளே போகாதென்ருல் சைகிள் ரிக்ஷா எப்படிப் போகும்?

குக்கிராமம் என்ருல் அதுதான் குக்கிராமம்! நாங்கள் இவ்வளவு தூரம் வந்த வழியே—மேடுபள்ளம், வயல், வயக்காடு சேறு, சகதி! அப்பப்பா! ரிக்ஷா கூலி ஒன்றரை ரூபாயாம்! அது 'உரை' போடக்கூடக் காணுது — (திருநெல்வேலி மொழிவழக்கப்படி)—ஐந்து முழு ரூபாய் கொடுக்கலாம்!

இறங்கிவிட்டேன். சில பையன்களும், பெண்களுமாக ஓடிவந்து எனது பெட்டி, பை, கழற்றிவிட்ட ஓவர்கோட், எல்லாவற்றையும் அன்போடும் ஆர்வத்தோடும் ... ளுக்கு ஒருவராக சுமந்து விளையாடி ஓடினர்கள்! எல்லாம் பஞ்சாப் தோழரின் பேரப்பிள்ளைகளும், பேத்தி மகள்களுமாம் அவர்கள்.

புரானிபாசியிலுள்ள நூறு குடும்பங்களில் தொண்ணூறு குடும்பங்கள் பஞ்சாப் தோழரின் சொந்தக் குடும்பங்களாம்! பெருங் குடும்பம்! புராதன குடும்ப பரம்பரையினராம் அவர்கள்!

சந்து, முக்கு, முடுக்குகளெல்லாம் ...டி வேருெரு சந்து முனையில் நுழைந்தோம். அதுவரை என்னை வேடிக்கைப் ...த்தனர் வீட்டிற்கு வீடு பத்து எட்டு ...ர்கள்!

எனது பார்வை ஒரு வீட்டின் பக்கம் ...பிற்று.

இதுவரை படத்தில் கண்ட பஞ்சாப் ...ர்!—தோழரா அவர்!—பஞ்சாப் முதி... அதோ! கண்மேல் கைக்குடையிட்டு மங்கலான பார்வையில் பார்க்கிருரே! அவர்தான் சந்த்ராம்! சந்த்ராம்!

உண்மையிலேயே என்னை மறந்தும் ஓடினேன்!

ஆ! சந்த்ராம் ஜீ! நமஸ்தே ஜீ! என்று கை கூப்பினேன். அவரும் நமஸ்தே கூறி முடித்து நீட்டிய கரத்தைக் குலுக்கினேன். இங்கிலீஷ் வார்த்தைகள் நெகிழ்ந்து வழிந்தன. என்னை அவர் இறுக அணைத்துக் கட்டித் தழுவிக் கொண்டார்.

'திர்...வே...டம்'......'திர்...வே...டம்' எத்தனை தூரத்திலிருந்து—தென்கோடியிலிருந்து வடகோடிக்கு, இந்த 'வயோதிகனை,க் காண வேண்டுமென்று ஒரே கவலைகொண்டு வந்திட்டாயே—உனது ஆர்வமே ஆர்வம்! அன்பே அன்பு! துணிச்சலே துணிச்சல்! நான் மிக்க மகிழ்ச்சியுறுகிறேன். பூரித்துப் பூத்துப் போகிறேன். சரி உட்காருவோம் வா! என்ருர்.

சற்று நேரம் பேச்சற்று மெய்மறந்த நிலையுற்ருேம்.

அவரைக் கண்ட இன்பத்தில் திளைத்து அயர்ந்து அமர்ந்திருந்தேன்.

தூத்! பீவோஜீ! என்று அன்பொழுகக் கூறி என்னை விளித்தார் சுந்தர்பாய் பாட்டி! சந்த்ராம் அவர்களின் கலப்புமண, கன்னி விதவை மண,—மனைவி!

விழிப்புற்றவனுய், சுயஉணர்வு திரும்பப் பெற்று பாலை வாங்கி யுண்டேன்! உரையாடினேன்! பெரியாரைப் பற்றிப் பேசினேன்! அறிஞர் அண்ணுவைப் பற்றிப் பேசினேன்! காமராஜரைப் பற்றிப் பேசினேன், அகமகிழ்ந்து போனுர்! எப்படி என்பதை அடுத்த கட்டுரையில் காணலாம்!

★

கம்யூனிஸ்டுகளைப்பற்றி...

மனதிற்குள் சிரியுங்கள்!

●

"தோழர்களே! இன்று நம் நாட்டில் உணவு போன்ற பல அத்தியாவசியமான பொருள்கள் யாவும் மிக சரசமான விலையில் கிடைக்கின்றன. இது கம்யூனிஸ்ட் கட்சியின் மகத்தான சாதனை! மகத்தான வெற்றி..." என்று கம்யூனிஸ்டு நாடான ஹங்கேரியாவில், ஓர் பிரசாரப் பொதுக் கூட்டத்தில் கம்யூனிஸ்டு பேச்சாளர் ஒருவர் மிக மகிழ்ச்சியோடு பேசிக் கொண்டிருந்தார். அப்போது கூட்டத்தில் ஒருவர் அடிக்கடி தலையாட்டிக் கொண்டிருந்தார். பேச்சாளருக்கு அது 'என்னவோ' போலிருந்தது; உடனே அவரைப் பார்த்து, "ஏன் தோழரே, நீர் அப்படி தலையாட்டிக் கொண்டிருக்கிறீர்?' என்று கேட்டார். அதற்கு அவர் 'இன்று மார்க்கெட் முழுவதும் அலைந்துத் திரிந்தேன், எந்த பொருளும் கிடைக்கவில்லை; கிடைத்தாலும் என்றுமே இல்லாதபடி அதிகவிலை சொல்லுகிருர்கள்' என்ருர். உடனே அந்தக் கம்யூனிஸ்டுப் பேச்சாளர் கீழ்கண்டவாறு அவரிடம் சொன்னுர்.

'இதுவும் கம்யூனிஸ்டு கட்சிக்கு ஓர் மகத்தான வெற்றிதான்! ஏனென்ருல் அப்போதுதானே நீர் அடிக்கடி மார்க்கெட்டுக்குச் சென்று காலத்தை வீணுக்காமல் நம் கட்சிப் பத்திரிகையை நாளெல்லாம் படித்து இன்னும் நன்ருக நம் கட்சியின் கொள்கைகளை சரிவர புரிந்துக் கொள்வீர்? அதனுல் தான் தெரிகிறதா நான் சொல்வது? எங்கே கம்யூனிஸ்ட் கட்சிக்கு 'ஜே' போடுங்கள்..."

✱

அதே ஹங்கேரிய நாட்டுச் சிறைச்சாலை யொன்றில் மூன்று கைதிகள் தாங்கள் அங்கு வந்ததிற்கான காரணங்களை ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ள ஆரம்பித்தார்கள்: 'இமிர் நாகே தெரியுமா உனக்கு? அந்த இமிர் நாகேயின் கொள்கைகளை எதிர்த்தக் காரணத்திற்காகத்தான் நான் இங்கு வந்து சேரும்படியாயிற்று' என்ருன் முதல் கைதி. 'அதே இமிர் நாகேயின் கொள்கைகளை ஆதரித்த காரணத்திற்காகத்தான் நான் இங்கு வந்து சேர்ந்தேன்' என்ருன் இரண்டாவது கைதி. மூன்ருவது கைதி அப்போதுதான் அங்கு வந்து சேர்ந்தவன்; அவன் என்ன சொல்லப் போகிருன் என்று அந்த இரண்டு கைதிகளும் ஆவலுடன் அவனை திரும்பிப் பார்த்தார்கள். அந்த மூன்ருவது கைதி சாவதானமாக சொன்னுன். 'நான்தான் இமிர் நாகே!'

✱

புடாபெஸ்ட் நகரத்தில், கம்யூனிஸ்டுப் பேச்சாளர் ஒருவரிடத்தில் கம்யூனிஸ்டுகளுக்கும் முதலாளிகளுக்கும் உள்ள வேற்றுமைகளைப் பற்றி ஓர் மாணவன் விளக்கம் கேட்டான், அதற்கு அந்தக் கம்யூனிஸ்டுப் பேச்சாளர் மெல்ல சிரித்தவாறு, "வேற்றுமையை விளக்குவது மிக மிக சுலபம்! சுருக்கமாகச் சொல்லப்போனுல், முதலாளிகள் பணத்தை மட்டும் காதலிக்கிருர்கள்; கம்யூனிஸ்டுகளோ மனிதத் தன்மையைக் காதலிக்கிருர்கள்" என்ருர். அவர் விளக்கத்தைக் கேட்ட அந்த மாணவன் சிறிது நேரம் யோசித்து விட்டு கீழ்கண்டவாறு துள்ளி குதித்தப்படி கேட்டான்.

"ஓஹோ! அப்படியா விஷயம்? இப்போதுதான் எனக்குப் புரிகிறது! அதற்காகதானு முதலாளிக்ள் பணத்தைப் பெட்டியில் பூட்டி வைக்கிருர்கள்?"

"ஆமாம்..." என்ருர் தோழர் மகிழ்ச்சியோடு. "அப்போது கம்யூளிஸ்டுகள் மக்களை சிறையில் பூட்டி வைப்பதும் அதே காரணத்திற்காகத்தானு?" என்று கேட்டான் மாணவன்.

✱

கம்யூனிஸ்டு நாடான ருமேனியாவில் கட்சியில் புதியதாகச் சேரும் உறுப்பினர்களுக்குக் கொள்கைகளை சரிவர உணரச் செய்து அதற்கேற்ற முறையில் அவர்களை நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதென்பது மிகவும் சிரமமான காரியமாக இருக்கவே, கம்யூனிஸ்டு கட்சி கீழ்கண்டவாறு தங்கள் தோழர்களுக்கு ஓர் அறிக்கையை வெளியிட்டது.

யார் ஒரு புதிய உறுப்பினரை கட்சியின் கொள்கைகளுக் கேற்ற முறையில் நடவடிக்கைகளில் ஈடு படுத்துவதில் வெற்றியடைகிருர்களோ, அவர்களுக்கு — கட்சி நடத்தும் கூட்டங்களுக்கு வரத் தவறினுல் மன்னிப்பு அளிக்கப்படும்.

யார் இரண்டு புதிய உறுப்பினர்களை கட்சியின் கொள்கைகளுக்கேற்ற முறையில் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதில் வெற்றியடைகிருர்களோ, அவர்களுக்கு—கட்சியிலிருந்து இராஜினுமா செய்வதற்கு சம்மதம் அளிக்கப்படும்.

யார் மூன்று புதிய உறுப்பினர்களை கட்சியின் கொள்கைகளுக்கேற்ற முறையில் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதில் வெற்றியடைகிருர்களோ, அவர்களுக்கு — கட்சிக்கும் அவர்களுக்கும் இனி எந்தவிதமான சம்பந்தமும் இல்லையென்று ஓர் உத்திரவாத பத்திரம் கட்டாயமாக அளிக்கப்படும்.

—சேந்திரன்

●

திராவிடப் பூங்கா

"வந்தைவேள்"

இன்று நமக்கெல்லாம் மகிழ்ச்சிக்குரிய நாள்! 'திராவிடனு'க்கு ஒன்பதாவது பிறந்த நாள்!

இவ்வெட்டாண்டு காலமாக 'திராவிடன்' ஆற்றிவந்த நெடும்பணி அளப்பற்கு அரிது!

எட்டு வயது நிறம்பி ஒன்பதாவது வயதில் அடி வைக்கும் 'திராவிடப் பாலகனுக்கு' வணக்கங் கூறுவோம்! நல்வாழ்த்து வழங்குவோம்! வையமுள்ளளவும் நீ தழைத்து வளர்க என நெஞ்சார வாழ்த்துவோம்!

'திராவிடன்' நீடூழி வாழ்க!

மனித வர்க்கத்தில் குழந்தை பிறக்கிறது. அது பிறக்கும் போதே அறிவு நிறைந்ததாய் அமைவதில்லை. மண்ணில் தவழ்ந்து வளர்ந்து, ஆடிப்பாடி, கூடிப்பழகி, மனிதன் என்ற நிலையுறும்போதுதான் அறிவைத் திரட்டி, அறிவு இருப்பதாகக் காட்டிக் கொள்கிறான்.

ஆனால் பத்திரிகைப் பிறப்புகள் அவ்வாறல்ல. முதல் இதழாகப் பிறக்கும் போதே தன்னகத்து அடக்க முடியா அறிவை அடக்கிக் கொண்டு பிறருக்கு அறிவு புகட்டிடும் பணியில் ஈடுபட்டு விடுகிறது! அற்புதமான அரிய பெரிய சாதனைகளைச் சாதித்து தீய ஒழுக்கால் தவித்திடும் நாட்டையே ஏன், அவனியையே ஆட்டிப் படைத்து சீர்திருத்த முற்படுகிறது! வெற்றி முரசுங் கொட்டுகிறது!

அம்முறைப்படி நோக்குழி, நமது அருமை 'திராவிடன்' இதுநாள் வரை நமது ஒப்பற்றப் பாதுகாவலனாகவும், உணர்வால் உந்தப்பட்ட உறுதியாளனாகவும், அறிவின் ஊற்றாகவும், பகுத்தறிவுப் பிழம்பாகவும், சீர்திருத்தச் செம்மலாகவும் அரசியல் ஆசானாகவும் விளங்கி திராவிட இன மக்களாகிய நம்மையெல்லாம் வைர உள்ளங் கொள்பவர்களாக ஆக்கி வைத்தான்! மாற்றாருக்கு மதியூட்டி வந்தான்! இனியும் எச்சோர்வு படாமலும் பணிபுரிவான் என்று பரிபூரணமாக நம்புவோமாக! கைம்மாறாக நாமும் அவனை அயராது ஆதரித்து வாழ வைப்போமாக!

முத்தமிழைப் போற்றி வளர்க்காது விடுவிப்பவனுமல்ல 'திராவிடன்'. இயல் இயம்பி செயல்வீரர்களைத் தோற்றுவிக்கிறான். இசை கூட்டி திசை காட்டுகிறான் நாடகம் வழங்கி நற்றிரு நாட்டை மீட்கப் புறப்படுகிறான். அப்பாதையை நோக்கியே தொடர்ந்து செல்கின்றானன்றோ நந்திராவிடன். அரசியல் சமுதாயம், பொருளாதாரம் ஆகிய துறைகளில் பக்குவமாகப் பணிபுரிகிறானன்றோ.

எனவே நம் கரத்தில் மட்டும் என்றல்லாது கருத்திலும் ஆழப்பதிந்து போன 'திராவிடன்' துவளாமலும், சளைக்காமலும் திராவிட நாட்டிலும் கடல் கடந்த தமிழர் வாழ் பகுதிகளிலும் பீடுநடை போட்டு, வீறுடனே பவனிவர, இனத்தால் ஒன்றிப் போன திராவிடர்களாகிய நாம் அனைவரும் ஒருங்குற்று ஊட்டமளிப்போம்' திராவிடனு'க்கு! ஆக்கம் பல புரிய ஊக்கங் கொடுப்போம்!

காளைப் பருவத்தை ஏற்கப்போகும் 'திராவிடனை' என்றென்றும் ஆதரிப்பதாக உளமார உறுதி பூணுவோம்!

வையமுள்ளளவும் வாழ்க நம் 'திராவிடன்!'

அறிமுகம்

'திராவிடனை' அறிமுகப்படுத்த வருவதாக நினைக்க வேண்டாம். 'திராவிடன்' நமக்கெல்லாம் புதியவனன்று. அவன் நமது உயிர்த் தோழன், மெய்க்காப்பாளன், அஞ்சாநெஞ்சன் என்பதெல்லாம் நாம் இந்த எட்டாண்டு காலமாக நன்கு அறிந்ததே

கடந்த பல 'திராவிடன்' வார ஏடுகளைக் காட்டி 'அப்போக்கில் எழுத நீங்கள் ஏன் முற்படக் கூடாது!' என்ற குரல் கேட்டது.

குரல் வந்த பக்கம் திரும்பினேன். அங்கே எனது இரு மெய்த் தோழர்களைக் கண்டு களிபேருவகை கொண்டேன். சரி அந்த பழைய ஏடுகளைக் கொடுங்கள் என்று புரட்டிப் பார்த்தேன்.

அம்மம்ம! இப்படியெல்லாம் எழுத எம்மால் முடியுமா என மிரண்டேன்!

ஏன் முடியாது? 'முயற்சி தன் மெய்வருந்தக் கூலிதரும்'—முயற்சி திருவினை யளிக்கும்—முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார்' என்று தேற்றினார்கள்.

சரி! தங்களது மேலான அறிவுரைக்கும், வேண்டுகோளுக்கும் இணங்கி எழுத முயற்சிக்கிறேன் என்றேன்! நம்கடன் 'திராவிடனு'க்குப் பணி செய்து கிடத்தலாகவே அமையட்டும் என்று தீர்மானித்தேன்.

இவ்வளவும் நிகழ்ந்தது ஒரு 'பூங்கா'வில்தான். அங்குதான் அமைதி நாடிச் செல்வது; அன்பர்களுடன் உரையாடுவது; ஆழ்ந்து சிந்திப்பது; படிப்பது; எழுதுவது எல்லாம். சரி நமக்கு மிகமிகப் பிடித்தமாக அமைந்தது பூங்கா! பூங்காவே! அப்பூங்காவிலேயே இருப்போமே என்றுகூட எண்ணியதுண்டு. அவ்வெண்ணத்தின் உருவகமே இப்பதிக்கு தலைப்பாய் அமைந்தது **'திராவிடப் பூங்கா!'**

''திராவிடப் பூங்கா''வில் இயன்ற அளவு எழுதித் தீர்ப்போமே! எண்ணமும், எழுத்தும், எதற்குற்றான் இருக்கின்றன! திராவிட நாட்டின் நலத்திற்கும், திராவிடர்களின் மேன்மைக்கும், ஒற்றுமைக்கும், பயன் படட்டுமே அந்த எண்ணமும், எழுத்தும் என்று துணிந்தவனாய் ''திராவிடப் பூங்கா''வைச் செப்பனிட்டு 'திராவிடனு'க்கு உழைப்போமே என வந்தேன்.

இப்படியாகத் தோன்றிய இத் ''திராவிடப் பூங்கா''வை, திராவிடனது ஒன்பதாவது பிறந்தத் தின விழாவாகிய இந் நந்நாளில் உங்களுக்கு அறிமுகப்படுத்திக் கொள்கிறேன்.

அழைப்பு

திராவிட அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறேன். வாருங்கள் கூடிப்பேசுவோம். நமது 'திராவிடனை'யே பொது அரங்காகக் கொள்வோம். அங்கே உறுதி உள்ளம் பூணுவோம். கொள்கை பல பேசுவோம் பகுத்தறிவு ஏற்போம். அதை வாழ்க்கையில் நடைமுறையில் கையாள உள்ளம் உரம் பெறுவோம் சீர்திருத்தம் பேசுவோம். செயல்படுத்திக் காட்டத் துணிபு உள்ளம் எய்துவோம். அரசியல் பேசிடுவோம், திராவிட நாட்டை மீட்க விளக்கம் காண்போம். பொருளாதாரம் பேசுவோம். ஏழை என்றும் அடிமை என்றும் எவருமில்லை நம் நாட்டிலே என்பதற்கான வழி வகைச் செய்வோம். சமுதாயச் சிக்கல்களை அறுத்திடுவோம் மாக்களை மக்களாக ஆக்கப்பணி செய்வோம் ஏய்க்க வந்த மதத்தை மாய்த்து. உயர் வாழ்வுக் குற்ற உண்மை நெறி கண்டிடுவோம். அரங்காக அமைந்த "திராவிடன்" இப்பணிகளுக்கெல்லாம் உற்ற இடம் எனவே வாருங்கள் அங்கேகூடிச் சிந்திப்போம்—சீரடைவோம் என அழைக்கிறேன். ஆனால் கட்சி பேசி நாம் கலந்திடுதல் கூடாது. ஒற்றுமையே வலிமை!

வேண்டுகோள்

திராவிட இயக்கந்தோன்றி பல வாறுகச் செழித்து தழைத்தோங்கி விளங்கி நிற்கும் இன்றைய வரை நாம் கண்ட வெற்றிகளும், மாற்றங்களும் எழுச்சிகளும் பலப்பல. அவைகளில் முக்கியமாக யான் ஈண்டு குறிப்பிட விரும்புவது ஒன்று. அதுதான் எழுத்துப் புரட்சி! யாவராலும் போட்டி போடமுடியாத புரட்சி எழுததாளர் உலகத்தை தோற்றுவித்தது. திராவிடர்களை விழிப்புறச் செய்தது. மாற்றாரை மருளச் செய்தது. ஆட்சியாளர் கவனத்தையும் ஈர்க்கச் செய்தது.

அப்படிப்பட்ட திராவிட எழுத்தாளர் உலகமானது இன்று அறிஞர் அண்ணா அவர்கள் கோருகிற 'கண்ணியம், கட்டுப்பாடு. கடமை' ஆகியவைகளில் கண்ணுங் கருத்துமாய் நின்று பணியாற்ற மேலும் ஒழுங்குமுறை நிலைபெற வேண்டும்,

திராவிட எழுத்தாளர் சங்கத்தைத் தோற்றுவித்தாகிலும் ஆவன செய்ய வேண்டுமென்று எழுத்தாளத் தோழர்களை — பெரியவர்களை பணிவன்புடன் வேண்டுகிறேன். இதைப்பற்றி அன்பர்கள் அபிப்பிராயம் வழங்கவும் வேண்டுகிறேன்.

வணக்கம்.

திரண்டு வாரீர்

ப. தா. செல்வன்

பொதுமக்கள் வாழ்வடைய
பொதுக்குழுதான் அழகுடனே
போடும் திட்டம்

புதுநிலையிற் காண்பதொடு
பூசலெலாம் நாட்டினிலே
போக்கும் வண்ணம்

உதயமுறு கதிரைப்போல்
உளமார்ந்து திரளுடனே
ஓடி வாரீர்

சிதறுண்ட நவமணிகள்
சேருதல்தான் திருநாட்டின்
சீர்ஆரம்ஆம்

தமிழணங்கைச் சிறையினிலே
தறுக்கர்கள் தள்ளுங்கால்
சகித்த தில்லை

தமிழ்மரபைக் காட்டிடவே
தாலமுத்து நடராசன்
சாவை ஏற்றார்

தமிழரெனச் சொல்வதில்
தயக்கத்தைக் கொள்ளாமல்
தலையை ஈந்து

தமிழ்மொழியைக் காத்தோம்நாம்
தாயகத்தைக் காத்திடுவோம்
சங்கம் காண்போம்

தீந்தமிழர் பாசறையாம்
திராவிடத்தின் நாயகமாம்
திருச்சி தன்னில்

ஏந்தல்களே! சிங்கங்காள்
இளையபுது வீரர்காள்!
எட்டுத் திக்கும்

காந்தமென இழுத்திடமே
கண்நொடியிற் களங்காண
கடுகி வெற்றி

மாந்திடவே கூடுங்கள்
மானில மா நாடெனவே
வாரும் வாரும்

அண்ணாவின் அறிவுரைகள்
அருஞ்செழியர் நெறியுரைகள்
ஆய்ந்து கேட்போம்

மண்ணிதில் வடவரதின்
வஞ்சனையை ஒழித்திடுவோம்
மானம் காப்போம்

கண்ணேரில் களங்கண்டு
காவிரியின் தீரத்தில்
கடமை ஆற்ற

திண்ணீரம் உடையீரே
திருச்சிமா நகர்நோக்கி
திரண்டு வாரீர்

பிள்ளையார் பேசுகிறார்!

அ. துரைராஜ்

ஏழை படும்பாடு. காதல் படும்பாடு முதலியவற்றைப் பற்றி நீங்கள் கேள்விப் பட்டிருப்பீர்கள். ஏழை படும்பாட்டை நாட்டில் அன்ருடம் பார்த்துக் கொண்டு வருகிறீர்கள். அதுபோல் காதல் படும் பாட்டையும் ஓரளவு நாட்டில் காணுகிறீர்கள். ஏன், நாவல்களிலும், கதைப் புத்தகங்களிலும் படிக்கிறீர்கள்; திரைப்படங்களிலும் பார்க்கிறீர்கள். ஆனல் பார்வதிபுத்திரனுகிய நான் (பிள்ளையார்) படும்பாடு உங்களில் பெரும்பான்மையோருக்குத் தெரியாது என்று கருதுகிறேன்.

அநேகமாக எல்லா ஊர்களிலும் வாய்க்கால் ஓரத்தில்தான் என்னை வைத்து வணங்குகின்றனர் என் பக்தர்கள். சில ஊர்களில் பெரிய கோவில் கட்டி அதற்குள் என்னை வைத்து காலையிலும் மாலையிலும் பூஜை செய்கிருர்கள். வேறு சில ஊர்களில் சிறு கோவிலாவது கட்டிக் கும்பிடுகிருர்கள். இன்னும் சில ஊர்களில் சிறு கோவில்கூடக் கட்டாமல் தெருக்களிலும் சாலைகளிலும் அனுதை போல் வைத்துவிடுகிருர்கள். இவ்வித சந்தர்ப்பத்தில்தான் எனக்கு மிகுந்த வேதனை ஏற்படுகிறது. கோடைக் காலத்தில் 110 டிகிரி உஷ்ணத்தைத் தாங்க வேண்டாமா? குளிர் காலம் வந்துவிட்டாலோ உடம்பை வாட்டும் கடுங்குளிர். இப்படியாக கோடையிலும் குளிரிலும் நான் படும்பாடு எனக்குத்தான் தெரியும்.

அதுமட்டுமா! சாலையின் வழியாகச் செல்லும் எருமைக் கன்றுக் குட்டிகள் தங்களுடைய உடலை என்மேல் தேய்த்து சோம்பலைப் போக்கிக் கொள்கின்றன. நாய்கள் மற்ற இடங்களையெல்லாம் விட்டுவிட்டு என் தலைமேல் வந்துதான் 'சிறுநீர் அபிஷேகம்' செய்கின்றன, நல்லவேளை, சில பெண்கள் குளித்துவீட்டு வரும்போது குடம் நிறையத் தண்ணீரை எடுத்து வந்து என்மேல் ஊற்றுகிருர்கள். அவர்கள் தண்ணீர் ஊற்ருவிட்டால் என்உடம்பிலுள்ள துர்நாற்றம் போகவே போகாது. நான் பிறந்ததே பார்வதி தேவியின் அழுக்கு உருண்டையிலிருந்து. அந்த அழுக்கே இன்னும் போகவில்லை. இந்த லட்சணத்தில் எருமையிலிருந்து பூனைவரை என் மீது உராய்ந்தால் என்னஆவது? (ஏற்கனவே மக்களுக்கு என் மீது உள்ள பக்தி குறைந்துகொண்டே வருகிறது இந்தத் திராவிட இயக்கத்தக்காரன்களுடைய பிரச்சாரத்தினுல்.) ஆகவே என்னைத் தினந்தோறும் சுத்தம் செய்யும் பெண்களுக்கு ஒரு 'தேங்ஸ்' சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்,

இந்த அப்பாவிப் பெண்களாவது என் மீது இவ்வளவு பக்தியாய் இருக்கிருர்கள், ஆனல் எனது தம்பி முருகனின் மனைவி தெய்வயானையோ, ஆசைநாயகி வள்ளியோ என்னை ஏறெடுத்துக் கூடப் பார்ப்பதில்லை. ஒரு வேளை அவர்கள் இந்த யானைமுகத்து அத்தானைப் பார்க்கக் கூடாதென்று சபதம் செய்து விட்டார்கள் போலும். இவர்களையெல்லாம் சொல்லி என்ன பயன்? என்னுடைய கூடப்பிறந்த சகோதரனே யாரோ எவரோ என்று என்னை அலட்சியப் படுத்துகிருனே. இதை யெல்லாம் நினைத்தால் கோபமும் வருத்தமும்தான் ஏற்படுகிறது.

இந்நிலையில் கோபத்தை மேலும் மேலும் தூண்டுகிருர்கள் என்னுடைய பக்தர்கள். உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன் கேளுங்கள். ஏதோ ஒரு ஊரில் நான் குடிகொண்டிருந்த கோவிலிலுள்ள சிலையை யாரோ தூக்கிக் கொண்டு போய் விட்டானும்! இதனுல் என் பக்தர்களுக்குக் கோபம் வந்து விட்டதாம்! கோபம் வந்து என்ன பயன்? என்னைக் கண்டவன் தூக்கிக் கொண்டு போகும் அளவுக்கு நாதியற்றவன்போல விட்டுவிட்டு பிறகு கோபம் கொள்வதில் அறிவுடைமை யிருக்க முடியுமோ? எனவே கையாலாகாத இந்த பக்தர்கள் சும்மா இருந்து தொலைக்கக் கூடாது? என்னுடைய சிலையைக் கொண்டுவந்து கொடுப்பவனுக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும் என்று விளம்பரப் படுத்தி யிருக்கின்றனர். இப்படி என்னை அவமானப் படுத்துவதைவிட சுயமரியாதைக்காரர்கள் சொல்வதுபோல் என்னுடைய சிலையைத் துண்டு துண்டாக உடைத்து ரோட்டிற்கு ஜல்லி போடலாமே. என்ன ஆச்சரியப் படுகிறீர்களா? என்னுடைய சிலையை நானே உடைக்கச் சொல்கிருனே என்று. இதை யெல்லாம் நானு பேசுகிறேன்? இந்தப் பக்தர்கள் செய்யும் காரியங்கள்தான் என்னை இப்படி பேசவைக்கிறது. அவ்வளவுமனக்கொதிப்பு அடைந்திருக்கிறேன் நான்.

அப்படியே, 'ஒரு சிலையை எவனே தூக்கிக் கொண்டு போய் விட்டால் தான் என்ன? புதிதாக என்னுடைய சிலை உள்ள கோவிலைத் திறந்து வைப்பதற்கு கம்யூனிஸ்ட் அனந்த நம்பியாரைப் போல் ஆட்கள் இல்லையா என்ன? இப்பொழுது, 'கம்பன் கண்ட தமிழக'த்தில் ஈடுபட்டிருக்கும் கம்யூனிஸ்டுகள் இன்னும் கொஞ்ச

22-ம் பக்கம்

நல்ல மனிதன்!

.... உருவகச் சித்திரம்............

காட்டினுள் சென்றேன்; கலகலப்பு சிரிப்புச் சிந்தி களங்கமற்று நின்றிருந்த பனைமரங்கள் என்னைப் பார்த்தன. மனிதனே! என்ன சேதி என்றது; பேட்டி காண வந்தேன் என்றேன். போட்டியிட்டுப் பொல்லாப்புச் செய்யும் மனிதனில் நீயும் ஒருவனல்லவா? என்றது, கோபப் படாதே; உன் கொள்கை என்ன என்றேன்! உனக்குத் தெரியாதா? தெரிந்தவரை சொல்லு; மற்றவற்றை நான் பூர்த்தி செய்கிறேன் என்றது.

கற்பகத் தருவே! தென்னகத்தின் திருவே! நின் பணியை எவ்வளவென்று சொல்லுவேன். பிறந்தநாள் முதல் இறந்துபடும் நாள்வரை இனியன பல செய்து இன்புறச் செய்கின்ருய்; தமிழ்க் குலத்தை! நிரந்தர நிழல் தர முடியாதவன் என்று உன்னை ஒரு சிலர் கூறுகின்றனர்! உன் ஒப்பற்ற சேவையை தேவை யென்றுணர முடியாத உப்பரிக்கையில் வாழும் உல்லாசிகள் கூறலாம்! அதற்காக கவலைப் படாதே கண்ணீர் விடாதே!

ஆகா மறந்துவிட்டேன்; நீ வடிக்கும் ஆனந்தக் கண்ணீரும் சாதாரணமானதல்லவே! சுவை பானமாயிற்றே! அருந்த அருந்த மகிழ்ச்சி தரும் அமுதமாயிற்றே! குடி கெடுக்கும் குடி தரும் கொடுமைக்காரன் என்றுனைத் தூற்றுகிருர்களே நீயா குடி கெடுப்பவன்? தீயினும் கொடியவர்கள் நாயினும் கேடாய் மாறுவதற்கு நீ வழங்கும் அமுத பானத்தை ஆகாத வழியில் பயன்படுத்தினுல், அதற்கு யார் என்ன செய்வர்?

பிறந்து வளரும் வயதிலேயே, பாசத்தோடும். பரிவோடும்—ஏழை மனிதனே! வெயிலிலும் மழையிலும் வீதியிலே படுத்துப் புரளும் பரிதாபத்துக்குரியவனே! என்னிடமுள்ள சிறகைத் தருகிறேன். அதனைப்பயன் படுத்திக்கொள், குடிசைக் கட்டியாவது வெயில் படாமல் மழைத் துளிகள் விழாமல் வேய்ந்து கொள். நீ பட்டினி கிடந்தாலும் வானமும் வானத்தின் கிரகங்களும் உன்னைப்பார்த்து பரிகாசம் செய்யாது என்று அன்புகலந்த ஆதரவு மொழி கூறுகின்ருய்! உன் அமுத நீரை ஆகும் வழியில் பயன் படுத்தினுல் எவரும் வாங்கிப்பயனுறும் கருப்புக் கட்டியாகி விடுகிருய்! கோடைப் பருவ காலத்தில் கொடைக்கானல் செல்ல முடியாத என் போன்றவர்க்கு நீ வழங்கும் காயினுள் விளையும் நுங்கு தித்திக்கும் தீனியல்லவா? உன் கனியின் இனிமையை என்னென்பேன்! எக்கனிக்கும் ஈடாகாத மணத்தையல்லவா பரப்புகிருய்! உன்னை முழுமையும் உலகத்துக்கு அர்ப்பணிக்கிருய், உன் உடலைப் பிளந்து உத்திரமாக்கினுலும் கட்டிய வீட்டின் கூரையைத் தாங்குகிருய் சற்றும் முணு முணுக்காமல்! உன் பெருந்தகைதான் என்ன?—பொதுத் தொண்டுக்கு உன்னையல்லவா உவமை கூற வேண்டும்! பாட்டாளிக்கு வேலை தரும் வண்ணம் வண்ணப் பெட்டிகளும்—படுத்துப் புரள பாய்களும் — காற்றின்றிப் புழுங்கும் வேளை மென் காற்று அள்ளித்தர விசிறிகளும்; உருவாக்க உன் கீற்ருலைகளை உதவுகிருய்! குவிந்து கிடக்கும் குப்பை கூளங்களை கூட்டித்தள்ள உன் ஈக்கில்களைத்தருகிருய்! உண்ணும் உணவை வேக்காடு செய்ய உன் கடைசித்துரும்பும் எரி பொருளாகிருய்!

நிறுத்து மனிதனே! என் வாழ்வின் கடைசி எல்லையில் சாயும் வரையில் பயனுள்ள பணி செய்கிறேனென புகழ்ந்து விட்டாய் வாயும் ஓயும் வரை! அது போதுமா? 'உன் இனத்தைப் பார்! தனக்கென வாழும் தருக்கரைச்சாடு என்னைக் காட்டு, நல்லறிவூட்டு!' ஒரு அறிவு கூறும் பாட்டு சொல்லுகிறேன் தீட்டு என்றது.

தாள் எடுத்தேன்; எழுதுகோலால் தீட்ட முனைந்தேன். பனைமரக் கூட்டம் சிரித்தது; ஏன் என்றேன்? அன்றுஎன் ஓலைதான்நீ வாழும் தமிழகத்தின் ஏடு! பெரும் புலவனுக்கெல்லாம் என் தயவு தேவை யிருந்தது என்றது. நன்றி மறந்து விடவில்லை நண்பனே! அழியாத புகழேடுகள் பலவற்றைப் பார்த்து மகிழ்ந்திருக்கிறேன். எத்திக்கும் புகழ் செழிக்கும் தித்திக்கும் தமிழில் அறிவுக் கருவூலமாம் திருக்குறளை வழங்கிய வள்ளுவர் நீ வழங்கிய ஓலையில்தானே! எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டாம்—உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு, என்பதையும் தீட்டியிருப்பார் என்றேன். சரி சரி எழுது என்றது. எழுதினேன்! அது இதோ!

பணம் திரட்டி பகை திரட்டி நாட்டகத்தே வாழும்
அவனல்ல நல்ல மனிதன்—காட்டகத்தே
வாழ்ந்தாலும் ஊட்டமுள்ள பணியாற்றும்
பனைமரமே நன்மனிதன்!

★

—கீழ்வைப்பாறு. மாறன்

●

சிகப்புக் கம்பளத்திலே சமாதானத் தூதுவர், வாழ்க! அவர் காசினி மெச்சிடும் அரசியல் சீலர், வாழ்க! யுத்த வல்லூறை விரட்டிய வீரர்! வெள்ளைப் புரு பறக்கவிட்ட நேசர்! அவர் நாமம் வாழ்க! இங்கும் வாழ்க! அங்கும் வாழ்க! எங்கும் வாழ்க! மாஸ்கோ தோழர் வாழ்க! வாஷிங்டன் பிரியர் வாழ்க! பாரத ஜாதி ஆசிய ஜோதி, அவர் காங்கிரஸ் தியாகி வாழ்க! என்றும் வாழ்க! பல்லாண்டு வாழ்க!

*

வாழ்த்துப்பா பாடினர், வரவேற்பு கூறினர், வகைவகையான வண்ணமலர் மாலைகள் சூடினர், ஆடினர், பாடினர் — காங்கிரஸ்காரர்கள் மட்டுமா! கம்யூனிஸ்ட் தோழர்கள் கூட அல்லவா பள்ளு பாடினர் அந்தச் சமாதான சீலருக்கு! அவர்கள் கூட அல்லவா குடம் கொளுத்தினர் அந்த வாஷிங்டன் பிரியருக்கு! எனவேதான் போலும் டில்லி மாமன்றத்திலே— தேசியத் தோழர்கள் உள்ளமெல்லாம் மகிழ்ச்சி வெள்ளம் பொங்க பொங்க எண்ணங்களிலெல்லாம் இன்பநாதம் ஓங்க ஓங்க அடிக்கடி சொல்லுவார்களே 'லோக்சபை' யென்று—அந்த லோக் சபையில், கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த புரபசர் ஹிரன்முகர்ஜிக்கும் ரேணுசக்ரவர்த்திக்கும் ஆசிரியராகி அவர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பதில் தீவிர கவனம் செலுத்தி யிருக்கிறார் பார்புகழும் பாரத சுந்தரர்—சமாதான தூதுவராம் நேரு பண்டிதரவர்கள்!

தீட்டி முடிக்கப்பட்ட ஓர் சிங்காரியின் சித்திரத்திலே குறை யிருப்பதனைக் கண்டு, அதைத் தீட்டிய சித்திரக்காரனுக்கு ஓவியக்கலையைப் பயில்விப்பதாக மனதிலே கொண்டு—தூரிகையைக் கரத்திலேந்திய ஒருவன், குறையை நீக்க முயன்று முடியாமற்போனது மட்டுமல்ல—அந்தச் சித்திரத்தையே

துக் கொள்! மார்ஷல் டிடோ அவர் முன்னால் ஓர் மாணவனைப்போல் நடந்துக் கொண்டார் என்பதையும் அறிந்துக் கொள்! இன்னும் கேளடா...' என்று மூச்சுக்கூட விட முடியாமல் பேசத் தோன்றும், கொதிக்கத் தோன்றும்—தேசியத் தோழர்களுக்கு!

பாவம்! கொதிக்கவும் சீறவும்தான் அவர்கள் கற்றுக் கொண்டிருக்கும் பாடம்! சிந்தனைச் செய்வதென்பது அவாகள் கூடாரத்தில் கற்றுத்தராத பாடங்களில் ஒன்று. காரணம் அவர்களுக்கு பாடத்தை போதிக்கும் ஆசிரியர்கள் மட்டுமல்ல அந்தப் பாடத்தையே ஸ்ருயற்றிடும் பேராசிரியர்களுக்குக் கூட சிந்தனை செய்யும் ஆற்றல் இல்லையென்று சொல்லி விடமாட்டோம்— அத்தகைய துடுக்குத்தனம் நம்மிடம் இல்லை—ஆனால் வேண்டுமென்றே சிந்தனை செய்யாதவர்களைப்போல நடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது மட்டும் உண்மை!

அதன் விளைவாகத்தானோ என்னவோ ஜெகம் போற்றும் அரசியல் சூரராம் நேரு பண்டிதர் பிற கட்சியினரின் கொள்கைகளை உலுத்துப் போனவைகள், உதிர்ந்த சரக்குகள் என்கிறார். அக்கட்சி தலைவர்களையும் தவறாக மதிப்பிடுகிறார், மதிப்பிட்டுக் கொள்ளட்டும் மனதிற்குள்ளேயே யாரும் கவலைப்படப் போவதில்லை! ஆனால் அந்தத் தவறான மதிப்பீட்டுக் கணக்கை வெளியேயும் கொட்டிவிடுகிறார்— கௌரவத்திற்காக மட்டுமல்ல, மாற்றுக் கட்சித் தோழர்களையும் மட்டந் தட்டிவிட்டோம் என்ற மனப்பான்மையோடும்—அதனால் ஏற்படும் சிறு மகிழ்ச்சியை ஆனந்தமாக அனுபவிக்கலாம் என்ற எண்ணத்தோடும்! சிறுமகிழ்ச்சி பெரியவருக்கு! ஒரு துளி ஆனந்தம் அந்த அகில உலக அரசியல் மேதைக்கு! அந்த ஆனந்தத்தை அனுபவிக்கக் கருதிதான் போலும் டில்லி மாமன்றத்திலே கம்யூனிஸ்ட் கட்சியினரான ஹிரன் முக்கர்ஜியையும் ரேணு சக்ரவர்த்தியையும் திருத்திருக்கிறார்—இல்லை திருத்த முயன்றிருக்கிறார். ஆசிரியராகியிருக்கிறார். ஆசிரியராகிக் கொள்ளட்டும்; ஆசிய ஜோதிக்கு

மாக இருக்கிறது! ஆமாம்! ஆச்சரியமாகதானிருக்கிறது.

நெஞ்சைக் கொள்ளைக் கொள்ளும் ஓர் வஞ்சிக்கொடி கண்கவரும் சொழுக் கொம்பனைக் காதலித்தால் ஆச்சரியப்படுவதிற்கில்லை! ஆனால் அந்த அழகு வல்லியே, கண்டாலே வாய் குமட்டும் ஓர் 'அழகு சொருபனை'க் காதலித்தால் கட்டாயம் ஆச்சரியம் பிறக்கத்தான் செய்யும்! நிலா முகத்தழகி, கோலக் குயிலின் பூபாளக் குரலினைக் கேட்க ஆவலுற்றால் ஆச்சரியப் படுவதிற்கில்லை! ஆனால் அந்த இசை ரசிகையே கோட்டானின் அலறலைக் கேட்க ஆசைப்பட்டால் ஆச்சர்யம் தோன்றிடத்தான் செய்யும் பிறகு அந்த ஆச்சர்யமே பரிதாப உணர்ச்சியாக மாறிடவும் கூடும்! காரணம், கண்கவரும் மின்னல் கொடி உடலெங்கும் புண்ணாகிக் கிடக்கும் கோர சொருபத்தினனைக் காதலிப்பதில் ஏதோ ஓர் இரகசியமிருக்கிறதென்று எண்ணி சந்தேகம் ஏற்படும்! அந்தச் சந்தேகத்தைப் போக்கிட முனையும்போது—கோர உருவத்தானைக் காதலித்த அந்த ஊர்வசி மூளையில் முறிவு கொண்டவளென்று விளங்கும்; இல்லையென்றால் அவன் கோரத்தைக் காண முடியாதவாறு கட்டழகியின் கண்களிலே ஏதோ பழுதேற்பட்டிருக்கிறது என்று புரியும்—புரியும்போதுதான் ஆச்சர்யம் பரிதாபமாக மாறிவிடும்!' அதைப் போலவேதான் நேருவுக்கு ஏற்பட்டிருக்கும் புகழினையும், பல நாட்டினர் அவருக்கு வழங்கி யிருக்கும் விருதுகளும் அதனால் அவருக்கு ஏற்பட்டிருக்கும் கித்தாப்புகளையும் கண்டு முதலில் ஆச்சரியப்படுகிறோம்—பிறகு பரிதாபப்படுகிறோம்!

நேரு பண்டிதர் ஓர் சிறந்த அரசியல்வாதி என்பதை யாவருமே ஒப்புக் கொள்ளத் தயங்கார்—தயங்குபவர் உண்மையில் வைத்தியக்கார விடுதியில் சேர்க்கப்பட வேண்டிய பித்தர்! ஆனால் நேரு ஓர் சந்தர்ப்பவாதி! தேசியத் தோழர்களின் கண்கள் கொவ்வைக் கனிகளாக மாறிடலாம்! ஆனால் இதுவும் உண்மை—நேரு சமாதான தூதுவர் என்பது மட்டுமல்ல-ஏகாதிபத்தியவாதியுங்கூட! கொவ்வைக் கனிகளான கண்களிலிருந்து தீப்பொறிகள் கிளம்ப

அவர் ஒரு 'மாதிரி சோஷலிஸ்ட்'

அண்ணா அன்பன்

பழாக்கிவிட்டான்! —என்பது கதையல்ல; ஓர் உவமை பாடி பூர்த்தி செய்யப்பட்ட ஓர் இன்பக் காவியத்திலே குற்றமிருப்பதை அறிந்தான், அதைப் பாடிய கவிஞனுக்குப் புத்தி புகட்ட நல்ல வாய்ப்புக் கிடைத்ததென்று உள்ளுக்குள் எண்ணி குதூகலித்தான்—உடனே, வரிந்து கட்டிக்கொண்டு கிளம்பினானும் ஒருவன் எழுத்தாணியோடு! ஆனால் பாவம்! கிளம்பிய அந்தக் குணசீலன் மேலும பல குற்றங்களை வாரிக் கொட்டத் தொடங்கினான் அந்த இன்பக் காவியத்தில் கட்டுக்கோப்பு இல்லை காவிய அமைப்பில், முரண்பாடுகள் ஏராளம் —அதை எடுத்துச் சொன்ன முறையில், இலக்கண பிழைகளோ மிகமிக அதிகம்!—இதுவும் உவமைதான்—ஊரிலே யாரோ செய்துவிட்ட உண்மைச் சம்பவமல்ல!

ஆனால் யாருக்காக இந்த உவமைகள் என்று கேட்கத் தோன்றிடலாம், எங்கே யிருக்கிறார் இத்தகு உவமைகளுக்கேற்ற அரும்பணியாற்றும் இந்த அற்புத ஆசிரியார் என்று வினா எழுப்ப எண்ணம் பிறந்திடலாம்—உங்களுக்கு! அதோடு காசினிமெச்சும் சமாதான காவிய கர்த்தராம் எம் பண்டித நேரு, ஆசிரியர் பணியை மேற்கொண்டதைப் பற்றி சொல்லப் புகுந்து—புல்லனே! ஏதோ அடுக்காத உவமைகளைப் பற்றி அளக்க ஆரம்பித்திருக்கிறாயே என்று அதட்டி கேட்டிடவும் துடிதுடிப்பர் தேசியத் தோழர்கள். உண்மை—உவமைகள் சொல்லியிருப்பது இந்தியத் துணைக்கண்டத்தின் ஈடு இணையற்ற ஒரே ஒரு பிரதமர்—உலக நாடுகளின் புகழ் பரணிக்கு ஆளாகியிருக்கும் ஒரே ஒரு செல்லப் பிள்ளை—நேரு பண்டிதருக்குத்தான்!

'அட படுபாதகா! ஜெகம் புகழும் எங்கள் நேருவுக்கா இந்த அடுக்காத உவமைகள்! பார் போற்றுகிறதடா அவர் அறிவின் திறமைக் கண்டு! மேதினி சிரிக்குமடா உன் உவமைகளைக் கேட்டு! ராஜதந்திரிகளுக்கே அவர் மந்திரி! அரசியல் அறிஞர்களுக்கோ ஓர் அறிவிளக்கம்! கல்விக் கடல்கள் அவர் முன்னால் ஓர் சிறு துளி! உலுத்தனே! அறியாயோ நீ இதை! ஏதேதோ உளறுகிறாய்! எதையெதையோ சொல்லுகிறாய்! கேவலம் இந்திய கம்யூனிஸ்டுகளுக்கா எங்கள் நேரு ஆசிரியராகிவிட முடியாது? அற்பனே! அவரை புல்கானின் கைலாகுக் கொடுத்து வரவேற்றார் என்பதை நினைவில் வைத்

அந்த உரிமையுண்டு கவலைப்படுவார் யாருமில்லை. பாக்கிஸ்தானைத்தவிர! ஆனால் ஆசிரியர் பணியைத்தான் அவர் மேற்கொண்டாரே அந்தப் பெரிய மனிதர், அதையாவது ஒழுங்காகச் செய்ய வேண்டாமா! செய்யவில்லை! சித்திரக்காரனுக்கு ஓவியக் கலையைக் கற்றுத்தர முயன்று அந்தச் சித்திரத்தையே சிதைத்துவிட்டார். கவிஞனுக்குப் புத்தி புகட்டச் சென்று அந்த இன்பக் காவியத்தையே பாழடித்து விட்டார்.

கிழை நாடுகளிலே மேலை தேசங்களிலே, உலகத்தில் எங்கும், இந்திய பிரதமர் நேரு என்றால், ஆகா அவரா! எங்கள் நேரு மாமாவா!—என்று சின்னஞ் சிறு பள்ளிச் சிறுவர்கள் கூட சின்ன விழிகள் இரண்டும் அகல விரித்துக் கூறிடுவர் என்பதை—மாஸ்கோவிலே, அதன் பிரமாண்டமான நகரத் தெருக்களிலே, பொதுவுடமைப் பூங்காவிலே திரள் திரளான மக்கள் கூடி வரவேற்று வண்ணப் பூக்கள் சொரிந்தார்கள் வெள்ளைப் புருக்கள் வானத்தில் பறந்தது கண்டு, வந்தார் வந்தார்—சமாதான தூதுதார் என்று 'தில்லானா' பாடி வாழ்த்தினார்கள் என்பதை—பிரிட்டன் மட்டுமல்ல,

ஆஸ்ட்ரியா
போலந்து
யுகோஸ்லேவியா
ரோம்
பாரிஸ்
கெய்ரோ

ஆகிய நாடுகளெங்கிலும் அவர் வரவேற்கப்பட்டார் புகழ் மாலை சூடப்பட்டார்—அவ்வளவு வேகமாக உலகபுகழ் வெள்ளத்தில் ஆழமாகப் பாய்ந்திருக்கிறார் நேரு என்பதை—பத்திரிக்கையின் மூலமாக அறியும் போதும், செய்திப் படங்கள் வாயிலாக பார்க்கும் போதும் பூக்காடாகிறது காங்கிரஸ்காரர்களின் உள்ளம்! அந்தப் பூக்காட்டிலிருந்து எழும்பும் நறுமணத்தை நுகர ஆவல் அலை எழுந்தடித்துக் கொண்டிருக்கிறது கம்யூனிஸ்டு தோழர்களின் இருதயங்களில். புதிய பாசம்! புல்கானினுக்கு நேரு பண்டிதர் மாங்கனி பரிசளித்த பரவசக் காட்சி அவர்களின் கண்முன்னால்! களிப்புப் பொங்குகிறது—பொங்கி வழியட்டும் அடுத்த பொதுத்தேர்தல் வரும் வரையில்! ஆனால் நமக்கோ ஒரே ஆச்சரிய

லாம்! ஆனால் இந்த உண்மையையும் சொல்ல வேண்டி யிருக்கிறது—நேருவின் காலடியில் புகழ் மாலை குவிவதற்கு அந்தக் குணாளரே வழிவகுத்துக் கொண்டார்! அதாவது புகழ் அவரைத் தேடி வரவில்லை—அவர் புகழை நாடிச் சென்றார். வெற்றியும் பெற்றிருக்கிறார்! இவைகளையெல்லாம், ஏதோ எழுத்தாணி ஓடும் போக்கிலே, ஏகப்பட்ட வெள்ளைக் காகிதங்கள் மேஜையின் மீது குவிந்திருக்கிறது என்கிற எண்ணத்திலே அடக்கமில்லாமல் எழுதவில்லை நாம்! அப்படி எழுதும் பாசறையை சார்ந்தவர்களும் அல்ல நாம்! அறிஞரின் பாசறையில் பழகுபவர்கள் —அடக்கமில்லாமல் எழுதமாட்டோம்! கட்டுப்பாடு உண்டு நம் எழுத்தாணிக்கு! கண்ணியமுண்டு நம் தீட்டுகோலுக்கு! கற்றுக் கொண்ட பாடங்களில், இதுவும் முக்கியமானது நமது பாசறையில்! எனவே ஆதாரத்தோடுதான் டில்லி கொலு மண்டபத்துப் பொம்மைகளின் முக்கியதலைவராம் நேருவை ஏகாதிபத்தியவாதி என்கிறோம், சந்தர்ப்பவாதி என்கிறோம், புகழ்தேடி யென்றும் சொல்லுகிறோம்!

சமாதானத் தூதுவராம் நேரு!—விந்தை மேலிடுகிறது நமக்கு! இவரென்ன சமாதானத்தை காசினியில் தவழவிட்டார். இவரால் என்ன சமாதானத்தை நிலைநாட்ட முடிந்தது. இவர் சொல் கேட்டு எத்தனை யுத்தப் பிரியர்கள் யுத்தத்தை நிறுத்தி படைக்களத்தை பர்ணசாலை யாக்கிக் கொண்டார்கள்—என்றெல்லாம் கேள்விகளை அடுக்கிக்கொண்டே போகலாம்—போகுமளவுக்கு இவர் சமாதானத்தூது நம்மைத் தூண்டிவிடுகிறது. எட்டாண்டு காலமாக இந்தோ—சீனாவிலே நடந்துக் கொண்டிருந்த யுத்தம் இந்தச் சமாதான சிற்பியினால் நின்றது இல்லை. இல்லை!

எட்டாண்டு காலம்!—இந்தோ-சீனாவிலே ஒரே இரத்தக்களம்! விடுதலைக் கிளர்ச்சியினரின் வீரத் தளபதி ஹோ—சி—மின் பிரான்சின் ஏகாதிபத்தியக் குரல்வளையை நசுக்கினார்; — அதன் ஆதிக்கக் கண்கள் பிதுங்கின ...எட்டாண்டு காலம்! சமாளிக்க முடியவில்லை பிரான்சினால் நாட்டிலே நெருக்கடி—பொருளாதாரத்திலே பாசிப்படிய ஆரம்பித்தது. மக்களின் இருதயத்திலே புதுக்கவலை பிறக்கத் தொடங்கியது அதனால்! காரணம் எட்டாண்டு காலம் இந்தோ—சீனாவிலே விடுதலை வீரர்களோடு போராடி அதன் முதுகெலும்புதான் முறியத்

ஆசிரியர் பணியிலும் 'அந்த லட்சணம்' தானே?

தொடங்கியதே தவிர தன் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதில் தளர்ச்சியும் மனச்சோர்வும்தான் ஏற்பட்டது பிரான்சுக்கு' பாவம் ஏகாதிபத்தியத்தை அன்னிய நாட்டிலே நிலைநாட்டப்போய் தானே பிறநாடுகளின் அனுதாபத்திற்கு ஆளாகிவிட்ட நிலை தோன்றிவிட்டதைக் கண்ட பிரான்ஸ்—கடந்த ஆண்டு நடந்த ஜெனீவா மாநாட்டிலே இந்தோ-சீனாவில் யுத்தத்தை நிறுத்த பெரும் முயற்சி எடுத்தது. மெண்டஸ் பிரான்ஸ் அதற்காகவே பிரான்சின் புதிய பிரதமரானார் அப்போது. அவருடைய பெரும் முயற்சியினால்தான் இந்தோ-சீனாவில் எட்டாண்டு காலமாக சூழ்ந்து கொண்டிருந்த பயங்கர போர் மேகம் கலைந்தது சில ஒப்பந்தங்களை பிரான்சும் விடுதலைக் கிளர்ச்சியினரும். செய்துகொண்டதன் மூலம் நேருவுக்கும் இந்தோ-சீனாவில் யுத்தம் நின்றதிற்கும் எந்தவிதமான சம்பந்தமுமில்லை. ஆனால் சம்பந்தம் இருப்பதுபோல் அவருடைய விளம்பர ஏஜெண்டுகள் உலகமெங்கிலும் தடாரிப்பாறைக் கொட்டினர்—கொட்டிக் கொண்டேதான் இருக்கின்றனர்,

ஜெனீவா மாநாடு நடந்துக் கொண்டிருந்த போதே—இந்தோ—சீனாவில் போர்நிறுத்தம் ஏற்படுவதற்குப் 'பேச்சு வார்த்தைகள்' நடந்துக் கொண்டிருக்கும் நேரத்திலேயே—கௌடிமாலாவில் செழித்திருந்த கம்யூனிஸ்டு சர்க்காரை கவிழ்ப்பதற்கு ஜெனரல் அர்மாஸ் என்பவரைத் தூண்டிவிட்டார் அமெரிக்கா டல்லஸ்! வெற்றியும் கண்டார் உண்மையில் நேரு சமாதான சிற்பியென்றால் டல்லஸின் அநீதியைக் கேட்டிருக்க வேண்டுமே அதுதான் இல்லையே. எப்படி கேட்க முடியும்! கேட்டால் அமெரிக்க மூலதனம் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திற்குக் கிடைக்காதே.

கொரியாவில் நடந்த போர் சமரசமாக முடிந்துவிட்டதற்கும் பஞ்சசீலர் நேருவின் தலையீட்டினால் அல்ல வடகொரியாவும் தென்கொரியாவும் அது எல்லைக்குள்ளேயே நின்றுவிடவேண்டும், வடகொரியாவின் எல்லைக்குள் தென்கொரியா காலை வைக்கக்கூடாது. தென்கொரியா எல்லைக்குள் வடகொரியா வாலை ஆட்டக் கூடாது—என்று நேரு சொன்னது உண்மை. ஆனால் அதனால்தான் கொரியாவில் போர் நின்றுவிட்டதென்று சொல்வது அபத்தம். மூன்றாவது உலகயுத்தம் மூண்டுவிடுமோ மீண்டும் யுத்த வல்லூறுகளுக்கு வெள்ளைப் புறுக்கள் இரையாக நேரிடுமோ என்று அகிலமே அச்சத்தின் இரும்புப்பிடியில் சிக்கி மூச்சுவிடக்கூட முடியாமல் திணறிக் கொண்டிருந்த நேரத்தில்—கொரியாவில் தத்தமது பலத்தை இருதரப்பினரும்—கம்யூனிஸ்டுகளும் முதலாளித்துவ நாடுகளும்—பரீட்சித்துக் கொண்டிருந்த நேரத்தில் உலகமே யுத்தத்தை நிறுத்த வேண்டுமென குரல் எழுப்பியது. நேரு பண்டிதர் மட்டுமல்ல! நேருவின் குரலுக்கு மதிப்பில்லை கொதிக்கலாம் அவருடைய சீடர்கள்! மதிப்பிருந்திருந்தால் கொரியாவில் யுத்தம் நின்று கைதிகள் பரிவர்த்தனை நடந்துக் கொண்டிருந்தபோது கூட சில குட்டிக் கலகங்களை அமெரிக்கா மறைமுகமாக தூண்டிவிட்டு புன்னகை செய்திருக்காது!

ஆனால் நேருவை சமாதானத் தூதுவர் என்று பொதுவுடைமைப் பூங்காவாம் ரஷ்யா வரவேற்றிருக்கிறது—சிகப்புக் கம்பளம் விரித்திருக்கிறது—வெள்ளைப்புறு பறக்கவிட்டிருக்கிறது. புல்கானுக்கு நேருவின் உள்ளம் தெரிந்திருக்க நியாயமில்லை. அவர் உதட்டிலிருந்து வெடித்துக் கிளம்பும் வார்த்தைகளைக் கொண்டுதானே புல்கானின் அவரை 'எடை' போட்டிருக்கிறார்! மாங்கனியைக் கடித்தபோது அதன் ருசியைப் போலவேதான் நேருவின் நாட்டிலே—அவர் ஆட்சியிலே—மக்கள் அனைவரும் ருசிமிக்க வாழ்வு வாழ்ந்துக் கொண்டிருப்பர் என்று புல்கானின் நினைத்திராவிட்டாலும் — நேருவின் ஆட்சியிலே வறுமைப் பிணியால் மாண்டுபோகும் மக்களின் சடலங்கள் நடைபாதை யோரங்களில் நிறைந்திருக்குமென்று நினைத்திருக்க மாட்டார். வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்து காராக்கிரகத்திலே அடைபட்டுக் கிடந்தபோது தென்னகத்தில் திராவிடர் இனம் என்று ஒன்று உண்டு—அது வாழ்ந்த வாழ்வோ கனிரசம் கலந்த கற்கண்டு என்று தீட்டிய நேரு இன்று அதே திராவிட இனத்தின் நெஞ்சிலே ஏகாதிபத்திய வேலினை சொருகி வருகிறார் என்று சோவியத் பிரதமர் கருதியிருக்க மாட்டார்! காவிரிப்பூம் பட்டினத்துக் கடற்கரையில் கடற்படை கட்டி நாவலந் தீவுகளின் மீது படையெடுத்து வெற்றிக்கொடி நாட்டிய கரிகாலன் வீரமரபினரைக் குறித்து எழுதிய நேரு—நெல் மணக்கும் வயல்காடும் அதைக்காக்க வாள் சுழலும் படைவீடும் கொண்டு பாரிலே புகழ் பூத்து நின்ற திராவிட சமுதாயத்தைப் பற்றி தீட்டிய நேரு—அதே திராவிட சமுதாயத்தின் கரங்களுக்கு அடிமை விலங்கிட்டிருக்கிறார், அதைத் தகர்த்தெறியக் கிளம்பும் தன்மான வீரர்களை—விடுதலை பட்டாளத்தை—தாறுமாறாக நாகாக்க மறந்து நாறும் சொற்களால் தாக்குபவர் என்று, ஜார் மன்னனின் கொடுங்கோலை முறித்து புதியதோர் சமுதாயத்தை அமைத்திருக்கும் இலட்சிய ஜோதிகளின் வழி தோன்றலாம் புல்கானின்—நேருவைப்பற்றி நினைத்திருக்கமாட்டார்! தெரிந்திருந்தால்தானே நினைப்பதற்கு!

ஏகப்பட்ட பிரதிகள் விற்பனையாகிவிட்டன! கல்வியறிவு கொண்டோர் அனைவருமே மோகங் கொள்ளும் நூல் அது—என்று பாரதமாதாவின் தத்துப்பிள்ளைகள் அனைவருமே கூறுவர். அவர் காராக்கிருகத்தில் அருமை மகள் இந்திரா பிரியதர்சினிக்குக் கடிதம் தீட்டுவதுபோல எழுதி வெளியிட்ட 'இந்தியாவின் கண்டுபிடிப்பு' என்னும் நூலைப்பற்றி! அந்த நூலைப் படிப்போர் அனைவருமே நேருவைப் போன்ற இலட்சிய முரசு எவருமே இந்த அகிலத்தில் இரார் என்று அறைகூவல் விடுவர்! அவ்வளவு அருமையாக நக்கீரனின் நியாய வாதமும் இளங்கோவனின் உண்மை விளக்கிடும் முறையும் அதை நூலிலே கையாளப்பட்டிருக்கிறது! பிரிட்டிஷ் நியூகயானாவிலே, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் விடுதலை வீரர்களின் காரியாலயத்திலே அந்த நூல் இருந்தமைக்காக அந்தக் காரியாலயம் கம்யூனிஸ்டுகளின் சதிக்கூடம் என்று எண்ணி மூடப்பட்டது அந்நாட்டு போலீசாரால்.

அதிலே திராவிட இனத்தைப் புகழ்ந்திருக்கிறார்! தனியரசு கொண்டு அது தரணி புகழ்பெற்றதைக் கண்டு குதூகலித்திருக்கிறார். அதே தனியரசு கோரும் திராவிடப் பரம்பரையினரை இன்று வகுப்புவாதிகள் என்கிறார்! முட்டாள்கள் என ஏசுகிறார்! எவ்வளவு முரண்பாடு! பொதுவுடைமைக் கொள்கைக்குப் பல்லாண்டு பாடியிருக்கிறார். அதே கொள்கையைக் குழிதோண்டி புதைத்து, ஆவடியில் மாதிரி சோஷயலிசத்தைப்பற்றிப் பேசியிருக்கிறார்—பக்கத்தில் மார்ஷல் டிடோவை அமரவைத்துக் கொண்டு! கம்யூனிசத்திற்கு அடிப்படை அம்சங்களுண்டு. முதலாளித்துவ கொள்கைகளுக்கும் சில கோட்பாடுகள் உண்டு! ஏன்—எந்த 'இச'த்திற்குமே ஓர் கொள்கை இருக்கத்தானே செய்யும். கொள்கையற்றது 'இசம்' அல்ல. ஆனால் நேருவின் மாதிரி சோஷலிசத்திற்கு என்ன அடிப்படை அம்சங்களிருக்கின்றன! மாதிரி சோஷயலிசம்!—நிஜப் புலியல்ல, பொம்மைப் புலி யென்று அர்த்தம்! உருக்கும் உயிருள்ள உல்லாசி அல்ல—உயிரற்ற ஊர்வசியின் சித்திரம் என்று பொருள்!

காராகிருகத்தில் அடைப்பட்டுக் கிடந்தபோது பொதுவுடைமைக் கொள்கையைப்பற்றி புகழ்பாடிக் கொண்டிருந்த நேரு, ஆட்சிபீடத்தில் அமர்ந்துவிட்ட பிறகு அந்தக் கொள்கையையே மறந்துவிட்டார்— இல்லை மறந்துவிட்டதைப்போல் நடிக்கிறார்.

எனவேதான் போலும், முன்பு திராவிட இனம் தனியரசாண்டதைப்பற்றி எழுதிய நேரு, இன்று தனியரசு கோரும் திராவிடரின் மீது சுடுசொல் வீசுகிறார்—அந்தச் சமுதாயத்தையே தன் காலடியில் போட்டு நசுக்குகிறார்—விழி யிரண்டும் பிதுங்குவது கண்டு உள்ளுக்குள் கும்மாளமடிக்கிறார்—'அம்மா!' யென்று தன் வேதனைக் குமுறலை வெளியில் கொட்டி முறையிடுவதற்குக்கூட தாய்மொழி கூடாது என இந்தி மொழியை தன் வெற்றிக்கு அடையாளச் சின்னமாக திராவிடத்தில் புகுத்துகிறார். என்கிற காரணங்களுக்காகத்தான் அவரை ஜெகம் புகழ் பார்த்திபரை—நேரு பண்டிதரை—ஏகாதிபத்தியவாதி என்கிறோம். சந்தர்ப்பவாதி என்று சொல்லுகிறோம், ஆனால் நேருவின் ஏகாதிபத்திய உருவம் புல்கானினுக்கு மட்டுமல்ல, அவரை வரவேற்ற நாடுகளின் தலைவர்களுக்கெல்லாம் என்ன தெரியப் போகிறது! ஆனால் நமக்கு நன்றாகத் தெரிகிறது—தெரியத்தானே செய்யும்! அவரை நாம் எந்த விதத்திலேயும் மறக்கவில்லையே!

அலகாபாத் அபேதவாதி நேருவை நாம் மறக்க மாட்டோம். என்ன அபேதவாதம் வாழ்கிறது அவரது ஆட்சியிலே! கள்ளமார்க்கெட்காரர்களைக் கழுமரத்திலேற்றுவேன் என்று முழக்கிய நேருவை நாம் மறப்பதற்கில்லை—கள்ளமார்க்கெட்காரர்களை ஒழித்துவிட என்ன தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டது அவரது ஆட்சியில்! கும்பமேளா கொண்டாட்டத்தில் கலந்து கொண்டவர் நேரு என்பதை நாம் மறக்கவே மாட்டோம்! அந்தக் கும்பமேளாவில் நடந்த நிர்வாண ஊர்வலத்தை உவகையோடு பார்க்கச் சென்ற நேருதான்—நம்மை—அவரே புகழ்ந்திருக்கும் நம்மை—தனியரசு கொண்டு நாகரீகத்தில் சிறந்து வாழ்ந்த நம்மை—விடுதலைக் கிளர்ச்சிக்கு அஸ்திவாரமிடுவதுபோல் மும்முனைப் போராட்டம் நடத்திக் காட்டிய நம்மை, காட்டுமிராண்டிகள் என்று கழறியிருக்கிறார் காட்டுமிராண்டிகளாம் நாம் நிர்வாண ஊர்வலத்துக்கு விஜயம் செய்த உத்தமர் கூறுகிறார் இதை! மறக்க முடியுமா நம்மால்

ஆனால் இந்த ஏகாதிபத்திய நேருவுக்கு அகிலமெங்கிலும் புகழ் பரவியிருக்கிறது. ஏன் பரவாது வறுமை ரோகத்தைப் போக்க தத்துவ லேகியம் தான் சரியென்று செப்பிடும் டாக்டர் ராதாகிருஷ்ணனும் அங்கும் இங்கும் எங்கும் நிறைந்திருக்கும் கிருஷ்ணமேனனும், சகோதரி விஜயலட்சுமி அம்மையாரும் இவர் பிரதாபத்தை பாரெங்கிலும் பறந்து பறைசாற்றிக் கொண்டிருக்கும்போது—மீண்டும் கேட்கிறோம், இவர் புகழ் ஏன் பரவாது! இவருக்கு விளம்பரம் தேடும் ஏஜெண்டுகளாகத்தான் இந்தியத் தூதுவர்கள் போகும் இருக்கிறது. இங்கும் தலைகாட்டுவார்! அங்கும் வாலைக் காட்டுவார்—கம்யூனிஸ்ட் முகாம்களிலும் அவருக்கு வரவேற்புதான். முதலாளித்துவ கூடாரங்களிலும் அவர்களுக்கு புகழ் மாலைகள்தான்! —இதற்குதான் நடுநிலைமைக் கொள்கையென்று பெயர்! மதில்மேல் பூனை! இருதலைக்கொள்ளி! எனவேதான் இந்த நடுநிலைமைக் கொள்கையினரை தங்கள் தங்கள் பக்கம் இழுக்க இருதரப்பு கூடாரங்களும் மார்தட்டிக்கொண்டு கிளம்பியிருக்கின்றன. அதனால்தான் நடுநிலைமைக் கொள்கையினரின் தலைவராம் நேருவுக்கு வரவேற்பு, வாழ்த்துப்பா! உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறோம். அன்று டாலர் அமெரிக்கா நேருவை ஆசியாஜோதியென்று புகழ்ந்தபோது பொதுவுடைமை ரஷ்யா வாய்மூடிக் கிடந்தது—ஆம் என்று தலையசைக்கவில்லை! இன்று சோவியத் ரஷ்யா சமாதான தூதுவரென்று புகழ் பாடும்போது முதலாளித்துவ அமெரிக்கா வாய் மூடிக்கிடக்கிறது. சரியென்று கண்ணசைக்கவில்லை ஏன்!

அயல்நாட்டினர் நேருவின் பிரதாபத்தை பார்க்கிறார்கள்; மலையாகத் தெரிகிறது. மடுவு என்று புரியவில்லை. புரியாத அளவுக்கு இந்தியத் தூதுவராலயங்கள் வேலை செய்கின்றன! ஒரே விருந்து மண்டபங்கள்! இன்பக் கேளிக்கைகள்! நடன கூடங்கள். எந்த நாட்டின் பிரச்னைக்கும் மூதலிடங்கள், இந்தியாவின் அந்தஸ்தை உயர்த்துகிறார்களாம். அதன் பெருமையை வளர்க்கிறார்களாம்! வீட்டிலே குடிப்பது கூழ்! கௌரவத்திற்காக வெளியே குடிப்பதோ பால்; இவர்களின் இந்த அவலப் போக்குக்கு கின்னரம் கொட்டி கூத்தாடிக் கொண்டிருக்கின்றன இந்தியப் பத்திரிகைகளும். நேருவின் புகழ்வளருவதின் மீதுதான் அவர்களுக்

22-ம் பக்கம்

தேன் துளிகள்

வி. ஸ. காண்டேகர்

●

உணவைப் போல தத்துவ ஞானமும் ஊசிப்போகும்

*

பணக்காரர்களிடமுள்ள பணமென்றால் ஏழைகள் வடித்த வேர்வை.

*

அநியாயத்தைக் கண்டு வெறுப்பது உயிருள்ள மனத்தின் அடையாளம்.

*

கண்ணீரினால்தான் உள்ளம் தெரிகிறது. கண்ணீரினால்தான் உள்ளம் கிடைக்கிறது.

*

இரண்டுபேர் ஒன்றுவதற்குத் திருமணம் வேண்டுமென்ற கட்டாயமா!

*

இருந்தால் என்ற ஒரு சொல்தான் உலகத்தில் எண்ண முடியாத துன்பங்களை உண்டாக்குகிறது.

*

அடிமைகளுக்கு அழக்கூட பொழுது கிடையாது

*

இந்த உலகம் திருடர்களின் சந்தை இவர்களில் பட்டுத்துணி உடுத்துபவர்கள் பெரிய மனிதர்களாகவும் கிழிந்த துணி உடுத்துபவர்கள் திருடர்களாகவும் மதிக்கப் படுகிறார்கள். இதுதான் வித்தியாசம்

*

லட்சியவாதிக்கு இன்பமே கிடைப்பதில்லை.

வே. சண்முகம் தஞ்சை

நமது அண்ணா



அண்ணா

இச்சொல்லில் நிறம்பியுள்ள உயர்வு, உரிமை. பண்பு, அறிவாற்றல் ஆகியவை களை விளக்குவதெனின் எளிதன்று. இதோ அண்ணா என்று ஒருவர்—(அவர் எக்கட்சியினராயினும், மதத்தினராயினும்) கூறிடக் கேட்டால் அறிஞர் அண்ணா அவர்களைப்பற்றித்தான் அனைவருக்குமே நினைவுவரும். இவ்வாறு நான் கூறுவது மிகையாகாதென்பதை நாடாளும் 'கனம்'களிலிருந்து மற்றுமுள்ள அனைவரும்—ஏன் நம்மைத்தாக்கிப் பேசும் "மேதாவிகள்" கூட ஒப்புக்கொள்வர்

அண்ணா என்ற சொல்லுக்கு இவ்வளவு மகத்தான மதிப்பும், பாசமும் இருப்பதேன்? வெறும் பூஜா மனோபாவத்தினலா? அப்படிக் கருதுபவர்கள் பொது வாழ்வின் புனிதத்தன்மையிலுள்ள ஆரம்பக் கட்டத்தைக் கூட புரிந்து கொள்ள வாயக்கற்றவர்களே யாவர். இன்னும் சொல்லப் போனால் வெறும் பூஜா மனோபாவத்தைக் கண்டு பூரிப்படைபவருமல்ல அண்ணா

பின் எக்காரணத்தைக் கொண்டு இவ்வளவு மகத்தான சக்தி அண்ணா என்ற சொல்லில் நிறம்பியிருக்கிறது, நிலைபெற்றும் விளங்குகிறது! இதற்கான காரணங்களை இயக்கத் தோழர்கள் ஓரளவாவது அறிந்திருப்பார்கள் என்றே நம்புகிறேன். எனினும் சிலவற்றை நினைவு படுத்த விரும்புகிறேன்.

*

கடந்த உலகப் போரில் பிரிட்டிஷ் சர்க்காருடன் ஒத்துழைப்பதில்லையென்று அனைத்திந்தியகாங்கிரஸ் முடிவு செய்தவுடன், அதற்கேற்ப எல்லா மாநிலங்களின் காங்கிரஸ் அமைச்சர் குழுவினரைப்போன்று அன்று சென்னை முதலமைச்சரா யிருந்த ஆச்சாரியார் மந்திரி சபையும் ஆட்சிபீடத்தை விட்டகன்றது.

காங்கிரசார் வெளியேறினாலென்ன பதவிகளைச் சுமக்க வேறு 'கனம்'களா நமக்கில்லை என்று இறுமாந்திருந்த கவர்னா நீதிக் கட்சியின் அன்றைய அணைத்தலைவர்களில் ஒருவரான குமாரராஜாவை அணுகி பதவியேற்குமாறு சொல்ல அவரும் அதற்கு ஆவன செய்கிறேன் என்று கூறிவிட்டு, நீதிக்கட்சித் தலைவர் பெரியார் அவர்களுக்கு விவரத்தைக் கூறி இதுபற்றி முடிவு செய்ய நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தை கூட்டுமாறு கேட்டுக் கொண்டார்.

இதனை அறிந்த அண்ணா அவர்கள் பெரியார் அவர்களுக்குத் தனது எண்ணத்தை திட்டவட்டமாக முன்னதாகவே எழுதிவிட்டார்.

பின்னர் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் சென்னை அடையாறு மாளிகையில் முதல்தரமான விருந்துடன் துவக்கப்பட்டது.

இக்கூட்டத்திற்கு கமிட்டி உறுப்பினர்களான காலஞ்சென்ற சர். ஏ. டி. பன்னீர்செல்வம், சவுந்திரபாண்டியனார் சாமியப்ப முதலியார், பாசுதேவ் சி. டி. நாயகம், எஸ். நடேசன், டி. சுந்தர்ராவ் போன்றவர்களும் மற்றும் அறிஞர் அண்ணா, பி பாலசுப்ரமண்யம் கே. எ பி. விசுவநாதம், என். வி. நடராசன், போன்றோரும் வந்திருந்தனர்.

கூட்டத்திற்கு கட்சித் தலைவர் பெரியார் அவர்கள் தலைமை வகித்தார். கூட்டத்தின் நோக்கத்தை குமாரராசா சர். முத்தையா செட்டியார் எடுத்துக் கூறினார்.

உடனே அறிஞர் அண்ணா அவர்கள் எழுந்திருந்து பிரிட்டிஷ் ஆட்சியினர் திராவிட சமுதாயத்தினராகிய நமக்கு அளிக்க வேண்டிய உரிமையைப் பற்றி இதுவரை யாதொரு உத்ரவாதம் அளிக்காததுடன் நம்நாட்டைவேறொரு ஏகாதிபத்தியத்திடம் ஒப்படைக்க பேரம் பேசுவதைக் கண்டிக்கும் முகத்தான், நீதிக் கட்சியினராகிய நம்மை மந்திரி சபையை அமைக்குமாறு கவர்னர் வேண்டியுள்ளதை ஏற்க மறுக்கிறது என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார்.

இத்தீர்மானத்திற்கு பலத்த எதிர்ப்பு இருந்தது. தோழர்கள், சி. டி. நாயகம் சித்தையன், என். வி. நடராசன் போன்ற சிலரின் ஆதரவு மட்டுமே யிருந்தது. எனினும் இருதாப்பிலும் காரசாரமான விவாதங்கள் நடைபெற்றன.

இந்நிலையில் அண்ணா அவர்கள்—பெரியாருடன் சிறிது நேரம் தனியாகக் கலந்து பேசினார். பிறகு அண்ணா தமது தீர்மானத்தை வாபஸ் பெற்றுக் கொண்டார். இதைக் கண்டதும் பதவி எப்படியும் ஏற்கப்படும், அதற்கான தீர்மானம் எப்படியும் கொண்டுவரப் படும் என்று பலர் நினைத்தனர்!

ஆனால் அண்ணா அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை தலைவர் என்ற நிலையிலிருந்து பெரியார் அவர்களே கொண்டு வந்தார்கள்.

கட்சி சட்ட திட்டப்படி தலைவர் கொண்டுவந்த ஒரு தீர்மானம் தோல்வியுற்றதென்றால், தலைவர்மீது நம்பிக்கையில்லை யென்பதே விதிமுறையாகும்.

எனவே இச்சட்ட நுணுக்கம் அறிந்த சர். ஏ. டி. பன்னீர் செல்வம் போன்றவர்கள் உடனே பெரியாரை நோக்கி உங்களுக்கும் இவ்வித எண்ணம் இருப்பதாகத் தெரிவித்திருந்தால் துவக்கத்திலேயே இத்தீர்மானத்தை நான் முழு மனதாக ஆதரித்திருப்பேனே—இவ்வளவு வாதங்களும் தேவையில்லையே என்று கூற, தீர்மானம் ஒரே மனதாக நிறைவேறியது.

தீர்மானம் நிறைவேறியதுதான் தாமதம், பெரியார் அவர்கள் அண்ணாவையும் மற்ற தோழர்களையும் அழைத்துக கொண்டு சென்ட்ரல் ஸ்டேஷனுக்குப் புறப்பட்டார்.

பதவி ஏற்புக் தீர்மானம் நிறைவேறி விடும் என்று இறுமாந்திருந்த கவர்னர் ஏமாற்ற மடைந்தார். சென்னை மாநிலத்தில் இச்சம்பவம் நடைபெற்றதால் மற்ற மாநிலங்களிலும் அமைச்சர்பதவிகளை ஏற்க வேறு எவரும்முன்வரவில்லை பிறகுதான் 'ஆலோசகர் சர்க்கார்' அமைக்கப்பட்டது.

அறிஞர் அண்ணா அவர்களின் இம் முயற்சியில் பார்ப்பனரல்லாதார் (திராவிடர்) இயக்கம் மக்கள் மன்றத்தில் புதியதோர் சக்தியைப் பெற்றது. அது மட்டுமா அரசியல் வரலாற்றிலே குறிப்பிடத்தக்க இடமும் பெற்றது.

*

ராசா சர். முத்தைய செட்டியார் அன்று நீதிக்கட்சியின் பிரமுகர். பெரும் செல்வந்தர். கட்சியிலுள்ள முக்கியஸ்தர்கள் ராசா சர். அவர்களின் மாளிகையில் தங்குவதென்றால் தடையேதும் சொல்லமாட்டார்கள். அவருடன் பழகுவதை அவரின் நட்பை பெறுவதை பெருமையாகவும் கருதுவர். இன்னும் சொல்லப்போனால் காங்கிரஸ் தலைவரான காலஞ் சென்ற சத்திய மூர்த்தி அய்யர் போன்றவர்களும் ராசா சர், முத்தையா அவர்களிடத்தில் அந்தரங்கநட்பு கொள்வதில் பெருமையடைந்து வந்தனர்.

இந்நிலையில், தான் சார்ந்துள்ள கட்சியிலே தனது அபார நட்பை அடைய விருப்பமின்றி இருக்கும் ஒருவரைப் பற்றி மட்டும் ராசா சர். முத்தையா அவர்களுக்கு மனக்குறை உண்டு. அப்படிப்பட்டவர் யார்? சீமானா—பூமானா—'கனம்' ஆனவரா—மிட்டா-மிராசா—ஆலை முதலாளியா? இந்தப் பட்டியலில் அவரைச் சேர்க்க முடியாது. வெளிப்படையாகச் சொல்லப்போனால் (பெரியாரின் அகராதிப்படி) அன்னக் காவடிகளின் தோழர்தான்—அவர்தான் நமது அண்ணா!

ராசா சர். முத்தையா அவர்களுக்கு இது ஒரு பெரும் குறையாகவே யிருந்ததுபோலும். அதுமட்டுமல்ல அண்ணா அவர்களிடம் பெரியார் இவ்வளவு பாசமும் மதிப்பும் வைத்திருப்பது சர், முத்தையா அவர்களுக்கு ஆச்சரியமாய் யிருந்திருக்கலாம் என்று கருதுகிறேன்.

ஒரு சமயம் பெரியார் அவர்கள் சென்னையிலிருந்து ஈரோடுக்குப் பயணமானார். அவரை வழியனுப்ப அண்ணா அவர்களுடன் மற்றுமுள்ள தோழர்கள் சென்ட்ரல் ஸ்டேஷனுக்குச் சென்றனர். வண்டி புறப்பட இருபது நிமிடங்களிருக்கின்றன. அண்ணாவும் பெரியாரும் தனியாக உரையாடிக் கொண்டிருந்தனர். அதுசமயம் ராஜா சர் அவர்களும் பெரியாரை வழியனுப்ப ஸ்டேஷனுக்கு வந்தார் வந்தவர் அண்ணா அவர்களின் தோளின் மீது கையைப்போட்டு மிஸ்டர் அண்ணாதுரை. உங்களிடம் ஒரு விஷயம் பேசவேண்டும் என்று அழைத்தார்.

அண்ணா அவர்கள் மிக அமைதியாக நான் அய்யாவிடம் பேசிக்கொண்டிருக்கிறேன். பிறகு தங்களைச் சந்திக்கிறேன் என்று கூறினார்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும், பெரியார் அவர்களுக்கு கோபம் வந்துவிட்டது. நீயும் நானும் பேசுவது என்ன முக்கியம், அய்யா அழைப்பதை அலட்சியப்படுத்தலாமா யென்று கடிந்தார். எனினும் அண்ணா அவர்கள் புன்னகை புரிந்து வண்டி நகரும்வரையிருந்துவிட்டு விடைபெற்றுக்கொண்டு தோழர்களோடு இல்லம் ஏகினார்.

சர் மூத்தையாவின் கைகள் தங்களின் தோள் மீது படுவதால் பரமதிருப்தி கொள்ளும் சீமான்கள் ஏராளமுண்டு. எனினும நமது அண்ணா அவர்கள் அதுவும் அந்நாளிலேயே அப்போக்கினை விரும்பினாரில்லை, இயக்கத்திலுள்ள தன்னைப்போன்ற சகாதோழர்களுடன் பழகுவதையே பெருமையாகக் கொண்டிருந்தார்.

*

1942-ம் ஆண்டு சேலத்தில் நீதிக்கட்சியின மாநில மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டிற்கு ராவ்சாகிப் பி. ரத்தினசாமி அவர்கள் வரவேற்புக் கமிட்டித் தலைவரா யிருந்தார். அம்மாநாட்டில்தான் நீதிக்கட்சியை திராவிடர் கழகம் எனக் கொள்வதென்று முடிவு செய்யப்பட்டது.

அம்மாநாட்டிற்குத் தலைமை வகிப்பவர்கள் யாரோ அவர்களே கட்சியின் தலைவரா யிருந்து வருவதென்பது கட்சியின் விதிமுறையாகும், பெரியார் அவர்களின் தலைமையை விரும்பாத சிலர் இம்மாநாட்டிற்கு பெரியாரை அழைக்காமலேயே இருந்துவிடுவது —அப்படி வந்தாலும் வேறு தலைவரை தேர்ந்தெடுப்பது என்று துடிதுடித்தனர், இதற்காக காலஞ்சென்ற தலைவர் சவுந்திரபாண்டியனாரின் பெயரையும் இத்தோழர்கள் பயன்படுத்திக் கொண்டனர். ஆனால் பாண்டியனாரோ இதனை அறவே வெறுத்ததோடல்லமால் அவர்கள் போக்கினையும் கண்டித்தார்.

எனினும் இவ்வுண்மைகள் இறுதியாகத்தான் தெரியவந்தது. எனவே மாநாட்டிற்கு போவதில்லை யென்றும்—நீதிக்கட்சியை விட்டு வெளியேறி பழையபடி சுயமரியாதை இயக்கத்தை நடத்திச் செல்வதென்றும் தமக்குள் முடிவு செய்துகொண்டு — அண்ணா அவர்களை ஈரோடுக்கு அழைத்து இது பற்றி யோசித்தார்.

இரண்டு நாட்களாக விவாதித்ததின் விளைவாக அண்ணாவின் யோசனைப்படி சேலம் மாநாட்டிற்கு பெரியார் செல்வதென்றும் அவரையே தலைவராகக் கொண்டு வருவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

இதற்குப் பெருந் துணையாக "அண்ணாதுரை தீர்மானம்" என்று சேலம் மாநாட்டில் கொண்டுவரப்பட்டது. அதன் காரணமாய் பெரியார் அவர்களின் தலைமை கட்சிக்கு நீடித்தது.

ஆனால் கட்சியின் முக்கியஸ்தர்களுக்கு அண்ணா "பிடிக்காதவர்" ஆனார். அத்தகையோரும் நாட்கள் செல்லச் செல்ல உண்மை அறியலாயினர்

எனினும் கட்சியின் முக்கியஸ்தர்களின் வற்புறுத்தலுக்காக அண்ணா அவர்கள் தமது திட்டத்தை விட்டுக்கொடுத்தாரில்லை. அதனால் பொதுவாக திராவிடர் இயக்கம் இன்று தலைநிமிர்ந்து நிற்கிறது.

*

இன்னும் இதுபோன்ற சம்பவங்களை அவ்வப்போது 'திராவிடன்' வாயிலாக விவரிக்கின்றேன். இதுசமயம் இந்த அளவுக்கு முடிக்கிறேன். வணக்கம்.

நக்கீரன்

●

அறிஞர் அண்ணா

அவர்களின் சுற்றுப்பயணம்

●

நெல்லை மாவட்டத்தில்

ஆகஸ்டு 19. மாலை—விக்ரமசிங்கபுரம்
இரவு—வீரவநல்லூர்
20 காலை—அம்மன்புரம்
மாலை—ஆத்தூர்
இரவு—சிவத்தயாபுரம்
21. காலை-பாளையங்கோட்டை
மாலை—தூத்துக்குடி

*

மதுரை மாவட்டத்தில்

ஆகஸ்டு 22. மாலை-அமெரிக்கன்கல்லூரி
இரவு—மணிமகுடம்
நாடகம் தலைமை
23. மாலை-4 தேவதானப்பட்டி
, பெரியகுளம்
7. ஆண்டிப்பட்டி
இரவு மணிமகுடம்
நாடகம தலைமை
24. மாலை-4, கம்பம்
6. போடிநாய்க்கனூர்
25. மாலை-4. மதுரை
தியாகராசர் கல்லூரி
இரவு 7, சோழவந்தான்

'நீறுக உடல் வெந்தபோதும்'

மலருக்குள்ள வேலை மலரவேண்டியது; மலர்ந்த மலருக்கு மரணமே வருவதில்லை.

'பாரசீக முரடன்' உமார் கய்யாம், அரைமயக்க போதை சூழ்ந்த நிலையில் பாடிவிட்டுப்போன இந்தக் கவிதைத் தொடர் அரை மயக்கம் தெளிந்து வரும் அரியதொரு சூழ்நிலையில் முன்னேறி வழி நடக்கும் தென்னகத்தின் சமுதாயத்துக்கு திராவிடப் பெருங்குடி மக்களுக்கு 'மிகப் பொருத்தமான அறைகூவலாக அமைந்திருக்கிறது.

மலருக்குள்ள வேலை மலர வேண்டியது; விடுதலை வேண்டித் தவிக்கும் ஒரு சமுதாயத்தின் வேலையும் தனக்கென ஒரு வழியை வகுத்துக் கொண்டு முன்னேறுவது.

மலர்ந்த மலருக்கு மரணமே வருவதில்லை; ஆம், வீறிட்டெழுந்துவிட்ட விடுதலை ஆர்வமும் அப்படித்தான்.

மலர், தன் வேலையைச் செய்துவிட்டது—மலர்ந்ததற்கறிகுறியாக இன்பமணத்தை நாடு நெடுகிலும் பரப்பிவிட்டது; மலர்ந்துவிட்ட அந்த விடுதலை உணர்வெனும் மலரை மரணம் தீண்டவே முடியாது. அது பாசக் கயிறுனாலும் சரி, பயங்காட்டும் கருவியானாலும் சரி, மலரின் உயிரைக் கொத்திக் கொண்டு போக முடியாது; நிச்சயம் நடவாது.

'திராவிடன்' தனது ஒன்பதாவது ஆண்டின் விலை மதிப்பற்ற பரிசாக இந்த உறுதிமொழியை நாட்டு மக்களுக்கு வழங்குகிறான்.

மேகத்தின் மத்தியிலே மிதந்து கொண்டிருந்த சுதந்திர தேவி, இந்தியப் புழுதி மண்ணிலே அடி எடுத்து வைத்து ஆண்டுகள் எட்டாகி ஒன்பதாம் ஆண்டுத் துவங்குகிறது' தென்னகம் தனக்கிருந்த 'கொஞ்சநஞ்ச. 'சுய நிர்ணய உரிமை'யையும் வடவருக்கு ஒப்புக் கொடுத்து விட்ட சோகமயமான வாசகம் தொடர்ச்சியாகக் கேட்பதும் எட்டு ஆண்டுகளைக் கழித்து ஒன்பதாம் ஆண்டின் ஓலத்துக்குத் தயாராகிறது.

'சுய நிர்ணய உரிமை' செத்துப் போன அன்றுதான், அதை மீட்டுக் கொடுக்க வெகுண்டெழுந்த திராவிடரியக்கத்தின் முன்னணித் தொண்டனான 'திராவிடனும்' பிறந்தான்!

சுதந்திரம் கிடைத்து எட்டு ஆண்டுகள்

திராவிடன் பிறந்து எட்டு ஆண்டுகள்.

திராவிட முன்னேற்றக் கழகம் பிறந்து ஆறு ஆண்டுகள் (அடுத்த மாதம் நிறைவேறுகிறது.)

அந்த மாபெரும் இயக்கம் நடத்திக் காட்டிய மும்முனைப் போராட்ட போர்க்களங்கில் முரசு முழங்கி இரண்டு ஆண்டுகள், ஒன்றாக முடிகின்றன. ஒரு சேர புத்தாண்டுப் பயணத்தைத் துவக்குகின்றன!

எட்டு, ஆறு, இரண்டு ஆகிய ஆண்டு எண்களில் ஏதும் முக்கியம் இல்லை. ஆனால் அந்த ஆண்டுகளுக்கிடையில் நாட்டிலே நடைபெற்ற உருப்படியான வேலைகள்—மக்களின் உள்ளத்திலே கணிசமான அளவுக்கு மோதி எதிரொலிக்கும் விடுதலை வேட்கை ஆகியவைகளே கருத்தில்கொள்ள வேண்டியவை. அனைத்துக்கும் மேலாக திராவிட முன்னேற்றக் கழகம் தனது ஆறு ஆண்டு பயணத்திலே சாதித்துள்ள சாதனைகளை இமயத்தின் உச்சியிலிருந்து எடுத்தியம்ப வேண்டியவை. அமைதியாக, ஆனால் உறுதியாக தன்னுடைய குறிக்கோளை நாட்டிலே எடுத்துச் சொல்லி விடுதலைப் பயணத்தை துரிதமாக முடிக்கும் அளவில் கொண்டு வந்து நிறுத்தி இருக்கும் தி. மு. கழகத்தின் சாதனைக்குச் சமமாக உலகத்திலே எந்த ஒரு இயக்கமும் தொண்டாற்றியதில்லை என்பதை துணிந்து கூறலாம்.

தி. மு. கழகம் தனது புனிதமான தொண்டினால் நாட்டினைச் செப்பனிட்டு வைத்திருக்கும் நிலை இருக்கிறதே — அது அந்த நிலை நல்லவர் உள்ளத்திலெல்லாம் ஒரு இன்பக் கிளு கிளுப்பை உண்டாக்கக் கூடியதாகும்.

தென்னகம் வடவருக்கு அடிமைப் பட்ட, கடந்த எட்டு ஆண்டு காலத்தில்—முனு முனுப்பும் பெரு மூச்சும் அன்றாட வாழ்விலே இரண்டறக் கலந்து விட்டிருந்த கடந்த எட்டாண்டு காலத்தில் இல்லாத ஒரு பேரொளி, கேட்காத ஒரு சங்க நாதம், பழக்கமில்லாத ஒரு ஒற்றுமைப் பிணைப்பு ஒன்பதாம் ஆண்டுத்துவக்கத்திலே உருவாகியுள்ளதைக்கண்டு எதிர்கால வெற்றிகளிலே

மு. சண்முகம், சென்னை

அசையாத நம்பிக்கையுடன் முன்னேறிச் செல்ல, தி. மு. கழகம் தனது சக்தி முழுவதையும் செலவழிக்கும் என்பதை நாட்டு மக்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துச் சொல்ல 'திராவிடன்' கடமைப் பட்டிருக்கிறான்.

நாடு இன்றுள்ள நிலை, உழவு நடந்த வயலினுக்கு ஒப்பானதாகும்; சூல் கொண்ட மேகக் கூட்டத்தின் திரட்சிக்கு ஒப்பானதாகும்; வளர்ந்து விட்ட தலை மகன் குடும்ப பாரத்தைத் தாங்கிக் கொள்ள தேதி குறிப்பிட்டு விட்டதை எண்ணி மகிழும் தாயினது மன நிலைக்கு ஒப்பானதாகும்.

நல்ல உள்ளம் கொண்டோர் எடுத்துச் சொல்லும் கசப்பான உண்மைகளையும் அலசிப்பார்க்கும் ஆராய்ச்சித்திறனை இந்த ஆண்டு காண்பது போல் எந்த ஆண்டும் கண்டதில்லை,

வடவர் ஏகாதிபத்தியத்தை ஆதிமுதல் எதிர்த்து நிற்கும் திராவிடரியக்கங்களின் நம்பிக்கையில் புதுமெருகும் கொடுக்கும் 'புனிதமான' ஒத்துழைப்பை இந்த ஆண்டைப்போல் எந்த ஆண்டும் திராவிட சமுதாயம் ஒருமுகமாகக் கொடுத்ததில்லை.

மலர் மலர்ந்துவிட்டது. மணம் பரவிவிட்டது: மலைபோன்ற உறுதியும் மண் போன்ற பொறுமையும் காட்டி வந்த விடுதலை இயக்கத்துக்கும் பல முனைகளிலிருந்தும் ஆதரவு கிடைக்கத் தொடங்கிவிட்டது.

பொதுச் செயலாளரின் அறிக்கைக்கேற்ப 14-8-55-ம் நாளன்று அருப்புக்கோட்டையில் நடைபெற்ற ராமநாதபுரம் மாவட்ட தி. மு. கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர் பதவிக்கு ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் கவிஞர். கண்ணதாசன்.

மலர் மணம் பரவுகிறது; விடுதலையும் நெருங்குகிறது.

முத்திரைச் சட்டத்தால் மூண்டெழுந்த அமெரிக்க விடுதலைப் பட்டாளத்தைப் போலவே, ஐந்தாண்டுத் திட்டம் என்கிற பெயரால் டெல்லிப் பேரரசு காட்டிவிட்ட வஞ்சகமும் தென்னாட்டைத் தட்டி எழுப்பி விட்டது.

முட்டாள்தனமான பிடிவாதமும் அளவுக்கு மீறிய சுயநலமும் கொண்ட மூன்றாம் ஜார்ஜ் மன்னன் முத்திரைச் சட்டத்தை (Stamp act) அமெரிக்க குடியேற்ற நாட்டில் பிரகடனப் படுத்தியபோது அமெரிக்க உள்ளத்திலே எழும்பி நின்ற கேள்விகள் அத்தனையும், ஐந்தாண்டுத் திட்டத்தால் ஏமாற்றப்பட்ட தென்னாட்டவர் உள்ளத்திலும் தேம்பி நிற்கின்றன.

'ஐரோப்பாவிலே நடந்த ஏழாண்டுப் போரிலே மிகப் பெருத்த பண நஷ்டம் உண்டாகி யிருக்கிறது. போரின் முடிவு இங்கிலாந்துக்குச் சாதகமாக முடிந்து அநேக புதிய நிலங்கள் கிடைத்ததால், அவற்றைக் காக்கவும் மேற்கொண்டு அதிகப் பணம் தேவைப்படுகிறது. அதேசமயத்தில் இங்கிலாந்து முன்னின்று நடத்திய போரினால் அமெரிக்க குடியேற்ற நாடுகளும் பலனடைந்துள்ளன. எனவே போரில் செலவழித்த பணத்தில் ஒரு பகுதியாவது குடியேற்ற நாட்டில் வசூலிக்கப்பட வேண்டாமா?'

1763-ம் ஆண்டிலே மூன்றாம் ஜார்ஜ் மன்னன் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளின் மீது திணிக்கப்பட்ட முத்திரைச் சட்டத்துக்குச் சப்பைக் கட்டுகட்டி இதுபோல் பேசினான்.

"ஆம், நீங்கள் சொல்கிறபடி பணம் செலவானது உண்மைதான். ஆனால் நாங்கள் படைகளைத் திரட்டிக் கொடுக்கவில்லையா? போரின்போதே பொருள்களைத் தொலைத்து ஓட்டாண்டிகளாகி விடவில்லையா? கடன்பட்டுத் தொல்லையேற்று ஒன்றும் தோன்றாமல் விழித்துக் கொண்டிருப்பது உங்களுக்குத் தெரியாதா?"

இப்படி பதிலுக்குத் திருப்பிக் கேட்டன, அமெரிக்கக் குடியேற்ற நாடுகள்.

இந்த இரு கேள்விகளுக்கும் இடையிலே உருவான பதில் என்ன ?

முத்திரைச் சட்டம் தொலைந்தது. மூன்றாம் ஜார்ஜ் தனது தோல்வியை ஒப்புக் கொண்டான்.

ஆனால் விவகாரம் முடிந்து விடவில்லை. அமெரிக்கப் புரட்சிக்கு அணு அணுவாக ஆதரவு திரண்டது. இறுதியில் 1763-ம் ஆண்டில்—முத்திரைச் சட்டம் ரத்து செய்யப்பட்ட பத்தாவது ஆண்டில், ஜான் ஆடம்ஸ் என்னும் பெயர் படைத்த புரட்சி வீரன் நடத்திக் காட்டிய 'பாஸ்டன் தேநீர் விருந்து' வைபவத்தில் அமெரிக்க விடுதலையின் மணி ஓசை கேட்டது; இங்கிலாந்தும் மூட்டை கட்டிக் கொண்டது.

இந்தப் பழங்கதையை இப்போது எடுத்துச் சொல்வதின் நோக்கம் உள்ளத்திலே ஒரு வித அதிருப்தியின் அரிப்புத் தோன்றி விட்டால், அதிருப்தித் தோன்றியதற்கான காரணம் தொலைந்தாலும், அதன் அடிச்சுவடி அப்படியே நிலைத்து நின்று விடும் என்பது சரித்திர பூர்வமான உண்மை என்பதை எடுத்துக் காட்டவே ஆகும்.

விடுதலை உணர்வு ஒரு சமுதாயத்தின் உள்ளத்திலே ஆழப் பதிந்துவிடுமானால் அதற்கு ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியினால்

நினைவாலே உயிர் வாழும் நெஞ்சம்

மட்டுமே குமுறி வெடிக்க வேண்டும் என்கிற நியதி கிடையாது. எப்போதும் வெடிக்கும்; எதற்கும் அனல் கக்கும்.

அதிலும், எதிலும் பற்றில்லாத எக் கட்சியையும் சார்ந்து நிற்காத மக்களும் அதிருப்திக் குரலை வெளிப்படையாகவே காட்டத் துவங்கிவிடுவார்களானால், விடுதலை கோரி நிற்பது ஒரு கட்சியின் முடிவு மட்டுமல்ல, நாட்டின் பொதுப்படையான விருப்பமாகிவிடும் என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை.

எதிலும் சேராத மனிதர்கள் ஒன்று சேர்ந்து உண்மையின் பக்கம்—உரிமை உணர்வின் சார்பில் பேசக் கிளம்பிவிடுவார்களானால், விடுதலையே தனது மூச்சு என்பதாகப் பணியாற்றும் இயக்கங்களுக்கு அசைக்க முடியாத பின்னணிப் பலம் கிடைத்துவிட்டது போலாகும்.

ஜப்பானிய ஆக்ரமிப்பை எதிர்த்துப் போராடிய சீனமக்கள் சமுதாயம், கோமிங்டாங், பொதுவுடமை கட்சிகளின் கீழ் நின்று போரிட்டது. இரு கட்சிகளுக்கும் இருக்கும் மலைபோன்ற வேற்றுமைகளையும் மறந்துவிட்டு, சிலகாலம் ஜப்பானிய எதிர்ப்பிலே சீனர் உறுதி காட்டினர். கட்சிகளின் கீழ் உற்சாகமாகப் போரிட்டபோதிலும் ஜப்பானியரை எதிர்த்துத் தாக்கமுடியாமல் வெறும் தற்காப்பிலேயே ஆண்டுக் கணக்கில் போராட்டம் நடத்தி வந்தனர்.

இந்தத் தற்காப்பு—முயற்சியிலேயே தங்கள் சமுதாயம் தளர் நடை போட்டுவருவதைக் கண்டு, இரண்டு கட்சிகளுக்கும் சம்பந்தப்படாத—எந்தக் கட்சியிலும் சேராத இளைஞர்கள் ஆயிரக் கணக்கில் ஒன்று திரண்டனர். ஜப்பானிய ஆக்ரமிப்பை ஒழித்துக் கட்ட வேண்டும் என்ற எண்ணத்தைத் தவிர வேறு ஏதும் அவர்களுக்குத் தெரியாது! கம்யூனிசமும் அவர்களுக்குப் புரியாது, சியாங்கின் ஊழல் மயமான ஆட்சியைப் பற்றியும் அவர்கள் அதிகம் படித்ததில்லை. ஆனாலும் ஜப்பானிய ஆதிக்கத்தை ஒழித்துக் கட்ட வேண்டிய அவசியத்தை மட்டும் அவர்கள் உணர்ந்தவர்களானார்கள். அவர்களிடம் குண்டு, பீரங்கி, ராணுவ உடை ஏதும் இல்லை. உள்ளத்திலே தெம்பும், உணர்விலே உறுதியும், நாட்டுப்பற்றும் அவர்களுக்குரிய கேடயமாக அமைந்திருந்தன.

எழுந்தனர். உணவோ உறக்கமோ அவர்களைத் தடுக்க முடிய வில்லை. உறுதி வாய்ந்த ஜப்பானிய ராணுவத்தை 1932-ம் ஆண்டு ஜனவரி — பிப்ரவரித் திங்களில் இரண்டு வாரகாலம் எதிர்த்து நின்றனர். ராணுவ நிர்வாகத்தில் நிபுணத்துவம் பெற்ற ஜப்பானிய தளபதிகளே ராணுவப் பயிற்சி பெறாத சீன இளைஞர்களின் வீரத்தைக் கண்டு மலைத்துப் போனார்கள். ஜப்பானியப்படை பின்வாங்கியது. சீனா—ஜப்பான் போரிலே ஒரு புதுத் திருப்பம் உண்டானது. இத்தகைய மாறுதலை உண்டாக்கிய இளைஞர்களின் பட்டாளத்துக்கு, **19-வது நாடோடிப் படை** என்ற பெயர் கொடுத்து உலகச் சரித்திரம் ஒப்பற்ற கவுரவம் அளிக்கிறது.

நாசக் கருத்துடன் உலவும் எதிரியை வீழ்த்த கட்சி சார்பில்லாத இளைஞர்கள் காட்டிய ஆர்வம்தான் 19-வது படையின் எதிர்ப்பு கிளம்பிய இரண்டாண்டுகளுக்குள்ளாக—1934-ம் ஆண்டில் 8300 மைல் கால்நடையாகவே பவனிவரும் அளவுக்கு இலட்சிய வீரர்களுக்கு சீன சமுதாயம் வாழ்த்துக்கூறி வழிவிட்டது. சியாங்கின் ஊழல் மயமான ஆட்சியைத் தொலைக்க தன்னாலான எல்லா உதவிகளையும் சீன மாதா உவப்புடன் அளித்தாள்!

நீதியின் பக்கம் நிற்கும் நல்லியல்பு கொண்டோரை, தனது லட்சியக் குரலுக்கு செவி சாய்க்கும்படியான நிலைமையை உண்டாக்குவதில்தான், ஒரு விடுதலை இயக்கம் முதன் முதலில் கவனம் செலுத்தவேண்டும். இந்தப் பணி—அடக்கத்தினாலும், மரியாதையினாலும் மட்டுமே சாதிக்கக் கூடியதாகும். உருட்டலோ, மிரட்டலோ, தூற்றுதலோ, ஏசுதலோ எதுவும் பலனளிக்கா.

நாட்டு மக்களை—தன்னை வேம்பென ஒதுக்கித் தள்ளும் குணம் படைத்தோரையும் நீதியின் பக்கம் இழுத்துவிட்டு தன் பணிக்கு ஆக்கம் தேடிக் கொள்வதில் தி. மு. கழகம் ஆறாண்டு கால தொண்டிலேயே அபரிமிதமான பலனைக் கண்டுவிட்டது. இதைத்தான் உலகச் சரித்திரத்திலேயே ஒப்புவமை கூறமுடியாத சாதனை என்று ஆரம்பத்தில் குறிப்பிட்டிருக்கிறோம்.

குற்றாலத்திலே கூடிய காங்கிரஸ் கமிட்டி.

மைசூர் முதலமைச்சர் அனுமந்தையா,

மைசூர் தொழிலமைச்சர் சென்ன பாசப்பா,

ஆந்திர முதலமைச்சர் கோபால ரெட்டி,

ஆந்திர தொழில்—திட்ட அமைச்சர், காளா வெங்கடராவ்

டெல்லிப் பேரரசின் முன்னாள் சமஸ்தான இலாகா செயலாளர் ஆர். கே. நாயர்.

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்—உலகம் தெரிந்த கல்வி நிபுணர் லட்சுமணசாமி,

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர், டி. எம். நாராயணசாமி,

சென்னை மாநிலத்தின் பிரபல தொழிலதிபர் அனந்தராம கிருஷ்ணன்,

சென்னை மாநில வணிகர்கள் கழகம்

'இந்து' இதழ்

சுதேசமித்திரன் இதழ்

கோவைத் தொழிலதிபர்களின் குரலை எதிரொலிக்கும் 'நவ இந்தியா' இதழ்

இத்தனைக் குரலும் ஒருமுகமாக வடவர் ஏகாதிபத்தியப் பேராசையை தெள்ளத் தெளிய விளக்கவைக்கும் அருமையான பணியை மேற்கொண்டிருக்கின்றன.

இவைகளில் சிறப்பான சிலவற்றை மட்டும் விமர்சனம் செய்து பார்க்கலாம்.

சென்னை மாநிலத்திலே உள்ளது ஒரே ஒரு வணிகர் கழகம். அந்தக் கழகம் வடக்கத்தியாரின் ஆதிக்கப்போக்கை சோகத்துடன் எடுத்துச் சொல்கிறதென்றால், அது மாநில வணிகர்களின் ஏகோபித்த குரல் என்பதை யாரும் மறுக்க முடியாது.



பொதுச் செயலாளரின் அறிக்கைக் கேற்ப 31—7—55-ம் நாளன்று நடைபெற்ற சென்னை மாவட்ட தி. மு. கழக நிர்வாக உறுப்பினர்கள் கூட்டத்தின்போது பொதுக்குழு உறுப்பினர் பதவிக்கு அதிகப்படியான ஓட்டுகள் அளித்து என்னைத் தேர்ந்தெடுத்த அனைவருக்கும், ஏனையோருக்கும் என்து நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

—கோ. இளவரசு

அந்தக் கழகம் சொல்கிறது:—

"தொழில் துறையில் சென்னை மாநிலம் மற்ற மாநிலங்களைவிட மிக மிகத் தொலைவில் பின்தங்கி கிடக்கிறது...வட்டாரவாரியாகத் தொழில்கள் நிர்மாணிக்கப்படுவதின் தேவையை இந்தியப் பேரரசு உணர்ந்து கொள்ளவில்லை...நீண்ட கடற்கரையைப் பெற்றுள்ள இம்மாநிலம் ஒரு கப்பல் கட்டும் தொழிற்சாலையை கண்டிப்பாகப் பெற்றிருக்க வேண்டும்!"

இருக்கப்பட்ட பிரத்யட்ச நிலை, அதை உணர்ந்து கொள்ளாத இந்தியப் பேரரசின் அறியாமை, (அல்லது அசட்டு மனப்பான்மை) அறியாமை தெளிய வேண்டியதின் கண்டிப்பான அவசியம் ஆகிய பகுதிகளாக அமைந்திருக்கிறது, வணிகர் கழகத்தின் அறிக்கை.

நட்பு முறையிலே வெளிவரும் இந்த அன்புக் கட்டளை, இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பிறகு, இன்னும் கடுமையாக மாறும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. தி. மு. கழகத்தின் ஒரு பிரிவு பணியை மாநில வணிகர் கழகமே மேற்கொள்ளும் அமைப்பாக மாறிவிடும். **திராவிட வணிகர்கள் முன்னேற்றக் கழகமாக** வேண்டுமானாலும், அதை அங்கீகரித்துக் கொள்ள தி. மு. கழகத் தலைமை நிலையத்தை பிறகு வேண்டிக்கொள்ளும் பொறுப்பு நம்போன்றவர்களுக்கு நேர்ந்தாலும் நேரக் கூடும்.

அடுத்தபடியாக ஆந்திர அமைச்சர் காளாவின் குரலுக்கு செவிமடுப்போம்:—

"800 கோடி உத்தேசச் செலவில் ஆரம்பிக்கப்பட்ட ஆந்திரத் தொழில் திட்டம் 200 கோடியாகத் தேய்ந்து விட்டது. இந்தத் தொகையும் நிலைத்து நிற்குமானால், நம்மை நாமே பாராட்டிக் கொண்டவர்களாவோம்...ஆகாயத்திலுள்ள கடவுளர்களும், டெல்லியிலுள்ள தேவதைகளும் நமக்குச் சாதகமாக இருப்பார்களானால், ஒருஉரத் தொழிற்சாலை கிடைக்கக்கூடும்."

தனியாகக் குடித்தனம் போய் இரண்டாண்டுகள்கூட நிரம்பவில்லை. ஆந்திரம் டெல்லியை நன்றாகப் புரிந்து கொண்டு விட்டது. ஆகாயக் கடவுளர்களும், டெல்லி தேவதைகளும் ஒன்றெனப் பாவிக்க ஆரம்பித்து விட்டது. கடவுள் படும்பாடு, பாவம் காளாவுக்குத் தெரியாததா? ஆந்திரம் எதையும் அதிக நாள் சகித்துக் கொள்ளாது. அங்கு எதுவும் பேச்சுடன் நின்றுவிடுவதில்லை. உடனே செயலில் பரிணமித்துவிடும் 800 கோடி 200 கோடியானாலும் பரவாயில்லை என்கிறது முதல் அனுபவத்தின் காரணமாக! அடுத்த அனுபவத்தில், "நாங்கள் போட்டுக் கொடுத்ததைத் திருத்த நீ யார்?" என்று ஆந்திரம் டெல்லியின் மேல் சீறிப்பாயும் என்பதை இப்போதே ஆருடம் கணித்து விடலாம். ஆந்திரத்தின் மனவளம் அப்படிப்பட்டது! "ஆந்திரத்தில் தி. மு. கழகத்துக்கு ஆதரவு இருக்கிறதா?" என்று கேட்கும் அப்பாவி "மாநிலங்கள்" கர்னூலிலிருந்து டெல்லி நோக்கிக் கிளம்பும் கண்டனக் கணைகள் எத்தனை என்பதை இன்றிலிருந்து எண்ணிக் கொள்ளும் ஏஜண்டுகளாகப் பணிபுரியட்டும் என்று தி. மு. கழகத்துக்கு 'சிபாரிசு' செய்கிறோம்.

அடுத்துக் குறிப்பிட வேண்டிய குரலொலி தோழர். அனந்தராம கிருஷ்ணன் அவர்களுடையதாகும்.

தனிப்பட்ட முயற்சியால், தளராத தன்னம்பிக்கை உணர்வால் முன்னுக்கு வந்த தொழிலதிபர் அவர். ஒரு சமுதாயத்தின் தன்னம்பிக்கையும் எத்தகைய பலம் வாய்ந்தது என்பதை அவர் சொல்ல வேண்டாம், அவ

ளுடைய வாழ்வுச் சுவடியிலிருந்து நம் போன்ற இளைஞர்கள் படித்துத் தெரிந்து கொள்வோம். டெல்லியும், பம்பாயும், கல்கத்தாவும் பிரமிக்கும் அளவுக்கு பஸ் தொழிலில் வளர்ச்சி யடைந்துள்ள 'சிம்ப்சன்' கம்பெனித் தலைவர், பொறி வல்லுனர்கள் மத்தியிலே பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார் :—

"தொழில் மயமாக்கப்படுவதில் தொடர்ந்து தென்னாடு புறக்கணிக்கப்படுவது ஆபத்தானதாகும்...பம்பாயும் வங்கமும் எவ்வளவோ முன்னேறியுள்ளன...தென்னாட்டுக்கு உருவான ஏதாகிலும் செய்ய வேண்டிய காலம் நெருங்கிவிட்டது".

ஆம், அனந்தராமகிருஷ்ணன் கருத்துப்படி 'காலம் நெருங்கிவிட்டது'. ஏனென்றால் மலர் மலர்ந்துவிட்டது; மணம் பரவிவிட்டது!

அவர் வேறோர் இடத்தில் பேசியிருப்பதையும் கேட்போம்:—

"...எனரகத் தொழில்களில் தென்னகம் புறக்கணிக்கப்பட்டுள்ளது ...... விவசாய பூமியைப் பொறுத்த வரையில் விரிவாக்கப்பட வேண்டிய எல்லையை (தென்னாடு) அடைந்துவிட்டது; இம்பூமியில் மேலும் பணியாற்ற மக்களுக்கு வாய்ப்பிருக்கக்கூடும் என்று நம்புவதற்கில்லை...இன்றியமையாத மூலப் பொருள்கள் கிடைக்கும் பகுதிகளிலேயே, தொழில்கள் துவங்க வேண்டுமென்கிற வழக்கு பல நாடுகளில் செயல் மூலம் பொய்யாகிவிட்டது, நூற்றுக் கணக்கான தொழில்கள் துவங்குவதற்கு தேவையான வசதிகள் சென்னை மாநிலத்தில் அளவுக்கதிகமாகவே உள்ளன வாய்ப்பளிக்கப்பட்டால் எந்தச் சூழ்நிலையையும் ஈடு செய்ய தென்னாட்டவரால் இயலும்...!

இந்த நிலையில் இவை போதும். இதைவிட அதிகமாக பேசிவிட்டால், சுடர்க் கொள்ளியில் நெருப்பு வீசிய செயலாக முடிந்துவிடக்கூடும் என்று, நாள்தோறும் 'பெட்ரோல்' எண்ணெயுடன் பழகும் அனந்தராமகிருஷ்ணன் உணராமலிரார்.

இவைபோதும். அனந்தராமகிருஷ்ணன் போன்ற எதிலும் சேராத பொதுப்படையான கருத்து படைத்தோர் இவ்வளவு பேச முன் வந்ததே இந்த நிலைமைக்கு போதும். '19-வது நாடோடிப் பட்டாளம்' ஆர்த்தெழுந்துவிட்டது. விடுதலைப் பட்டாளத்தின் 'கால் நடை திக்விஜயமும்' அடுத்து ஆரம்பமாகிவிடும்!

தோழர் அனந்தராமகிருஷ்ணன் பேசியுள்ள பேச்சுக்களில் ஒவ்வொரு வாக்கியத்துக்கும் சரித்திரபூர்வமான ஆதாரங்களை முன்வைத்து தென்னகம் எந்த நிலையில் தனது வஞ்சத்தை தீர்த்துக் கொள்ளும் என்பதை பக்கம் பக்கமாக விமர்சனம் செய்ய முடியும் என்றாலும், அனந்தராமகிருஷ்ணன் போன்றோர் இன்னும் எவ்வளவோ 'கக்கித் தொலைக்க' வேண்டியிருப்பதால், பித்தநீர் வெளிவரும் ஆரம்பகட்டத்திலேயே பிணியும் நீங்கிவிட்டதென்ற பிரமையை நமது சமுதாயத்திற்கு உண்டாக்கக் கூடாதல்லவா?

இறுதியாக, டாக்டர் லட்சுமணசாமி, டி. எம். நாராயணசாமி (பிள்ளை) போன்ற கல்வி மேதைகளின் கண்ணிலே, நெருப்புப் பொறி பறக்கிறது. பிறர் மனம் நோகாத ஒழுக்கம், பொறுமை, எட்டிய யோசனை ஆகியவைகளையே அணிகலனாகக் கொண்ட கல்வி மேதைகளின் கண்களிலே கனல் பறக்கிறது. நடைமுறைச் சமுதாயத்தையும், இனிவரும் சமுதாயத்தையும் உருவாக்கும் சிற்பிகள், தங்கள் 'உளி'களுக்கு வேறு வேலை கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள். அவர்கள் உளி சிற்பம் செதுக்குவது தவிர வேறு வேலை செய்ய ஒப்பாது; வேறு துறைக்கு பலவந்தமாகத் திருப்பப்பட்டாலோ குறிதவறாது!

உளி பலவந்தமாகத் திருப்பப்பட்டிருக்கிறது. வடநாட்டு ஏகாதிபத்தியம், கொள்ளிக்கட்டையால் தலையைச் சொரிந்து கொள்ள ஆரம்பித்து விட்டது.

சென்னை மாநிலத்திலே இருப்பவை இரண்டே இரண்டு பல்கலைக் கழகங்கள். ஒன்று சென்னை மற்றொன்று அண்ணாமலை. இந்த இரு பல்கலைக்கழகத் துணைவேந்தர்களும் வடநாட்டை எதிர்க்கிறார்கள் என்றால், தென்னாட்டின் வருங்காலச் சந்ததி அத்தனையும், நிகழ்கால அறிவுப் பெட்டகங்களத்தனையும் எதிர்க்கின்றன வென்றே பொருள்.

உலகம் தெரிந்த மேதை—உலகம் ஒப்புக் கொண்ட பெருங் கலைஞன் டாக்டர் லட்சுமணசாமி பேசுகிறார்:—

ஆங்கிலத்தைப் போலவே இந்தியும் தென்னாட்டுக்கு அந்நிய மொழிதான் இதில் உறுதியான முடிவு காணாவிடில், குழப்பமும் கிளர்ச்சியும் உண்டாகும் இந்தப் பிரச்னையில் நாட்டின் ஒன்றுமை என்பதைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தமே இல்லை.........'

ஆம் அர்த்தமே இல்லை!" 'ஒற்றுமை' என்ன என்பது பற்றி உலகத்துக்கே எடுத்துச்சொல்லும் பெரும் கலைஞர் சொல்கிறார்,

* இததனை நாள் புறக்கணிக்கப்பட்ட தென்னாட்டுக்கு நியாயம் வழங்க வேண்டும்...... தென்னாடு வளம் பெற வேண்டும், வாழ்வு பெற வேண்டும்........"

'ஆன்றவிந்தடங்கிய' சான்றோனுக்குரிய பாணியில், அமைதியாக, சொற்களை உருட்டுகிறார். நியாயம் கிடைக்காது; தென்னாடு வாழ்வு பெறவும் விடமாட்டார்கள். வடவர்கள் என்பது டாக்டருக்குத் தெரியாததல்ல...எடுத்த எடுப்பில் தி. மு. கழகத்துக்கு வக்காலத்து வாங்குவது அவர்கள் போன்றோருக்கு ஆரம்பத்தில் சற்று...!

சட்டி எதுவாக இருந்தாலென்ன? குழம்பின் சுவை அல்லவா நமக்கு முக்கியம்?

இன்னும், 'சுதேசமித்திரன்' 'இந்து' 'நவஇந்தியா' ஆர். கே. நாயர், போன்றோர் கொதிப்புடன் கூறும் கருத்துக்கள் நமது பணியைத் துரிதமாக்கி வருகின்றன.

தென்னாடு முழுவதும் பரவலான ஒரு அதிருப்தி உணர்வு குமுறிக்கொண்டிருக்கிறது. கூடிய விரைவில் 'பாஸ்டன் தேநீர் விருந்து' நடத்தப்படும். இறுதி விடுதலைப் போருக்கு சமிக்ஞை காட்டப்படும்.

நமது ஆறாண்டு காலப் பணி, அபரிமிதமான பலனைத் தருகிறது. தனக்குள்ள வேலையை மலர் செய்து முடிக்கும் வரையில் மாற்றான் அதை அரும்பிலேயே கொய்து மிதித்துத் துவைத்து விட முடியாதபடி காவல் காத்துக் காப்பாற்றி விட்டோம்.

மலர் தன் வேலையைச் செய்து விட்டது —மலர்ந்து விட்டது!

இனி மாற்றானும் அதன் மணத்திலே மயங்கித்தான் ஆக வேண்டும்.

மலர் மலர்ந்து விட்டது— மரணம் இனி அதற்கில்லை.

வடவரின் ஆதிபத்தியச் சூழ்ச்சியை நமது சமுதாயம் இன்னும் கொஞ்ச நாளைக்குத் தாங்கிக் கொள்ளட்டும். வாட்டும் வறுமையையும் கதறியழும் மனைவி மக்களையும், செய்வதறியாமல் தவிக்கும் உற்றார் உறவினர்களையும் இன்னுஞ் சில நாட்களுக்குத் தேற்றட்டும். நீறாக உடல் வெந்துக் கருகினாலும் கருகட்டும்; தன்னம்பிக்கையும் பொறுமையும் பூண்ட இதயம் மட்டும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கட்டும்.

★

சென்னையில் சிறப்புக் கூட்டம்

மாநில மாநாட்டு நிதிக்காக

கோகலே மண்டபத்தில்

21—8—55 ஞாயிறு காலை 10-மணிக்கு

வ. ஆ. மாவட்ட தி மு கழக செயலாளர்

முல்லை. சத்தி அவர்கள் தலைமையில்

தோழர். சி. பி. சிற்றரசு அவர்கள்

ஜூலியஸ் சீசரும் ஜோன் ஆப் ஆர்க்கும் எனும் பொருள்பற்றி பேசுவார்

நன்கொடை : அணா 8, 4. சென்னை மாவட்ட தி. மு. க.

Tel: WIND. Phone : 55373

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ் : 26, லாரி ஸ்டாண்ட் ஆலோகவுனி, மதருஸ்-1
பார்சல் ஆபீஸ் : 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1



மதராஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப் பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்.

N. B :—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ்: 8 கீழ ஆவணி மூலவீதி, பழைய ராயல் ஓட்டல், மதுரை
,, 103-1/127 பழனி ரோடு, திண்டுக்கல்
,, கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருதுநகர்
,, வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்

கால் ஆணிக்கு மேல் பூசும் மருந்து

குதிக்காலிலும், பாதத்திலும், பள்ளம் பள்ளமாயும், சதை வளர்ந்து ஆணியைப்போல் ஏற்பட்டு நடக்கும்போது பாதமானது தரையில் வைக்கமுடியாமலும் கல் பட்டால் துடிதுடிப்பதுமாய் ஏற்படக்கூடிய வியாதியை ஆச்சரியகரமாய் கண்டிக்கக் கூடிய மருந்து இதுவே.

1 அவுன்ஸ் புட்டி 1-க்கு விலை ரு 2-8-0 தபால் சார்ஜ் இனும்

ஸ்ரீ முத்து மெடிகல் ஹால், வியாசர்பாடி, சென்னை-12

கிரேக்க இலக்கியம்

நாரதன்

உலகம் நாளுக்கு நாள் மாறிக் கொண்டே வருகிறது. இதை மக்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் நாம் காண்கிறோம். இலக்கியத்துறை இதற்கு விலக்கல்ல.

தற்கால இலக்கியங்களின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக நின்றது கிரேக்க நாடு. எழுத்துக்கள் கண்டு பிடிக்கப்படும் காலத்திற்கு முன்பே அங்கே இலக்கியம் தோன்றிவிட்டது. அக்காலத்து, ஞாபக சக்தி அதிகமுள்ள கவிஞர்கள் மட்டுமே இதைக் கையாண்டு வந்தார்கள். நாட்கள் நகர்ந்தன, எழுத்து தோன்றலாயிற்று.

ஹோமர் பிறந்தான்! இலக்கியமும் பிறந்தது. அவன் வாழ்வே ஒரு புரியாத புதிர்! அவன் பிறந்த ஆண்டு ஒருவருக்கும் குறிப்பாகத் தெரியாது. ஆயினும் கிருஸ்துவிற்கு முன் ஆயிரத்து நூறுக்கும் எண்ணூறுக்கும் இடையே தோன்றியவன் எனக் கொள்ளப்படுகின்றது. கிரேக்க நாட்டிலே யுள்ள ஏழு இடங்கள் அவனைத் தன் மகன் எனப் பெருமையுறுகின்றன! அவன் ஒரு ஒற்றைக் கண்ணன் என்பது வழக்கு!

இலியட் காவியம் ஒருவராலும், யுலீஸியஸ் வரலாறு ஒருவராலும் இயற்றப் பட்டது என்பது சிலர் எண்ணம்! சாமுவல் பட்லர் எர்வோனியின் ஆசிரியர்! யுலீஸியஸ் வரலாறு ஒரு பெண்ணால் எழுதப் பட்டது என்பது அவரது கருத்து!

'அவ்விரு காவியங்களும் ஹோமர்தான் எழுதினர், ஆயினும் அவை எழுத்துருக் கொள்ளுமுன் வழக்கில் இருந்தவையாகும் என்பது கோத்தே ஸ்கில்லர், மாத்யு ஆர்னல்ட் போன்றவர்களின் தெளிவு.

"ஹோமர் என்று ஒருவர் வாழ்ந்தார், ஆயினும் இலியட், யுலீஸியஸ் வரலாறு ஆகியவற்றை அவரது கற்பனை எனக் கொள்ளுதல் தவறு. ஹோமரின் தோற்றத்திற்கு முன்பே அப்பாடல்கள் வழக்கத்தில் இருந்தன. அவற்றிற்கு மெருகேற்றி அழகிய அமைப்புக் கொடுத்தவரே ஹோமர்" இது ஆக்ஸ்போர்டு கம்பானியன் கருத்து.

இவ்விரு காவியங்களின் பண்பு, மிகுந்த வேறுபாடுடையதாகும். ஊது கொம்பின் நாதம் ஒன்றிற்கு! புல்லாங்குழலிசை மற்றொன்றிற்கு! இவை சுமார் கி.மு. எழுநூறும் ஆண்டில் எழுத்துருப்பெற்றன. இவ்விரு காவியங்களின் பண்பு வித்தியாசத்தை கி. மு. இரண்டாம் நூற்றாண்டு வரை ஒருவரும் அறியவில்லை. இவ்விரு காவியங்களை தோற்றுவித்தவர் ஹோமரே எனின் அவரறிவு வியக்கத்தக்க ஒன்றாகும். ஒரு மனிதனுக்கு ஒரே காலத்து இரு விதமான அறிவுகள் இருந்தன என்பதை எளிதில் விளக்கி விடும் அது! இக் காவியங்களின் நயம் அறிஞர்களுக்கு மட்டுமே கொள்ளும்! அவர்களால் மட்டுந்தான் இவைகளைப் புகழ முடியும்; போற்ற முடியும். இக் காவியங்கள் இனிமையும், அழகும், விவேகமும் ஒருங்கே அமையப்பட்டது என்பது அறிஞர்கள் கருத்து.

கிரேக்கர்களின் டிராய் நகரத்தின் முற்றுகையை விவரிக்கிறது இலியட். இது சிக்கல் பல நிறைந்த காவியம். கடவுள்களில் இருபாலரும் இக் கதையில் பங்கு கொண்டார்கள் எனக் கருதப்படுகின்றது. அசிலிஸ் கிரேக்க வீரன். அஹமெம்னனைத் தாக்குவதற்காகத்தான் உடைவாளை உருவினான் அவன். அப்பொழுது அதீனு என்னும்பெண்தெய்வம்தோன்றினள் அங்கே! தனது நீண்ட அழகிய கேசத்தால் அசிலிஸைப் பின்னி முடித்தாள் அவள்! ஆண்டவனின் தோற்றம் அங்கே ஒருவருக்கும் தெரியவில்லை! அசிலியஸ் கண்களுக்கு மட்டுமே புலப்பட்டாள் அவள். அத் தெய்வத்தின் செய்கையை அவளிடமே ஆட்சேபித்தான் அவன்.

"அஹமெம்னனைப் பழி தானே வாங்க வேண்டும், அதற்குசந்தர்ப்பம் பின்னால் நிறையத் தருகின்றேன்" அத் தெய்வம் அவனுக்கு வாக்குக் கொடுத்தாள்!

போர் முறை இலியட்டிலே அழகாக வர்ணிக்கப் பட்டுள்ளது. ஹெக்டர் என்பான் டிராய் நகரில் தலை சிறந்த ஓர் வீரன். அவன் போர்க்குச் செல்லுகின்றான். அதன் முன் தன் மனையாளிடத்தும், குழந்தையிடத்தும் விடை பெறும் காட்சி எல்லோர் இதயத்திலும் ஆழ்ந்து பதிந்து விடும். அஜக்ஸ் என்னும் வீரனை அழித்து வெற்றிக் கொடி நாட்டினான் ஹெக்டர். மறுவினாடி அசிலிஸ்— ஹெக்டர் போர் ஆரம்பமாகின்றது. இலியட் காவியத்தின் இதயமாக அமைந்தது இப் போர்தான் இங்குதான் ஹோமரின் கவிதை நயம் நமக்கு விளங்குகின்றது. அக்காலத்து போர் எவ்விதம் நடைபெற்றது என்பதற்கொரு எடுத்துக்காட்டு இந்த யுத்தம். இதைப்படிக்கும் ஒவ்வொருவரின் முன்பும் இப்போர் நிகழுவதைப் போன்ற உணர்வு! ஹெக்டர் கை தாக்கப்பட்டு அசிலிஸின் ரதத்தின் பின் கட்டி நிறுத்தப்பட்டடான், டிராய் நகரைச்சுற்றி மும்முறை வலம் வந்தது அந்த ரதம். இலியட் காவியத்தின் ஓர் உப கதை ஹெக்டரின் சவ அடக்கம். டிராய் நகரத்து மரக் குதிரையைப் பற்றி நம்மிடையே இன்று ஓர் கதை உலவி வருகின்றது, இது அங்கே குறிப்பிடப் படவில்லை!

யுலீஸியஸின் வீரச் செயல்களை விளக்குவது யுலீஸியஸ் வரலாறு. இவன் தந்திரம் மிகுந்தவன் ஒப்பற்ற வீரன். டிராய் போரில் கிரேக்க நாட்டின் சார்பில் போர் புரிந்தான். போர் முடிந்தது. தன் நாடு திரும்பும்காலையில் பல வீரச் செயல்களைப் புரிந்தான். அவைகள் மிகப் பிரசித்தமானவை. அவனது நாட்டில் யுலீஸியஸ் மாண்டான் என்ற செய்தி எங்கும் பரவிற்று அவன் மனைவி பெனிலோப் ஒப்பற்ற அழகி. அவளை மறுமணம் புரிய நாட்டின் இளைஞர்கள் பலரும் முன் வந்தனர். அவர்களை அவள் மிகக் கடினமுடன் சமாளித்தாள். ஆண்டுகள் உருண்டன, இளைஞர் விடவில்லை அவளை, யுலீஸியஸும் திரும்பவில்லை.

திடீரென்று ஒருநாள் பெனிலோப் ஒரு பிரகடனம் வெளியிட்டாள் 'நான் ஒரு பின்னல் வேலை செய்யப் போகின்றேன். அது என்று முடிவுறுகின்றதோ, அன்று உங்களில் ஒருவரை மணப்பேன். வாலிபர்கள் மகிழ்ந்தனர். அவள் வருந்தினள் பகற்பொழுதில் மட்டுமே அப்பின்னல் வேலையைக் கைக்கொண்டாள். இரவிலே அதை ஏறெடுத்தும் பாராள். பகலில் எப்பொழுதும் அவள் வீட்டை வாலிபர் கூட்டம் வளைந்துவரும்! அவர்கள் பற்பல அட்டகாசங்கள் புரியலானார்கள்! இந்த நிலையில் ஓர் நாள் பிச்சைக்காரன் உருவில் யுலீஸியஸ் அங்கே தோன்றினன். வாலிபர்களின் அட்டகாசத்தைக் கவனித்தான். பொறுமையுடன் இருக்க முடியவில்லை அவனால்! அவர்களைத் தாக்கினான். அவனது மகன் டெலிமாக்ஸ் தந்தைக்கு உதவினான். இருவரும் அவ்வாலிபர்க் கூட்டத்தைக் கொன்று குவித்தனர். பெனிலோப் மகிழ்ந்தாள், அவன் தன் அன்பு மனைவியுடன் சுகித்தான். கதையும் இன்பமாகவே முடிகிறது.

இவ்விரு காவியங்களும் பழம் புராணங்களாகும். ஆயினும் அவற்றில் சில தத்துவங்களை நாம் காணலாம். 'வாழ்வு போர்கள் நிறைந்தது' என்பதை இலியட் காவியமும், 'வாழ்வு ஒரு பிரயாணம்' என்பதை யுலீஸியஸ் வரலாறும் எடுத்துக் காட்டுகின்றன. இக்காவியங்களை சாப்மேன், போப் ஆகியோர் மொழிபெயர்த்திருக்கின்றனர்.

ஹோமருக்கு அடுத்துத்தோன்றியவன் ஹெஸியட். இவன் கி. மு. ஒன்பதாம் நூற்றாண்டிற்கும் ஏழாம் நூற்றாண்டிற்கும் இடையே தோன்றியவன் எனக் கருதப்படுகின்றது. இவன் இருகாவியங்களை இயற்றினான் "வேலைகளும் நாட்களும்" என்பதில் விவசாய வாழ்வையும் "தேவர்களின் உற்பத்திக் கிரமம்" என்பதில் கிரேக்கக் கடவுள்களின் வாழ்வையும் பற்றி விரிவாக எழுதினான்.

காவியங்களைத் தொடர்ந்து துன்பியல் பாக்கள் தோன்றின. இவைகள் உணர்ச்சியுடன் பாடப்பட்டன. அக்காலத்து இவைகளெல்லாம் புல்லாங் குழலினும் வீணைபோன்ற ஒரு இசைக் கருவியினும் எழுப்பப்பட்டன. அன்று இவ்விதமான இனிமை வாத்தியங்கள்தான் வழக்கில் இருந்தன. இவ்வித பாக்களில் சிறந்து விளங்கினார்கள் பிண்டாரும், ஸைமோனிடஸும்!

கி. மு. 590-ம் ஆண்டு லெஸ்போஸ் தீவிலே தோன்றினள் ஸாபோ அவள் போவன் என்னும் ஒரு வாலிபனைக் காதலித்தாள். ஆனால் அக் காதல் அவளுக்குத் தோல்வியாகவே முடிந்தது. ஆகவே கடலில் குதித்து தற்கொலை புரிந்து கொண்டாள். இவள் வாழ்ந்த காலத்து அனேக பாடல்களை இயற்றினாள். அவைகள் யாவும் காதலையே பிரதி பலித்தன. அவற்றில் அனேக பாடல்கள் பூர்த்தியற்ற தன்மையிலேயே இன்று நம்மிடை உள்ளன. இரு பாடல்களுக்கு மட்டும் முழு உரு உள்ளது. அவளது காதல் தோல்வியோ, அல்லது தற்கொலையோ அவளது புகழுக்கு எவ்வித ஊறும் செய்யவில்லை.

கிரேக்க நாட்டிலே கடவுள்களுக்குப் பஞ்சமல்ல. அவைகளில் ஒன்று தியோனிஸஸ் என்பது. இக்கடவுளுக்காக அடிக்கடி விழாக்கள் கொண்டாடுவதுண்டு. அவ்விழாவில் பலர் சேர்ந்து பாடல் இசைப்பது அவர்கள் பழம்மரபு! இதைமாற்றி அமைத்தான் கோரி பியஸ் என்பவன். ஒருவன் பாடுவதை மற்றவர்கள் திருப்பிப் பாட வேண்டும். இது தான் கோரி பியஸின் அறிமுகம்.

இதை மாற்றி அமைத்தான் எஸ்கிலஸ் இவன் கி. மு. ஐநூற்று இருபது ஐந்தாம் ஆண்டில் தோன்றியவன் இவன் புதியதாக வேறு ஒருவனை அவ்விழாவில் புகுத்தினான். புதுமனிதன், பழைய மனிதனது கேள்விகளுக்குப்பதில் தந்தான். எஸ்கிலஸ் எழுபதிற்கும் மேற்பட்ட துன்பியல் நாடகங்களை இயற்றினான். அவற்றுள் இன்று ஏழு நாடகங்கள்தான் நம்மிடை யுள்ளன.

எஸ்கிலஸின் முறையில் திருத்தம் கொண்டு வந்தான் ஸபோகிளீஸ் கி. மு. நானூற்றுத் தொண்ணூற்றைந்தாம் ஆண்டு பிறந்தவனிவன். வசனங்களும், நடிப்பும் தோன்றலாயின. பாடல்கள் பின்னணிகளாக அமைந்தன, நடிப்பு முதலிடம் பெற்றது. நூற்றுக்கு மேலான நாடகங்களைத் தோற்றுவித்தவன் ஸபோகிளீஸ், ஆயினும் ஏழு நாடகங்கள்தான் உயிருடனிருக்கின்றன, தனது நாடகங்களுக்காக இருபது முறை முதல் பரிசு பெற்றவன் ஸபோகிளீஸ், ஆனால் அவன் இரண்டாவதோ, மூன்றாவதோ பரிசு தனது வாழ் நாளில் ஒரு தடவையேனும் பெற்றானில்லை!

யூரிபிடீஸ் என்பவன் கி. மு. நானூற்று எண்பதிலே தோன்றினான். மீடியா, எலெக்ட்ரா, ஆண்ட்ரோமாச், டிராய் பெண்மணிகள் முதலிய நாடகங்கள் இவன் இயற்றினான். இவைதவிர இன்னும் பல நாடகங்கள் இவன் பெயரைத் தாங்கியுள்ளன. இவன் எழுதிய பதினேழு நாடகங்கள் இன்று இவ்வுலகத்தில் பவனிவருகின்றன.

ஐரோப்பாவிலேயே முதன்முதலில் நாடகங்களை வரைந்தவர்கள் கிரேக்கர்கள்தான். அங்கு பெரிய மைதானங்களில் திறந்த வெளி

பொது வாழ்வின் பாகுபாட்டினை அறிந்து வழி வகுத்தனர் கிரேக்க அறிஞர்கள்

நாடக மேடைகளிருந்தன. நடிகர்கள் அவைகளில் தோன்றி நடிப்பார்கள். அவர்கள் தங்களது வசனங்களை ஊது கொம்புகள்மூலம் வெளியிட்டனர், துன்பியல் நாடகங்கள் பெயர் பெற்றன. எஸ்கிலஸ், ஸபோகிளீஸ், யூரிபிடீஸ் ஆகியவர்கள் துன்பியல் நாடகங்களில் சிறந்து விளங்கினர்கள்; நாடு முழுவதும் மரங்களால் மேடைகள் போடப்பட்டன. ஆறும் நூற்றாண்டிலே அழகிய நாடக அரங்கங்கள் அமைக்கப்பட்டன. ஒரு நூற்றாண்டு காலத்திற்குள் கிரேக்க நாடகங்கள் மிக உன்னதமான ஒரு வரையை எய்தின.

துன்பியல் நாடகங்கள் ஒரு புறம் வளர, மறுபுறம் இன்பியல் நாடகங்கள் உருப்பெறலாயிற்று. துன்பியலைக் காட்டிலும் இன்பியல் எளிதில் கருத்திற்கு இணங்கக் கூடியது; சிற்சில வேளைகளில் இன்பியல், துன்பியலைக் கேலி செய்யுமாறு அமையும். இன்பியல்......வாழ்வின் ஒவ்வொரு தன்மையையும் எழுதில் பிரதி பலிக்கக் கூடிய பண்பு படைத்தது.

அரிஸ்டோபானீஸ் ஐந்தாம் நூற்றாண்டிலே வாழ்ந்தான் இன்பியல் நாடகங்கள் வரையத் தொடங்கினன் இவன். இவனது நாடகங்கள் வேடிக்கையாகவும், அரசியல் தத்துவங்களைக் கேலி செய்வதாகவும் அமைந்திருக்கும் இன்று பெரும்பான்மையான நாடக ஆசிரியர்களும், எழுத்தாளர்களும் இவனது முறையையே பின் பற்றுகின்றனர். அவன் காலத்தில் வாழ்ந்த உயர்ந்தோர் அனைவரும் அவனது நகைச்சுவைக்கு ஆளாயினர் 'மேகங்கள் என்பதில் ஸாக்ரடீஸையும் லிஸிஸ்ட்ரஸ்ட்ஸ் என்பதில் யூரிபிடீஸையும் தனது நகைச்சுவைக்குக் குறியாக்கினன்.

அவனுக்குப் பின் நூறாண்டுகள் கழிந்தபின் தோன்றினன் மினண்டர் என்பவன். இவன் இன்பியல் நாடகத்தில் சிறந்து விளங்கினன் இவனது நாடகங்கள் சிறந்த நகைச்சுவையுடன் காணப்படும். 'நகைச்சுவை மனித இயல்பிற்கும், வாழ்விற்கும் மிகவும் இன்றியமையாத வொன்றாகும்.' பலவித எதிர்ப்புகளுக்கிடையில் இன்பியல் நாடகங்கள் முன்னேறின; வெற்றி வாகையும் சூடின: ஆயினும், இன்பியலும் துன்பியலும் நிறைந்த கிரேக்க நாடகங்கள் இன்று நம்மிடை மிகக் குறைவு.

கிரேக்க நாட்டிலே சரித்திரம் உருப்பெற்றது. வசன நடையும் தோன்றியது. பெரிக்லீஸ் ஆட்சியே ஆதன்ஸிற்கு வந்தான் ஹைரோடட்டஸ். 'சரித்திரத்தின் தந்தை' யென்று இவனை அழைப்பது வழக்கம். கி. மு. நானூற்று எண்பத்து நாலாம் ஆண்டில் பிறந்தவன் ஹைரோடட்டஸ். இவன் கிரேக்கபாரசிகப் போரைப் பற்றி விரிவாக எழுதியுள்ளான். அவன் கண்ணால் கண்டவற்றையும் எழுதினன். காதால் கேட்டவற்றையும் எழுதினன். நாடகங்களில் அவன் கண்ட சில காட்சிகளும் அவனது சரித்திரத்தில் இடம் பெற்றன. பாரசீகத்திற்கெதிராக எகிப்திலே கலகம் செய்தது கிரேக்க நாடு. அக் கலகத்தின் மூலம் ஸைப்ரஸைப் பிடிக்க கி. மு. நானூற்று நாற்பத்து ஒன்பதாம் ஆண்டுவரை முயன்றது கிரேக்கம். அக்காலத்து ஹைரோடட்டஸிற்கு முப்பத்து ஐந்து வயது. பாரசீக—கிரேக்க உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. அதன்படி எகிப்து பாரசீக அரசிற்குற்பட்டது. ஹைரோடட்டஸ் பாரசீகத்தைச் சேர்ந்தவன். அவனது பூர்வீகம் ஹெலிகர்னஸ் என்னுமிடத்தைச் சார்ந்தது. இவன் எழுதி முடித்த தனது சரித்திர ஏடுகளுடன் கி. மு. நானூற்று முப்பத்தி எட்டாம் ஆண்டு ஆதன்ஸை அடைந்து புகழ் பெற்றான்.

பெலோப்போனிஸியன் யுத்தத்தைப் பற்றி விரிவாக எழுதினன் சிடிடஸ்.

இரண்டாவது சைரஸ் பாபிலோனியப் படையெடுப்பிலே கொல்லப்பட்டான். ஆகவே தளபதி இல்லாக் காரணத்தால் பதினுயிரம் கிரேக்க வீரர்களும் பின் வாங்கினர்கள். இதை அனுபஸின் என்னும் ஏட்டிலே குறித்தான் ஸெனோபன்.

கிரேக்க நாடு அதன் தத்துவ ஞானிகளுக்குப் பெயர் பெற்றது. அவர்களிலே முதன்மையானவன் சாக்ரடீஸ். இவன் கல் தச்சன் ஒருவனின் மகனாக தோன்றினன். வாலிப காலத்தில் போர் வீரனாகப் பணியாற்றினன். தன் திறமைக்குப் பல பரிசில்களும் பெற்றான். இவன் அடிக்கடி பொது மேடைகளில் தோன்ற ஆரம்பித்தான். பொது விஷயங்களை விரிவாக ஆராய்ந்தான், 'பகுத்தறிவு என்றால் என்ன?' என்ற ஆராய்ச்சி அக்காலத்து நடந்து கொண்டிருந்தது. குதர்க்க வாதிகள் என்ற ஒரு சாரார் கிரேக்க நாட்டு தத்துவங்களை ஆராயத் தொடங்கினர்கள். இவர்கள் அழகு. உண்மை, அமைப்பான வாழ்வு முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்து வந்தார்கள். தங்கள் தத்துவங்களை வாலிபர்களிடையே பரப்பினர்கள். சாக்ரடீஸ் இவைகளில் உற்சாகம் காட்டினன். அடிக்கடி தர்க்கவாதத்தில் புகுந்தான். இத்தகைய சூழ்நிலையிலே சாக்ரடீஸிற்கு அனேக சிஷ்யர்களும், ஆதரவாளர்களும் தோன்றினர்கள்.

சமய சாத்திரங்களில் நம்பிக்கை யில்லாதவன் சாக்ரடீஸ். உண்மையான அறிவு தத்துவ ஞானத்திற்கு அவசியமானது என்ற உண்மையை வெளியிட்டான், அமில சோதனையில் கடக்காத பொருட்களை இவன் நம்பவில்லை; ஆதரிக்கவுமில்லை. சாக்ரடீஸின் இச்செய்கை அவனது ஆதரவாளர்களுக் குள்ளேயே விரோத மனப்பான்மையை உண்டாக்கியது; அவர்களுக்கு இச்செய்கை தெய்வீகத் தன்மையை எதிர்ப்பது போலவும் அவர்களது எண்ணங்களைத் தடைசெய்வது போலவும் தோன்றலாயிற்றும்!

சாக்ரடீஸின் ஆதரவாளர்களில் பிளேட்டோ முக்கியமானவன். இவன் பிற்காலத்தில் சாக்ரடீஸின் கொள்கைகளை எழுதிப் புகழ் பெற்றான். தத்துவ சபையொன்று அமைத்தான். இது ஒன்பது நூறு காலம் புகழுடன் விளங்கியது. ஸெனோபன் சாக்ரடீஸின் மரணம்பற்றி விவரித்தான். இசோகிராட் என்னும் அரசியல் ஞானியும் சாக்ரடீஸின் சிஷ்யனுவான்.

ஆதன்ஸை ஆட்சி புரிவதற்கு ஸ்பார்ட்டாவினல் முப்பது கொடுங்கோலர்கள் நியமிக்கப் பட்டார்கள். அவர்கள் தலைவன் கிரிட்டியஸ், ஆதன்ஸின் கல்விச் சாலைகளை அழிக்க வேண்டியது இவர்கள் கடமை! இவ்வாறு நியமிக்கப்பட்ட கிரிட்டியஸும் சாக்ரடீஸின் சிஷ்யன்தான்! அந்த முப்பது கொடுங்கோலர்களையும் ஒழித்து கிரிட்டியஸைக் கொன்ற சார்மிடஸ் என்பவனும் சாக்ரடீஸின் ஆதரவாளன்தான்!

சாக்ரடீஸின் பிற்கால சீடர்கள் பெரும்பான்மையோர் வாலிபர்கள்தான். சாக்ரடீஸின் விரோதி அனிட்டஸ். இவனது மகன் சாக்ரடீஸின் சீடர்களில் ஒருவன். அவன் மது அருந்தும் வழக்கமுடையவன். தன் வாழ்வு அதிலேயே வெற்றியைக் காண்கின்றது என்னும் கருத்துடையவன், இதை ஆதாரமாகக் கொண்டு சாக்ரடீஸ், ஆதன்ஸின் வாலிபர்களைக் கெடுக்கின்றான்; அவர்களது கடமையையும், தேசாபிமானத்தையும் அழித்தான்என்று அவன்மேல் குற்றம் சாட்டப்பட்டது. அதன் விளைவாக கி. மு. முன்னூற்று தொண்ணூற்றுஒன்பதாம் ஆண்டில் அவனுக்குவிஷம் கொடுக்கப்பட்டது.

பிளேட்டோ கி,மு. நானூற்று இருபத்து ஏழாம் ஆண்டு பிறந்தான். எண்பது வருடகாலம் வாழ்ந்தான். சாக்ரடீஸின் மனப்போக்கிற்கும், இவனது போக்கிற்கும் வித்தியாசமுண்டு. இவன் அழகாகவும் நேர்த்தியாகவும் எழுதுவான். சாக்ரடீஸிற்கு தொடர்ந்து எழுதும் வல்லமையில்லை. பிளேட்டோ அழகிய பொருட்களை அணுகினன். சாக்ரடீஸ் வெறுத்தான். பொதுவாழ்வின் பாகுபாட்டிலும், மனித வாழ்க்கையின் சந்தோஷத்திலும் பிளேட்டோ தன் கவனத்தை செலுத்தினன். ஆனல் சாக்ரடீஸோ தட்பவெட்பத்தில் கவனமும் மனிதர்களோடு வாழ்கின்ற மற்ற உயிரினங்களைப் பற்றியும் ஆராய்ந்தான். 'வாழ்க்கை ஒரு பொய்; ஆத்மா மட்டுமே வாழ்கின்றது'. என்பது சாக்ரடீஸின் கருத்து.

மனப்போக்குவேருயினும் சாக்ரடீஸின் மீது பிளேட்டோவிற்கு மிகுந்த பற்றுதல் உண்டு. தனது ஏடுகளில் சாக்ரடீஸையே முதல் வனக்கினன். அநேக அத்தியாயங்களில் சாக்ரடீஸின் அறிவுரைகள் காணப்படும். அவைகள் யாவும் உண்மையில் பிளேட்டோவின் கொள்கைகளாகும்.

மனித வாழ்வைப்பற்றி நிச்சயமற்ற எண்ணங்கள் உலவிவந்த ஒரு சமூகத்தில் வாழ்ந்தவன் பிளேட்டோ, எங்கும் மனிதத் தன்மையைப் பற்றிய கேள்விகளாகவே யிருக்கும். நாட்கள் வளர மனிதர்கள் தங்களது சுதந்திரத்தை உணர்ந்தார்கள். சமூகம் முன்னேறியது. செல்வம் பெருகியது. பொறாமை எழுந்தது. ஹெரோடட்டஸின் சரித்திரம் அரசாங்கத்தால் வெறுக்கப் பட்ட காலம் அது.

நாடெங்கும் குழப்பம்! போர்! இவ்விதச் சூழ்நிலையிலே பிறந்தவன்தான் பிளேட்டோ. மக்கள் ஒற்றுமையின்றி வாழ்ந்தார்கள். இதைக் கண்ணுற்ற பிளேட்டோவின் மனம் எண்ணக் குவியலில் புகுந்தது, ஒற்றுமையைப் ப்பற்றி விரிவாக எழுத ஆரம்பித்தான். கணவன் —மனைவி — பெற்றோர் —குழந்தைகள் இவர்களது தொடர்பைப்பற்றி சாக்ரடீஸ் விளக்கவில்லை. 'குடியரசு' என்னுமொரு ஏடு தீட்டினன் பிளேட்டோ. அதில் ஒரு மனிதன் நாட்டு மக்களுடன் எவ்விதம் சேர்ந்து வாழ வேண்டும் என்பதை விவரித்தான். இவனது 'தரும நூல்' முடிவு பெருத ஒன்றாகும். அதில் சமூக சட்டதிட்டங்களைக் குறிப்பிட்டிருக்கின்றான்.

பிளேட்டோவின் வாழ்வோடு சரித்திரமே மாறுபாடு அடைகின்றது. மனித வாழ்வின் உயர்விற்கு அவனது கருத்துக்கள் மிக அவசியமானதாகும். "உங்கள் வாழ்க்கையை நேர்மையான வழியில் கடைப்பிடியுங்கள் உங்களைத் துன்பத்தில் ஆழ்த்தும் காரியங்களை, விட்டொழியுங்கள். உங்களை ஆதிக்கம் செலுத்தும் சில மூடகாரியங்களை உங்களால் விட்டொழிக்க முடியும் நீங்கள் விரும்புவது போல உங்களால் எதுவும் செய்ய முடியும்" என்கிருன் பிளேட்டோ.

பிளேட்டோவின் வாழ்வோடு ஒன்றி, அவனுக்கு உதவிபுரிந்தவன் இசோகிராட்டஸ், இவன் பத்திரிகைத் தொழில் நடத்தி வந்தான். இவன் ஹெரோடட்டஸின் கொள்கைகளைப் பரப்பினன், பாரசீகத்திற் கெதிராக் கிரேக்கம் ஒன்று சேருவதற்காகப் பாடு பட்டான் இனது அரசியல் ஞானம் பிளேட்டோவை விடப் பரந்ததாகும் இவனது கடைசி காலத்தில் முடியரசைக்கண்டான் அது தான் மாசிடோனியாவில் பிலிப்பின் ஆட்சி 'ஒவ்வொரு நகரும் தனித்தனியே மக்களாட்சி நிறுவுவதை பொதுவான ஒரு முடியாட்சியே சிறந்தது.' எனக் கருதினன் இசோகிராட்ஸ்.

தத்துவ சபையின் மூலம் தன் கொள்கைகளைப் பரப்பினன் பிளேட்டோ. அவனது கடைசி காலத்தில் அரிஸ்டாட்டல் என்னும் ஒரு வாலிபன் தத்துவ ஞானத்தில் சிறந்து விளங்கினன். இவன் ஒரு வைத்தியனின் புதல்வன். இவனது மனப்போக்கு பிளேட்டோவிலிருந்து மாறுபட்டது. இவன் சமயக் கோட்பாடுகளில் நம்பிக்கையற்றவன். அவ

4-ம் பக்கம்.

சமாதான விருது

சோமு

நாரதர் கொண்டுவந்த மாம்பழத்தைப் பெறுவதற்காக சுப்பிரமணியர் தன் மயில் வாகனத்தில் ஏறி இப்பிரபஞ்சம் முழுவதும் சுற்றினாராம்! ஆனால் கணேசரோ தன்னுடைய பெருச்சாளியின் மீது ஏறி அமர்ந்து கொண்டு பரமசிவனையும்— பார்வதியையும் மூன்றுமுறை சுற்றி வந்து மாம்பழத்தை தட்டிச் சென்றுவிட்டார், எங்கெங்கோ அலைந்து வந்த சுப்ரமண்யத்துக்கோ— நம் அமைச்சர் அல்ல —பிரம்மனைத் தலையில் குட்டிய ஆண்டவன் சுப்ரமண்யத்துக்கு ஏமாற்றமே காத்துக் கிடந்தது,

அதைப்போலவே உலக சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக பண்டித நேருவும் விமானத்தில் எங்கெங்கோ அலைகிறார்! போகிறார்! வருகிறார்! இருப்பினும் இன்னும் சமாதானம் நிலைநாட்டப்படவில்லை! ஆனால் மற்ற வல்லரசுத் தலைவர்களோ எங்கும் அலையாமல் சீர்குலையாமல் ஜினிவாவில் கூடினர். சமாதானம்! சமாதானம்! என்று பேசினர், சமாதானம் நிலைநாட்டப்பட்டதோ, இல்லையோ, எனினும் அவர்களெல்லாம் பண்டித நேருவைப்போல பறந்து பறந்து ஊர் சுற்றுவதில்லை.

நான் நினைக்கிறேன் — உலக சமாதானத்திற்கான நோபல் பரிசை நேருவுக்கு கொடுத்துத் தொலைத்து விட்டாலாவது இந்த ஊர்சுற்றும் வழக்கத்தை ஒரு வேளை பண்டித நேரு கைவிட்டாலும் விட்டுவிடலாம், ஏனெனில் உள்நாட்டிலே ஒவ்வொரு பிரச்னையும் ஊசிப்போகும் அளவுக்கு வளர்ந்திருக்கின்ற இந்த வேளையில், ஊராள வந்தவர் உலகசமாதானத்திற்காக ஊர் சுற்றுவதையே வாடிக்கையாகக் கொண்டிருப்பது விந்தையிலும் விந்தையல்லவா?

இப்படியெல்லாம் உலகபவனி வரும் பண்டித நேருவின் நேரடி வாரிசுகளான தேசியத் தோழர்கள், பார்த்தாயா எங்கள் நேருவின் மகிமையை, அவருக்கு வெளிநாட்டில் இருக்கும் மதிப்பை கேட்டாயா, என்றெல்லாம் சிந்து பாடுகின்றனர்!

நேரு பண்டிதருக்கு இவ்வளவு புகழும் — பொலிவும் இருக்கின்றது என்பதை நாமும் ஒப்புக் கொள்கிறோம். ஆனால் அதற்குக் காரணங்கள் பல உள்ளன.

இன்று எல்லா வல்லரசுகளும் வாயளவில் சமாதானச் சந்தை விரித்திருக்கின்றன. நடைமுறையில் பார்க்கப்போனால் ஒவ்வொரு நாடும் தனக்கு பலம் தேடிக் கொள்ள, எந்தெந்த நாடுகளுடன் எப்படியெப்படி ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும் என்று திட்டம் தீட்டி செயல் புரிகின்றன. இந்த வகையில் இந்தியத்துணைக் கண்டத்திலே இருக்கின்ற ஏராளமான மக்கள் தொகைதான்—மற்ற நாடுகளின் மனதைக் கவர்ந்திருக்கிறது.

இந்தியாவில் இருக்கின்ற பல கோடிக்கணக்கான மக்கள் ஆதரவு தனக்கிருக்குமானால் தானே ஏகச் சக்கிராதிபதி ஆகலாம் என்ற எண்ணம் ஒவ்வொரு வல்லரசுக்கும் இல்லாமலில்லை உலகப் போர் மீண்டும் வந்தால், இந்தியா நடுநிலமை வகிக்க முடியாத நிலைமை ஏற்பட்டால் — தன்னுடைய எதிரிகளை எதிர்க்க இங்கே என்ன விஞ்ஞான சாதனம் இருக்கிறது — ஆனாலும் இருக்கின்ற எண்ணற்ற கோடி மனித உயிர்களின் சக்தி ஒன்றை நம்பி அது எதிலும் ஈடுபடலாம்.

இந்த மனித உதவியைப் பெறுவதற்காகத்தானோ அல்லது மனித சக்தியின் ஒத்துழைப்பைப் பெறுவதற்காகதானோ இந்தியாவுக்கு மற்ற வல்லரசுகள் மதிப்பளிக்கின்றன என்பதும் ஒரு காரணமாக ஏன் இருக்கக் கூடாது?

இன்றுள்ள நிலையில் இந்தியாவிடம் மற்ற நாடுகள் எதிர்பார்க்கக் கூடியது இது ஒன்றுதான். ஆக இவ்வளவு பெரிய நாட்டின் பிரதமர் என்றக் காரணத்தால் நேரு பண்டிதருக்கு மகத்தான வரவேற்புகள் கிடைப்பதில் வியப்பொன்று மில்லை.

அடுத்தபடியாக இங்கிருந்து—தென்னாட்டிலிருந்து-அகில உலக அரசியல் அரங்கங்களில் கலந்து கொள்ளும் அறிஞர்கள் — ஆற்காடு இராமசாமி,—இலட்சுமணசாமி, வி. கே. கிருஷ்ணமேனன் —காலஞ்சென்ற பெனகல் நரசிங்கராவ் ஆகியோரின் ஒப்பற்ற ஆலோசனைகள் — அறிவுரைகள் ஏற்படுத்திவைத்த நிலை.

இப்படிப்பட்ட அறிஞர்கள் இருக்கும் நாட்டின் பிரதமராயிற்றே! அவருக்கு வரவேற்பு பிரம்மாண்டமாகவன்றோ இருத்தல் வேண்டும் என்ற எண்ணத்தில் கொடுக்கப்படும் வரவேற்புகளை ஆச்சரியமானது என்று எப்படிக் கொள்ள முடியும்.

எந்த நாட்டிற்கும் நேருவின் எண்ணங்களை தக்க முறையில் தெரிவிக்கும் வி. கே. கிருஷ்ணமேனன் எந்த நாட்டவர் என்று எண்ணிப் பார்த்தால் தெரிய வரும் நேருவின் மகிமை. நாம் இப்படிக் கூறுவதால், பண்டித நேருவின் பெருமையை குறைத்துச் சொல்வதாக நினைக்கக் கூடாது. சொந்த நாட்டிலே சோற்றுப் பஞ்சமும்—வேலையில்லாத் திண்டாட்டமும் —இன்னபிற பிரச்னைகளையும் வைத்துக் கொண்டு இவர் உலகசமாதானத்திற்கு உழைப்பது எங்ஙனம் இயலும்?

சௌ-என்-லாய்--சீன நாட்டுப் பிரதமர். இவரைப் போலவா ஊரைச் சுற்றிக் கொண்டு வருகிறார்? தன் நாட்டிலே யிருந்து ஆக்க வேலைகளைக் கவனிக்கவில்லையா? ஏன்? ஆசியக் கண்டத்தில் இருக்கின்ற எந்த நாட்டுப் பிரதமர் இவரைப் போல், இருக்கின்ற முக்கிய வேலைகளையெல்லாம் விட்டுவிட்டு, சமாதான விருது வாங்க ஓடுகின்றனர்?

இவர் செல்லுகின்ற நாடுகளிலே சமாதானம்! சமாதானம்! என்ற பிரசங்கங்கள்! பிரசங்கம் முடிந்ததும் உடனே அந்நாட்டின் ஆக்க வேலைகளைப் பார்வையிடுதல், சமீபத்தில் வெளியிடப்பட்ட செய்திப் படமான நேருவின் ரஷ்ய விஜயத்தில்—நேரு ரஷ்ய நாட்டின் தொழிற்சாலைகளைப் பார்வையிடும்போது அவருடைய முகம் எப்படிக் காட்சிதருகின்றது தெரியுமா? நூற்றுக்கு எண்பது மார்க் வாங்கின ஒரு மாணவன் தன்னுடைய மார்க்கை நூற்றுக்கு மூன்று மார்க் வாங்கிய மாணவனிடம் காட்டினால் அவனது முகம் எப்படி 'பிரகாசிக்குமோ' அப்படிப் பிரகாசிக்கிறது.

மேல்நாட்டுப் பிரதமர்கள் யாராவது இங்கு வந்தால், வடநாட்டிலுள்ள மிகமிகப் பெரிய தொழிற்சாலைகளை, அணைக்கட்டுகளை எல்லாம் காட்டி மகிழ்விப்பார். அப்படியே தென்னாட்டுக்கு அழைத்து வருவார். இது என்ன கோயில் தெரியுமோ? இது யாரால் கட்டப்பட்டது அறிவீரோ? இந்தத் தலத்தின் மகிமை இதுதான்? என்று அடுக்கிக் காட்டத்தானே முடியும்.

என்ன இந்தப் பகுதியில் ஒரு சிறிது கூட தொழில் வளர்ச்சி காணோம் என்று கேட்டால்—பண்டித நேரு என்ன சொல்வார்? வருபவர்கள் இதையெல்லாம் கேட்காதிருக்க வேண்டுமே!

ரஷ்ய இதழ் 'ப்ராவ்தா' எழுதுகின்றது என்றால் ஏன் எழுதாது? வடக்கில் இருக்கும் தொழில் வளர்ச்சியைப் பார்த்துவிட்டு—அதுதான் இந்தியா என்று நினைத்துவிட்டு — இந்தியாவில் காங்கிரசின் சாதனை—நேருவின் செயலாற்றும் தன்மை —என்றெல்லாம் எழுதுகிறது. அதற்கென்ன தெரியப் போகிறது இங்குள்ள கொந்தளிப்பும் குமுறலும்!

ஆக இப்படிப்பட்ட சமாதான தூதர்—நேரு பண்டிதர் அவர்கள் அரசியலில் ஒரு மாதிரி சோஷலிஸத்தைச் சுமந்து அலைந்துவருகின்றார்! நம் நாட்டிலே தின்று கொழுக்கும் சாமியார்கள் எண்பது லட்சம் பேர் என்பார். ஆனால் அதைஒழிக்க என்ன வழி என்று கூறமாட்டார். ஒரு நாடு விட்டு இன்னொரு நாடு ஓடும் நாடோடிதான் இந்த நாட்டிலே இன்னகுறை யிருக்கிறது என்று கூறுவானே தவிர, அதைப் போக்க என்னவழி என்று கூறமாட்டான். ஏனெனில் அவன் நாடோடி! இதைப் போலத்தான் நாட்டிலே உள்ள குறை அது! குற்றம் இது! என்றெல்லாம் கூறும் நேரு பண்டிதர் அதைப் போக்குவதற்கான முறைகளைக் கூறமாட்டார் — வழிவகைகளையும் சொல்லமாட்டார்.

சீக்கியர்கள்—நாடு தேவை என்கின்றனர், நாகர்கள் நாடு தேவை என்கின்றனர். நாம் நாடு கேட்கின்றோம். நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டம் பற்றாக்குறை இப்படி நிலைமை யிருக்கிறது! இதையெல்லாம் சுமுகமான முறையில் தீர்த்து வைக்க வழியைக் காணோம். ஆனால் உலக சமாதானம்.........!

ஆசியப் பிரச்னையைச் சிறிதும் கவனியாத வல்லரசுத் தலைவர்களை இடித்துரைத்து, என்னய்யா நீங்கள் நால்வர் கூடிப் பேசினீர்களே! ஆசியப் பிரச்னையைக் கவனித்தீர்களா? இன்று ஆசியாவில் தானே கொந்தளிப்பு அதிகம் காணப்படுகிறது. மக்கள் சீனாவை ஐ நா. சபையில் சேர்த்துக் கொள்வதுபற்றி ஒரு வார்த்தைகூடக் காணோமே. மற்ற ஆசியப் பிரச்னைகள் அப்படி அப்படியே உள்ளனவே. இந்த லட்சணத்தில் நீங்கள் ஐரோப்பிய விவகாரங்களை மட்டும் அலசிவிட்டு அதனுடைய முடிவுகளைக் கூட வல்லரசு நாடுகளின் வெளிநாட்டுப் பிரதமர்கள் முடிவு செய்வர் என்று சொல்கிறீர்களே. —ஐரோப்பிய பிரச்னைதான் உலகப் பிரச்னை என்று எண்ணிவிட்டீரா? என்று கேட்டிருந்தால் உண்மையிலேயே, இவருக்கும் உலக சமாதானத்துக்கும் சம்மந்தம் இருக்கின்றது என்றுவது கூறலாம். அதையும் செய்யக் காணோம்.

ஆனால் அதே நேரத்தில் விடுதலை இயக்கத்தினரைத் தாக்கிப் பேசச் சொன்னால் போதும்! சமாதானத் தூதரின் வாயிலிருந்து சரளமாக வெளிவரும் வார்த்தைகள். காட்டுமிராண்டிகள்! முட்டாள்தனம்! சிறுபிள்ளைத்தனம் என்றெல்லாம் கூறுவார். போதாக்குறைக்கு அவரின் சர்க்காரிலுள்ள சகாக்களை விட்டு வசைபுராணம் பாடச் செய்வார்.

ஆகவே ஓயாது உலகத்தைச் சுற்றிவரும் நேருவிற்கு உலக சமாதானத்திற்குரிய நோபல் பரிசைக்கொடுத்து விட்டால் இப்படியெல்லாம் ஊர் சுற்றமாட்டார் என்றுதான் நாம் நினைக்கவேண்டியிருக்கின்றது. மாம்பழத்திற்கு அலைந்த சுப்பிரமணியரின் முடிவைப் போலல்லாமல் நேருவுக்கு சமாதான விருது கிடைத்தாலாவது அந்த மகிழ்ச்சியில் நாட்டில் தங்கி ஆக்க வேலைகளைக் கவனிப்பார் போலும்.

எப்படியாவது நேருவுக்கு சமாதான விருது கிடைத்துவிட்டால் அவரது புகழ் இன்னும் ஒருபடி ஏறிநிற்கும் என்பது வடநாட்டுத் தேசியத் திருமேனிகளின் எண்ணமென்றும் சிலர் கூறுகின்றனர்.

பார்வதி புத்திரனுக்கே மாம்பழம் கிடைக்கவில்லை — இந்த பாரத ரத்னத்துக்கு...?

உன்னையே நீ எண்ணிப்பாரு!

"பூவையான்"

"ஆம்; உன்னைத்தானப்பா, சொல்கிறேன். உத்தமத் திராவிட இனத்தின் வழித் தோன்றலே! உன்னைத்தானப்பா சொல்கிறேன். 'உன்னையே நீ எண்ணிப் பாரு!' அடுத்தபடியாக சோற்றுலடித்த பிண்டங்கள் சொல்லுமே 'இந்த உலகத்தில் எது சொந்தம் யோசித்துக் கூறு!' என்று. அதையும் நான் சொல்வேன் என்று எதிர் பார்க்கிறாயா! அதுதான் இல்லை.

அவன் ஒரு நீறு பூசி; சோறு யாசிக்கும் சந்நியாசி. அவனுக்கு கழுத்திலே கொட்டையுண்டு. வாயோ 'சிவ சிவ' என்று பாடும். மனமோ எவ(ன்) எவ(ன்) என்று ஓடும். அவன் சத்திரத்துச் சாப்பாட்டு ராயன்; சாவடித் தூங்குமூஞ்சி. 'உலகே மாயம்; வாழ்வே மாயம்; எனக்கொரு காலணா போடுங்க அதுதான் நியாயம்' என்பான்.

காயமே இது பொய்யடா; காற்றடைத்த பையடா' என்பான். அந்தப் பொய்யான காயத்தை மெய்யாக்கக் காற்றடைத்த பையில் சோற்றை யடைக்கத்தான் 'காலணா கொடுங்க சாமி' என்று பல்லெல்லாம் தெரியக் காட்டிப் பரிதாபச் சிந்துபாடுவான், அந்தப் பார்ப்பாரைக் கொல்லி. (பார்ப்பவர்களை அருவருப்புக் குள்ளாக்கிக் கொல்லாமற் கொல்பவன் அதைப்போல நான் சொல்லவில்லை, அப்பனே! உன்னையே நீ எண்ணிப் பாரு! என்றுதான் சொல்கிறேன்.

தரணியாண்ட தமிழனே! என்னைப் பார்க்காதே. நான்தான் பைத்தியக்காரனாயிற்றே! அறிஞனும் பைத்தியம் கவிஞனும் பைத்தியம், காதலனும் பயித்தியம்; இதோ நானும் பைத்தியம். அப்படித்தானே முடிவு கட்டிவிட்டார்கள் மதியிழந்தோருக்கு முடிசூட்டும் மக்கள். ஆகவே என்னைப் பார்க்காதே. நான் விகாரமாகக் காட்சியளிக்கலாம். உன் விருப்பத்திற்கு மாறாக தோற்றமளிக்கலாம். ஆகையால் பஞ்சையாய்ப்போன தமிழனே! உன்னையே நீ யெண்ணிப் பாரு. ஏன்! என்னப்பா விழிக்கிறாய்! எப்படிப் பார்ப்பதென்று? சொல்கிறேன் கேள். பெரிய கண்ணாடி முன் நின்று உன்னுடைய உருவத்தை நீயே பார்த்துக்கொள் போ. போ!

நான் சொன்னதைச் செய். நான் செய்வதைச் செய்யாதே. புரிகிறதா! நாளைக்கு வந்து உன்னைச் சந்திக்கிறேன் நான் வரட்டுமா!...சரி; நான் வருகிறேன்.

இப்படி யாரையோ நோக்கிப் பேசுவதைப் போல் பேசிக் கொண்டிருந்த அந்த 'மாதிரி'ப் பைத்தியம் சிரித்துக் கொண்டே கூடியிருக்கும் யாரையும் பொருட்படுத்தாமல் சென்றுவிட்டது. எல்லோரும் அந்தப் பைத்தியத்திற்கு வழிவிட்டு அவனையே வெறிக்க வெறிக்கப் பார்த்து கொண்டிருந்தனர். அவன் சிரித்துக் கொண்டே மிடுக்குடன் சென்று கொண்டிருந்தான். ஆனால் அங்கு கூடியிருந்த அனைவருடைய சிந்தனை விளக்கையும் ஏற்றிவிட்டுத் தான் சென்றான். தெளிவு ஒளியை பரப்பிவிட்டுத்தான் சென்றான்.

அந்தத் தெளிவின் ஒளிவீச்சு காட்டிய திசையிலே நான் சென்றேன். வீடு நெருங்கிவிட்டது. இல்லை; நான்தான் வீட்டை நெருங்கிவிட்டேன். அப்பா என்ற அமுதக் குரல் ஒலித்து ஓடிவந்த என் அருமருந்தன்ன தனிப்பெருஞ் செல்வம்—மழலை மொழி யுதிர்க்கும் மாணிக்கப் பெட்டகம்—தள்ளிவரும் வெள்ளி நிலவின் இளம்பிறையை அப்படியே அள்ளி அணைத்துக் கொண்டேன். உச்சி முகர்ந்தேன். உள்ளங் காலில் முத்தமிட்டேன். ஆகா! அப்போது நான் பெற்றபேறு யாரே பெற்றிருப்பர்! 'குறுகுறு' வென்று நடந்த அந்த நடை 'சிறு கை நீட்டிய' அந்த 'பாவம்' அப்பப்பா! அதற்கு ஈடு எதுவுமே இல்லை. பிறகு சாவு வெள்ளத்தைத தடுக்க சோறு அணையைக் கட்டினோம். உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டோம்.

அதோ என் எதிரே ஒரு உருவம் தெரிகிறது. ஒல்லியான குச்சி உருவம். உச்சி உலர்ந்துபோன தலை, நெற்றிக்கு கீழே இரு வற்றிப்போன குழிகள்; அவற்றுள் உருளும்...... போதும்; போதும். விளங்கிவிட்டது. எதிரிலிருக்கும் கண்ணாடியில் நான்தான் அப்படித் தோற்றமளித்தேன்.

'ஏ சிங்கத் தமிழகத்து மங்காப் புகழ் விளக்கே! எங்கே உன் தங்கத் திருமேனி! பாராண்ட பழந்தமிழனின் பரம்பரைதானே நீ! உன் நெடிய உருவெங்கே! திண்தோள் வலிவெங்கே! மலைபோன்ற மார்பெங்கே! தலையிலே முடியெங்கே! கையிலே வேலெங்கே! இடையிலே வாளெங்கே! அதெல்லாம் போகட்டும். நிமிர்ந்த உன் பார்வை யெங்கே!'

இந்தக் கேள்விகள் எங்கும் எதிரொலித்தன, ஒலி கேட்கிறது. ஆனால் உருவம் தெரியவில்லை. எதிரே யிருந்த கண்ணாடியில் என் உருவம்தான் தெரிகிறது. ஆனால் என் உள்ளக் கண்ணாடியில் மாலை பேசிய அந்த மாதிரிப் பைத்தியந்தான்காட்சியளித்துக்கொண்டிருந்தது. அதனுடைய குரலொலி தான் போலும் அது! என் உள்ளம் சிலிர்த்தது; உடல் சில்லிட்டதுபோன்ற உணர்ச்சி ஏற்பட்டது. அந்தக் கேள்விகள் என்னை அப்படிச் செய்துவிட்டன.

அந்த 'மாதிரிப்' பைத்தியம் சொல்வது போல் செய்வதாக ஒப்புக்கொண்டேன். அப்படியானால் அதோ ஓர் உருவம் ஆடி அசைந்து அடிமேல் அடி வைத்துச் செல்கிறதே அதன் பின்னாலேயே தொடர்ந்து செல் என்றது அந்த மா. பை,—என் உள்ளக் கண்ணாடியில் தோன்றும் உன்மதத்தனின் உருவெளித் தோற்றம்.

அந்த நகரும் மாமிச பர்வதத்தின் பின்னால் நானும் தொடர்ந்து சென்றேன், அது ஒரு பெரிய மாடி வீட்டினுள் நுழைந்தது, ஒரு கையிலே பஞ்சாங்கக் கட்டு; மறுகையிலே விசிறி. வாய்க் குகையிலே வெற்றிலை பாக்குக் கலவை. இத்தகைய தோற்றத்தோடு உள்ளே நுழைந்தது அந்த உருவம். எதிர்கொண்டு வந்து கும்பிட்டு வரவேற்றார் அந்த மாடி வீட்டுக் கோமுகவரர்.

'என்ன முதலியார்வாள்! ஒருமாதிரியா உட்கார்ந்திருக்கேள். ஆலையிலே வேலை செய்யறவா எல்லாம் ஒழுங்காத்தானே நடந்துக்கறா! எல்லாம் நன்னா நடக்கும் ஆண்டவன் அருள் இருக்கும்போது அவ்விடத்துப் பாக்கியத்துக்குக் குறை வேது! ஆனா இந்த சுயமரியாதைக் காரன்கள் எதைஎதையோ வாயில் வந்ததை யெல்லாம் உளறிண்டு போறா, தெரியுமோன்னோ. அதனால்தான் காலமே வரவரக் கெட்டுப் போச்சு. 'கடவுள் எங்கே! காட்டு! என்கிறானுங்க ஆனா முத்துராமலிங்கத் தேவர் இருக்காரோன்னோ? அவர் கேட்டார் பாருங்கோ ஒரு கேள்வி. உன் உயிர் எங்கே? காட்டு! என்று. அப்படியே வாயடைத்துப் போயிட்டானுங்க பயல்கள். குன்றக்குடி போன்ற மடத்தடிகள் இருக்கவே இருக்கா பாருங்கோ இந்த நாஸ்திகம் பேசறவாளை எல்லாம் அடக்கணும்னா இப்பத்தான் நாம் முன்னைவிட ஆராதனை, அபிஷேகம் எல்லாம் பிரபலமா நன்னா விளம்பரப் படுத்திச் செய்யணும். அதுக்காக இப்போ கும்பாபிஷேகம் நடக்கப்போறதோன்னோ, அதிலே அவ்விடத்து உபயம் இருக்கவே இருக்கு. இன்னுங்கூட ஒரு ஆயிரம் பிராமணாளுக்கு அமுது படைச்சேள்னா இந்த ஊருக்கே பெரிய நன்மை செய்ததாக ஆகும். ஹ...ஹி...ஹி...... இதை நான் சொல்லணுமா என்ன! அவ்விடத்து. வாத்சல்யம் அப்படியே அப்பழுக்கில்லாமெ இருக்கும். நான் வர்ரேன்; தயை செய்யுங்கோ' இப்படிக் காவிப் பல்லெல்லாம் காட்டிக் கெஞ்சிக் கூத்தாடிக் காரியத்தைச் சாதித்துக் கொண்டு வெளியே வந்தது. அந்த வேதிய குல திலகச் சோதிடமணி.

வரும் வழியில் ஒரு கூரை வீடு; வீடு என்பதைவிட அது ஒரு பொத்தல் கூடு என்று கூறலாம். அந்த வீட்டின் எதிர் நின்று குரல் கொடுத்தது, அந்த குல் லூகபட்டரின் குலக்கொழுந்து. 'டேய் முனியா! டேய்!' என்னுங்கசாமி! எதிர்க் குரல் கொடுத்த அந்த முனியன் வெளியே வந்து தோளிலிருந்த துணியை இடுப்பில் கட்டிக் கைகட்டிக் குனிந்து எட்ட நின்றான். என்னடா!...உம்... என்று ஏற இறங்கப் பார்த்தார். 'உம் ஒன்னைச் சொல்லிப் பலனில்லேடா! நோக்குத் தோப்பனா (தகப்பனாக)ப் பொறந்து செத்தானேன்னு அவனைச் சொல்லணும்டா; அவனைச சொல்லணும் அவனுக்குச் சிரார்த்த நாள் நாளைக்கு வர்ரது. எல்லா ஏற்பாடும் செய்து வச்சுக்கோடா' என்று இறைந்தார்.

'சரிதானுங்க சாமி. ஆனா...என்று பயபக்தியோடு உடம்பை ஆயிரம் கோணலாக்கி வளைந்து நெளிந்து தயங்கினான்.'

'உம்...என்னடா குச்...(சுற்று முற்றும் உற்று நோக்கிவிட்டு) சூத்ரப் பயலே! சொல்லுடா, நேக்கு நாழியாச்சு.'

'கையிலே தம்படி காசுகூட இல்லிங்க சாமி அதுதான் என்ன செய்யறதுன்னு யோசிக்கறேன்.'

உஹூம் அதுக்கு என்னை என்னடா செய்யச் சொல்றே, கையிலே காசு இல்லாப்போனா என்னடா? காதுலே கழுத்துலே நகையா ஏதாவது இருக்கும் பாரு. இதோ பாருடா...டேய் நீ அது இல்லே—இது இல்லேன்னு ஒண்ணும் செய்யாம இருந்தியோ உன்னுடைய அப்பன்—அவன்தான்டா போன வருஷம் செத்தானே அவன், நரகத்துக்கும் போகாமே, மோட்சத்துக்கும் போகாமே நடுவிலே தொங்கிண்டு இருப்பன். துடிதுடிச்சிக் கதறிக்கதறி ஒன்னைச் சபிப்பன்; அந்தப் பாபமெல்லாம் ஒன்னைத்தான் சேரும். அவ்வளவுதாண்டா, பயலே நான் சொல்வேன், ஜாக்கிரதை'

எச்சரித்து விட்டார், இந்த உலகத்திலிருக்கும் 'அந்த' உலகத்து ஏஜண்ட்.

சரிதானுங்க சாமி! என்று ஒரு கும்பிடு போட்டான் அந்த 'சாமி! சாமி!' என்று கூப்பிட்டுப் பழகிப் போன ஆசாமி.

அந்தப் பகவானின் 'கையாள்' சென்று விட்டார். இல்லை—நகர ஆரம்பித்தார். நானும் வீடுற்றேன். சிந்தனைக் கேணியில் குதித்தனேன்;

பணமில்லா விட்டாலும் எப்படியேனும் செத்துப்போன அப்பனுக்குச் சிரார்த்தம் செய்ய ஒத்துக் கொண்டானே ஒருவன் அவன், அந்த முதலியார்வாள் ஆலையில் வேலை செய்யும் ஒரு கூலியாள். தடியடிக்குத் தயாராகநின்று குண்டு வீச்சுக்கும் அஞ்சோம்' என்றும் முழக்கமிட்டு நாலணா கூலி உயர்வு வாங்கியவன். அந்த நாலணாவை நல்ல முறையிலா செலவிடுகிறான்! மூன்றணாவுக்குத் தேங்காய், அரையணா வாழைப் பழம், அரையணா வெற்றிலை பாக்கு வாங்கி வந்து குலதெய்வத்திற்குக் காணிக்கை செலுத்தி அம்மா! தாயே! ஏதோ உன்னருளால்தான் நாலணா கூலி உயர்ந்தது, தாயே! ஏத்துக்க அம்மா! என்று நடுவீட்டுக்கு நேரே நெடுமரமாய் விழுந்தவன்தான்.

அவன் தடியடி பட்டான், குண்டுக்கும் பலியாகச் சித்தமானான். எப்படியோ சமாதானமாகி—இணங்கி 'ஒரு நாலணா' கூலியை உயர்த்தினான் ஆலை முதலாளி. ஆனால் அம்மா கொடுத்தாளென்று இப்படி செலவிடுகிறான். அந்த நாலணாவை.

அவனுடைய குழந்தை இதுவரை ஒரு பிஸ்கோத்து கூடச் சுவைத்திருக்காது அவன் மனைவியோ—ஏன் அவனே கூட ஒரு ஆப்பிள் பழத்தைப் பார்த்திருக்க மாட்டான். அப்படி ஏதாவது வாங்கி வருவானா வீட்டுக்கு! இல்லை இல்லை குடமாகக் கொளுத்துகிறான், தேங்காயாக உடைக்கிறான், தேவிக்காகப் படைக்கிறான், போதாக்குறைக்கு அந்தப் 'பரலோக டிக்கட்' வாங்க புரோகிதர்களுக்கு வேறே கொடுத்து அழுகிறான். இவ்வளவும் செய்து அவன் உருப்பட்டானா! இல்லை உருதான் பட்டுப் போயிற்று. உடல் இளைத்து உள்ளம் புழுத்துச் சாகாமல நாள் தோறும் சாகிறான்

ஆனால் அதோ போனானே, அந்தத் தங்க நிறமுடையோன் — எங்கும் காணும் திருமேனியான் — நோவன செய்யாதான் (உடல் நோகும்படியான எந்த வேலையும் செய்யாதவன்)—அவனுடைய உடல் என்ன! உடலை மூடியும் மூடாமலும் இருக்கும் உடை என்ன! உல்லாசபுரியில் உலவும் சல்லாபக் காட்சி என்ன! எனை எண்ணிப் பார்க்கவேண்டாமா இந்த இளித்தவாய்க் கூட்டம்!'

இவ்வளவு சிந்தனைக்கிடையிலே ஒரு குரல்—அதே குரல்.

என்னப்பா இன்பத்தமிழகத்து அன்புக் திருவுருவே! இப்போதாவது உண்:

22-ம் பக்கம்

(உழைப்புக்கு மதிப்பு தொடர்ச்சி)

துப் பார்த்தான். பரிசோதனை வெற்றி யளித்தது. ஒரே சமயத்தில் அதுவும் இரண்டே நிமிஷங்களில் 140 கரித் துண்டுகளை உருட்ட முடிந்தது. அவனது கண்டுபிடிப்பால் உற்பத்தி 150 சதவிதத்துக்கு உயர்ந்தது. இப்பொழுது சியோ யென்-பின்னுக்கு வேலை உயர்வு கிடைத்திருக்கிறது.

சீன அரசாங்கம் ரிகார்ட் இயக்கம் நடத்தி உழைப்புக்கு மதிப்பளித்து தொழிலாளரை உற்சாகப்படுத்தியதால்தான், இன்று அந்த நாடு உற்பத்திப் பெருக்கத்திலே உலகத்தோடு போட்டியிட முனைகிறது.

சுத்தச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் சீனா 'உழைப்பால் உயர்ந்த நாடு' உழைப்புக்கு மதிப்பளிக்கும்நாடு!

ஆனால் நம் இந்தியாவிலோ — சுதந்திரத்தின் பெருமையைப் பற்றி தொண்டை கிழிய கூப்பாடு போடுகின்றனர். செயல் முறையில் உளுத்தர்களுக்கு வாழ்வும், உழைப்பாளர்களுக்குத தாழ்வும்தான் காணப்படுகிறது இந்த அவலநிலை தகர்த்தெறியப்பட இநாட்டு உழைப்பாளர்கள் உணர்வு பெறுவார்களாக.

●

உண்மைக்குப் பரிசு!

தாங்கள் இவ்வளவு அக்கரையாகப் படித்துக் கொண்டிருப்பது என்ன புத்தகமோ?

இதுவா? நம் காருண்ய சர்க்காரால் தடை விதிக்கப்பட்ட புத்தகம்!

அப்புத்தகத்திற்குத் தடை எதற்கு?

இதில் கூறி யிருப்பவை அத்தனையும் உண்மையாய் இருப்பதால்! உள்ளதை உள்ளபடி சொல்வதால்!

தடை விதிக்கப்பட்டப் புத்தகத்தைப் படிப்பது தவறல்லவா?

தவறுதான்! இப்புத்தகம் என்கையில் இருப்பதை, சர்க்கார் ஆட்கள் கண்டால், என்னைக் கண்டிப்பாய் சிறையில் போட்டு அடைப்பார்கள்!

சிறையா?

ஆமாம்! சிறைதான்! மனிதனுய்ப் பிறந்தால் உண்மைகளைக் கண்டறிவதை விட, வேறென்னதான் வேலை கூறுங்களேன்? ஆகவே அப்படிக் கிடைக்கும் சிறை தண்டனையை, நாம் உண்மை காணப் புகுந்ததற்கு, அருமையாய்க் கிடைத்தப் பரிசு என்று கருதி ஏற்க வேண்டியதுதான்! உண்மை காண எவராவது அஞ்சுவார்களா? எதற்காக அஞ்ச வேண்டும்!

—மாக்ஸிம் கார்க்கி

கண் கண்ட கடவுள்!

புலவர் சி. உண்மை ஒளியன்

மாலையிலே மணற்றரையிலாற்றி னேரம்
மகிழ்வாகத் தனிமையிலின்பங் கண்டேன்
மேலைக்கடல் மறைகின்ற ஞாயிறென்பான்
மெதுவாகக் காரிருளை யனுப்பிச் சென்றான்
ஓலை யெழுத்தாணியங்கே துணையுமில்லை
உள்ளந்தான் சிந்தனையில் மூழ்கிற்றம்மா
வேலையதில் மூழ்குதற்கு விரைந்து செல்லும்
விவசாய நண்பன் சொல் கதையீதாகும்.

மேகமெனும் தாய் வயிற்றிற் பிறந்தே யானும்
மேடான மலைமீது தவழ்ந்து ஆங்கே
ஆகாய நீர்வீழ்ச்சி தனையுமாக்கி
அருகிலுள்ள வண்டல்தனை நண்பாய்க் கொண்டு
வேகமாய் விளையாடி வீடேயாகும்
விவசாயப் பெருந்துறையை யணுகும்போது
சோகமா யிருந்த மக்கள் துள்ளித் துள்ளிச்
சுகமளிக்கும் கடவுள்தான் வந்ததென்றார்.

கடவுளென்ற சொல் கேட்டுக் கலங்கிப் போனேன்
கருத்தாக ஆய்ந்ததினால் முடிவு கண்டுத்
திடமாகக் கடவுள் நாமாகுமென்றேன்
திகழுயிர்கள் அனைத்தினுக்கும் தேவையன்றோ
கடவுளென்றால் எவ்வுயிர்க்குங் கருணை காட்டல்
கண்கண்ட கடவுளென்றால் மறுப்பாருண்டோ?
திடமாக வெனைநம்பி வாழ்வார்க்கெல்லாம்
திரவியங்கள் பலவீந்து செழிக்கச் செய்தேன்

வீட்டினிலே யிருந்துவிட்டால் விரும்பும் பக்த
விவசாயத் தொண்டர்களின் குறைகள்போமோ?
நாட்டினிலே பலகிளையா யுருவெடுத்து
நன்றாக வுழைப்பவர்க்குத் துணையே செய்தேன்
கூட்டமதா யெளிய மக்கள் கூடி நின்று
கும்பிட்டு வரவேற்பும் குனிந்தே செய்தார்
வாட்டமதைப் போக்கிடவே வந்தே னென்றேன்
வரப்பிட்டுப் போதுமென்றே வாழ்த்துஞ் சொன்னார்

வெப்பத்தால் வாடி நின்ற சோலையெல்லாம்
விரைவாகப் பசுமைதனை வீசக் கண்டேன்
துப்புரவாய் வாழ்வதற்கே மக்களெல்லாம்
துறைதோறும் நீராடிக் கரையே சேர்ந்தார்
தொப்பென்று மீன்கொத்திப் பறவைதானும்
தோல்வியின்றிக் குறிபார்த்துச் சுட்டதம்மா
தப்பிற்றோ இரைதானும் தப்பவில்லை
தரணியிலே முயல்பவர்க்காம் வெற்றி தந்தேன்

கப்பலெல்லாம் உள்நாட்டில் ஓடச் செய்து
காலத்தினருமைதனைக் கழறிச் சென்றேன்
ஒப்புமையாய் இவ்வுலகில் உழைப்பார்க் கல்லால்
உல்லாச மாடிதன்னில் உலவு வார்க்கும்,
இப்புவியில் துணையாக இருப்பதல்லால்
என்னலத்தை ஒருநாளும் கண்டேனில்லை
தப்பான பேதமதை நீக்கி யென்போல்
தாரணியில் பொதுநலத்தைப் போற்றுவீர்காள்!

வெள்ளத்தாலழித்திடுவே னென்று மக்கள்
வீண்பழியை யென்மீது போடுகின்றார்.
உள்ளத்தில் சிந்தனையே யவர்க்கு இல்லை
உயர்ந்தகரை யிட்டுவிட்டால் உடைத்தல் உண்டோ?
தெள்ளுற்ற தமிழ் நாட்டின் குறையாதென்றால்
செய்த பிழை பிறர்மீது போடல் ஒன்றும்.
கள்ளமற்ற உள்ளத்தோடு வாழ்வீரென்றால்
கலைகளெல்லாம் காட்சிதரக் கண்டு வாழ்வீர்!

இந்தவிதமென்கடமை யாற்றிக் கொண்டு
எல்லோரும் வாழ்வதற்குத் துணையே செய்து
சொந்தமாமன் வீடாகும் கடலைநோக்கிச்
சுழிவிளைத்துச் சொல்லாது ஓடிப்போனேன்
எந்தன்கதை யீதாகும் என்று யாறு
எடுத்துச் சொன்னகதை கேட்ட வுள்ளந்தானும்
"சிந்தனையாங் கடலேறிச் செல்வீ"டென்று
செப்பிற்று அப்படியே செய்துவிட்டேன்,

கேட்கிறார் பெரியார்?

நீ மட்டும் பார்த்து விட்டாயா ?

இன்று விஞ்ஞான உலகம் கண்டு பிடித்த ஆயிரக்கணக்கான மெழுகுவர்த்தியின் சக்தி (Candle Power) கொண்ட மின்சார விளக்கிலேயும் தென்படாத கடவுள் உனக்கு மட்டும் எப்படித் தெரிந்தது?

எவ்வளவோ தூரத்தில் உள்ள பொருள்களைக் கண்டு பிடிக்க உண்டாக்கப்பட்ட பூதக் கண்ணாடியில் தெரியாத கடவுள் உன் கண்களுக்கு மட்டும் எப்படித் தெரிந்தது?

அப்படி உருவமுள்ளக் கடவுள் இருக்குமேயானால், இவர்கள் (விஞ்ஞானிகளால்) கண்டுபிடிக்க முடியாமல் நீ மட்டும் பார்த்து விட்டாயா?

கூறுங்கள் பதில்.

உழைப்புக்கு மதிப்பு!

வ. பாலசுப்ரமண்யம்

பொருளாதார முன்னேற்றத்தை விருத்திப்படுத்தும் வழிவகைகளைக் காண சீன மத்திய மக்கள் அரசாங்கம் பரீட்சார்த்தமாக சீனுவின் வடகிழக்குப் பகுதியை முதலில் எடுத்துக் கொண்டது. லியோ டங்,லியோ-சீ, குங்-கியாங், ஹி ஹுங்கியாங், சீ-லிங், ஜெகோல், ஆகிய மாகாணங்கள் சீனுவின் வடகிழக்குப் பகுதியிலுள்ளன. அப் பகுதியில் மாத்திரம் சீன அரசாங்கம் தனியான நாணயப் புழக்கத்தை அனுமதித்து, மற்ற பகுதிகளுக்கும் அதற்கும் நாணயப் புழக்க மில்லாதவாறு செய்தது. வடகிழக்கு மக்கள் அரசாங்கமும், மக்களும் ஒன்று சேர்ந்து உழைத்ததால் வடகிழக்குப் பகுதியின் பொருளாதாரம் சுயேச்சையாகக் கணிசமான அளவில் உயர்ந்தது. இந்தப் பரீட்சார்த்தத் திட்டம் மற்றபகுதிகளின்பொருளாதார முன்னேற்றத்துக்கு உதாரணமாகவும், அஸ்திவாரமாகவும் அமைந்தது. நாட்டின் மொத்த உற்பத்தியில் 35 சதவீதத்தை வடகிழக்குப் பகுதி மட்டும் 1949-ல் உற்பத்தி செய்து காட்டியது. 1950-ல் இந்த உற்பத்தி 42 சதவீதத்துக்கு உயர்ந்தது. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்தது. தொழிலாளர்களின் கூலியும் அதற்கேற்ப அவர்களின் வாழ்க்கைத் தரமும் உயர்ந்தது.

தொழிலாளர்களின் உற்சாகத்தை இன்னும் அதிகப்படுத்த வடகிழக்குப் பகுதியின் மக்கள் அரசாங்கம், ஜெனரல் ட்ரேட்யூனியன்: ஆகிய மற்றும் சில ஸ்தாபனங்கள் ஒன்று சேர்ந்து, தொழிலாளரின் திறமையை உயர்த்தும் இயக்கத்தை (Record movement) 1949 அக்டோபரில் ஆரம்பித்து அமுலாக்கின. இதனுல் தொழிலாளர் தொழிலின் உற்பத்தி சக்தியை உயர்த்தினர்; சேதத்தைக் குறைத்தனர், பொருளின் தரத்தை உயர்த்தினர்; பண்டங்களைக்காப்பாற்றினர்; விபத்துகளைத் தவிர்க்கும் வழிகளைக் கண்டுபிடித்தனர். பொதுவாகச் சொல்ல வேண்டுமானுல் இந்த இயக்கம் சீனுவின் வடகிழக்குப் பகுதியிலே பெருமிதமான வெற்றியைப் பெற்றது. இயக்கம் ஆரம்பித்த ஐந்து மாதங்களுக்குள்ளேயே 19940 ரிகார்டுகள் ஏற்படுத்தப்பட்டன. 60000-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் அந்த ரிகார்டுகளை ஏற்படுத்தினர்.

இந்த வடகிழங்குப் பகுதியில் மாத்திரம் 98000 பெண் தொழிலாளிகள் இருக்கிருர்கள். அவர்களில் அநேகர் புது ரிகார்டுகளை ஏற்படுத்தினர். முக்டன் நகரிலுள்ள 24 தொழில் நிலையங்களில் வேலை செய்யும் பெண்களில் ரிகார்டு ஏற்படுத்தியவர்கள் மாத்திரம் 333 பேர். அவர்களில் நாலவரை இங்கு அறிமுகப் படுத்துவோம்.

லீமே-இங் (Lee May-Ying)

அவளுக்கு அப்போது 16 வயதிருக்கும்! 1945ம் ஆண்டில், தன்னுடைய பதினுருவது வயதில் அந்த ஆணித் தொழிற்சாலையில் வேலைக்கமர்ந்தாள். படிப்பு என்பதையே அறியாதவள். ஏழைக் குடும்பத்தில் பிறந்து அன்ருடச் சாப்பாட்டுக்கும் அருகதை யற்றுத் திரிந்தவள். வயிற்றுப் பாட்டை முடித்துக் கொள்ள அந்தச் சின்னஞ் சிறு வயதிலும் அவளுக்கு சம்பாதிக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டு விட்டது. வறுமையில் உழன்றுழன்று சலித்தவளாதலால் வேலையைப் பொறுமையுடனும், கவனமுடனும் கற்றுக்கொண்டால் லீ-மே யிங், படிப்படியாக தன்னுடைய சுய முயற்சியாலும், திறமையாலும் மேலதிகாரிகளின் நன் மதிப்புக்குப் பாத்திரமாஞள். அதோடு தனனுடன் வேலை செய்த பெண் தொழிலாளிகளிடம் அன்புடனும், ஆதரவுடனும் நடந்து கொண்டாள், புதியதாய் வருகிறவர்களுக்கு உற்சாக மூட்டித் தொழில் நுணுக்கங்களை பெல்லாம் கற்றுக் கொடுத்தாள்.

ஒரு நாள் அவளுக்கே ஆச்சரியம் ஏற்படும்படியாக ஒரு சம்பவம் நடந்தது. தொழில் நிலைய நிர்வாகிகள் அவளை அழைத்து 'முக்டன் நகர் தொழில் நுணுக்கப் பள்ளியிலே படித்து வரப் போகிருயா! என்று கேட்டார்கள். ஒன்றும புரியாது திகைத்து நின்ற லீமே-யிங் கடைசியில் சம்மதம் என்று சொல்லிவிட்டு வந்தாள். மிகச்சாமான்யமான தன்னை முக்டன் நகருக்கு ஏன் அனுப்புகிருர்கள்; இதற்கு முன் இம் மாதிரி ஒருவரையும் எந்த ஊருக்கும் படிக்க அனுப்ப வில்லையே; நம்மை மட்டும் ஏன் அனுப்புகிருர்கள்! என்றெல்லாம் எண்ணினுள். ஆனுல் முக்டன் நகருக்குச் சென்றதும் புதியதொரு சமுதாயச் சூழ்நிலையில் உருவான திட்டந்தான் இது என்பதை உணர்ந்து கொண்டாள்.

தொழிற்சாலையில் வேலையில் காட்டிய ஊக்கத்தை இங்கு படிப்பிலும் காட்டித் தேறினுள். பிறகு அவள் பழைய தொழிற்சாலைக்கு வேலைக்கு வந்த போது சும்மா வரவில்லை, புதிய ஜனநாயக வாலிப சங்கத்தின் அங்கத்தினராக (Member Democratic youth's League) வந்தாள். எந்த விதமான ஆணவமும், ஆடம்பரமு மில்லாமல் அவள் முன்போலவே சக தொழிலாளர்கட்கு உதவி ஒத்தாசைகள் செய்தாள். அவர்களிடம் அவள் காட்டின அன்பும் வீண்போக வில்லை, அந்தத் தொழில் நிலையத்தின் ட்ரேட் யூனியன் கமிட்டியில் இவளும் ஒரு உறுப்பினராகத் தேர்தெடுக்கப் பட்டாள்.

இந்தச் சமயத்தில் தான் அதாவது 1949 வசந்த காலத்தில் தொழிலாளர்களின் திறமையை உயர்த்தும் ரிகார்டு இயக்கம் நடத்தப்பட்டது. ஜனநாயக வாலிபக் கழகத்தில் அங்கம் வகிப்பவள் என்ற முறையில் இதை அவள் நடத்த வேண்டிய பொறுப்பேற்பட்டது.

அந்தத் தொழிற்சாலையில் 4 C·M x 1.5 C·M ஸ்குரு ஆணிகளைத் தயார் செய்து கொண்டிருந்த அவள் தன் வேலையை இன்னும் வேகமாகவும் உயர்ந்ததாகவும் செய்ய வேண்டுமென்று எண்ணினுள். எண்ணத்தைச் செயலாக்க நுணுகி ஆராய்ந்தாள். ஆராய்ச்சியின் பலன்! சராசரி அதற்கு முன்பெல்லாம் 1600 ஸ்குரு ஆணிகளே தயார் செய்த அவள் புதுமுறையைக் கையாண்ட பிறகு 2494 ஆணிகளைத் தயாரித்தாள். அவளோடு வேலை செய்த இன்னும் இருபது பெண்கள் அதே முறைகளைப் பின் பற்றியதால் தொழிற்சாலையிலேயே உற்பத்தியாகும் மொத்த ஆணிகளில் 71 சதவீதத்தை யுவர்களே உற்பத்தி செய்ய முடிந்தது. அதன் பிறகு இவள் கண்டு பிடித்த முறைகளையே தொழில் நிலயத்திலிருந்த அனைவரும் கையாள ஆரம்பித்தனர்.

இவளது திறமையைமெச்சி தொழிற்சாலை நிர்வாகத்தினரும், பொறியியல் கழகத்தாரும் அவளுக்கு பரிசுகள் வழங்கினுர்கள்.

குவோ க்வீ-லான் (Kuo Kwei-Lan)

பத்து வயது நிரம்பிய சின்னஞ் சிறுமியாக ஓடிவிளையாடிக் கொண்டிருந்த குவோ க்வீ-லானை ஒரு நாள் அவளுடைய தந்தை ஒரு தொழில் நிலயத்துக்கு அழைத்துச் சென்று குழந்தைத் தொழிலாளியாகச் சேர்த்தார். அன்று முதல் அவள்பட்ட கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல! நெஞ்சில் ஈரமற்ற முதலாளிகள்—ஈவிரக்கமற்ற சில அதிகாரிகள்—கொஞ்சமும் அன்பில்லாசில ஆண்தொழிலாளிகள் — இவர்களுடைய தொல்லைகளை பெல்லாம் சகித்துக்கொண்டு காலத்தைக் கழித்து வந்தாள். ஐந்தாறு வருஷங்களுக்கு முன்தான் தற்போது வேலைசெய்யும் நெசவுத் தொழிலுக்கு வந்தாள். அதற்கு முன்னெல்லாம் அவள்பட்ட கஷ்டங்களை சொல்லி முடியாது. 'இரத்தங் குடிக்கும் அட்டைகள்' என்று முன்னிருந்த முதலாளிகளை அவள் வர்ணிக்கிருள்.

கம்பளி நெசவிலே தலைசிறந்து விளங்குபவள் குவோ க்வீ-லான்! மற்றெல்லா நெசவாளிகளும் 22 6 மீட்டர்களே உற்பத்தி செய்யும் அதேநேரத்தில் அவள் 2',4 மீட்டர்கள் உற்பத்தி செய்கிருள்; இந்தச் சாதனைக்காக அவளுக்கு அந்தத் தொழில் நிலயம் இரண்டுமுறை பரிசளித்தது.

சாவோ சோ-யங் (Chao-So Yung)

முக்டன் மோட்டர் தொழிற்சாலையில் 1949-ம் வருஷம் ஜுலை மாதம் அப்பரெண்டிஸாக வந்து சேர்ந்தாள். அப்பொழுது அவளுக்கு வயது 20. அங்கே மின்சாரப் பிளாக்குகள் செய்யும் பகுதியிலே அமர்த்தப்பட்டாள்! அவள் அங்கு பயிற்சிபெற வந்தபோதே அங்கிருந்த ஆண் தொழிலாளிகள் 'பொர்ஸிலென்கிளீட்' (Porcelain Cleats) செய்யறதெல்லாம் சாமான்ய காரியமில்லேம்மா...அது எங்களாலேதான் முடியும்; பேசாமல் வந்த வழியை பாத்துக்கிட்டு போ'' என்று சொன்னுர்கள்.

இந்த மாதிரி யெல்லாம் பேசாதீங்க உங்களால் செய்ய முடிகிற சாமானைப் பெண்களால் ஏன்! செய்ய முடியாது! என்று கோபமாகக் கேட்டாள் அவள். அவள் பெயர் சாவோ சோ-யங்!

மிகுந்த தன்னம்பிக்கையோடு வேலைக்கு வந்த இருபது வயது இளநங்கையான அவளுக்கு 'க்ளீட்டுகள்' செய்யக் கற்றுக் கொள்வது அதிகக் கஷ்டமாக இல்லை, தன்னுடைய நுண்ணறிவைக் கொண்டும், விடா முயற்சியைக் கொண்டும் அவள் மற்றெல்லாத் தொழிலாளர்களையும் விட அதிகமாக 'க்ளீட்டுகள் செய்து குவிக்க ஆரம்பித்தாள். இது அங்கிருக்கும் அனைவருடைய உள்ளத்திலும் பொருமைப் புயலைக் கிளப்பிற்று. வேண்டுமென்றே அவளைப்பற்றி டரேட் யூனியன் தலைவரிடம் இல்லாததையும், பொல்லாததையும் சொல்ல ஆரம்பித்தார்கள். இரண்டாவது போர் மன்னை இங்கு வேலை செய்த சங்-ஹாங் மிங் என்பவன் சாவோ சோ-யங் உண்மையிலேயே உதவாக்கரையானவள் என்றும் அவளுக்கு வேலை செய்வதற்கே தெரியவில்லையென்றும் வீணுக சாமான்களைச் சேதப்படுத்துகிருள் என்றும் புகார் செய்தான், சாவோ சோ-யங் இதற்கெல்லாம் பயந்துவிடவில்லை. தன் மேல் கூறப்பட்ட புகார்களுக்கு எந்த விதமான ஆதாரமும் கிடையாதென்றும் அவள் டிரேட் யூனியன் தலைவரிடம் வாதாடினுள். தான் எல்லோரையும்விட அதிகமான வேலைத்திறனை காட்டமுடியும் என்று உறுதிகூறினுள்.

இந்தச் சமயத்தில்தான் ரிக்கார்டு இயக்கம் அந்தத் தொழிற்சாலையில் அமுலாக்கப்பட்டது. டிரேட் யூனியன் தலைவர் சாவோ சோ-யங்கின் வேலைத் திறமையைப் பரிசோதிக்க இதுதான் தருணமென்று எண்ணினுர் எட்டு மணி நேரத்தில் அவள் எத்தனை க்ளீட்டுகள் செய்கிருள் என்பதை அறிய விரும்பினுர் அவர். சாவோ சோ-யங் வேலை செய்ய உட்கார்ந்தாள். சுற்றுப்புற சூழ்நிலைகள் அனைத்தையுமே மறந்துவிட்டு கருமத்திலே தன் கண்களையும் கருத்தையும் செலுத்தினுள். வேலை முடிந்ததென்று அறிவிக்கும் சங்கு ஊதும்வரை அவள் ஓயாதுழைத்தாள் சங்கு ஊதியது. அங்கு வந்தனர் தொழிற்சாலையின் மானேஜரும்,டிரேட் யூனியன் தலைவரும்! அவள் உருவாக்கியிருந்த க்ளீட்டுகளை எண்ணினர்; என்ன ஆச்சரியம்! 104 க்ளீட்டுகள் யிருந்தன. ஒரு நாளின் வேலை நேரத்தில் இத்தனை க்ளீடடுகளை இதுவரை எந்தத் தொழிலாளியும் செய்ததில்லை. மானேஜரு தலைவரும் ஆச்சரியப்பட்டனர். ஏன்! சாவோ சோ-யங்கே ஆச்சரியப்பட்டாள்! சராசரி நாலரை நிமிஷத்துக்கு ஒரு க்ளிக் வீதம் 8 மணி நேரத்தில் 104 க்ளிட்டுகளைச் செய்து முடித்து புதியதொரு ரிகார்டை ஏற்படுத்திவிட்ட சாவோ சோ-யங்கைப் பார்க்க அத்தனை தொழிலாளரும் வந்தனர். வாழ்த்துக் கூறினர் கோள்மூட்டிய அந்தப் போர்மென் கூட வந்து வாழ்த்துக் கூறினுன்.

ஆனுல், கொஞ்ச நாளில் அங்கு வேலை செய்யும் லி-சாங்-பூ என்பவன் தன் தீவிர முயற்சியால் நான்கு மணி நேரத்தில் 144 க்ளீட்டுகளைச் செயது காட்டினுன். அதாவது 1 44 நிமிஷத்துக்கு, ஒரு க்ளீட் வீதம் செய்தான், அந்த ரிகார்டையும் உடைத்தெறிந்தாள் சாவோ சோ-யங்! 1,5 நிமிஷத்துக்கு ஒன்று வீதம் அவள் க்ளீட்டுகள் செய்ய ஆரம்பித்து விட்டான்,

இந்தப் பெருமுயற்சியைப் பாராட்டி அவளுக்கு அந்த மோட்டார் தொழிற்சாலையும். முக்டன் பொறியியற் கழகமும், சீனப் பெண்களின் ஜனநாயக வாலிப சங்கமும் அவளுக்குப் பரிசுகள் அளித்துப் பாராட்டின.

சியோ என்-பின் (Chiao Yen-Pin)

முக்டன் நகரிலுள்ள அச்சுக்கு வேண்டிய சமான்களைத தயாரிக்கும் தொழில் நிலையத்திலே வேலை செய்யும் இவளுக்குப் பென்ஸிலின் உள்ளிருக்கும் கரியை (Pencil-Lead) ஒத்தாற்போல் ஒழுங்காக உருட்டும் வேலை மூன்ருண்டுகளாக அங்கு வேலைக்கிருக்கும் அவள் அந்தத் தொழிற்சாலையிலே ரிகார்டு இயக்கம் அமுலாக்கப் பட்டதிலிருந்து, தன்னுடைய உழைப்பையும், உழைப்பின் தரத்தையும் உயர்த்திக் கொள்ளப் பலவகையிலும் சிந்தித்தாள். இரவெல்லாம் இதே சிந்தையோடு போராடினுள். அதே தொழிற்சாலையில் ரிகார்டுகளை ஏற்படுத்திப் பெருமையுற்ற தொழிலாளர்களைப் பார்க்கும் போதெல்லாம் அவள் வெட்கினுள்.

ஒருநாள் அவள் இரும்புப் பலகையில் பென்ஸில் கரியை உருட்டிக் கொண்டிருந்தாள். கரி உருளுவதுபோல் அவளது சிந்தனையும் உருண்டது. சுமார் 100 கரித்துண்டுகள் கொள்ளும் அளவிற்கு அந்த இரும்புப் பலகை பருத்தியால் மூடப்பட்டிருந்தது ஏதோ நினைத்துக் கொண்டு அந்தப் பருத்தியை நீக்கி விட்டு உருட்டிப் பார்த்தாள். உருளும் வேகம் அதிகரித்தது. ஆனுல் கரியில் ஈரப்பசை இருப்பதால் அந்த வேகம் கொஞ்சம் தடைப்படுவதையும் கண்டாள். கோடைக் காலத்தில் மிகச்சன்னமாக உருளும் கரித்துண்டுகள் குளிர் காலத்தில் மெதுவாக உருளுவதையும் சரக்கின் தரம் கோடை காலத்தைவிட குளிர்காலத்தில் குறைவதையும் கண்டாள். 'சரக்கின் தரமும் குறையக் கூடாது; அதிகமாகவும் உற்பத்தி செய்ய வேண்டும்; அதற்குத் தகுந்த சாதனத்தை நாம் கண்டு பிடிக்க வேண்டும் என்று அவள் எண்ணினுள்.

பலநாள் சிந்தித்ததின் பயனுக ஒரு நாள் அவளுக்கொரு யோசனை தோன்றிற்று. இரும்புப் பலகைகளுக்குப் பதிலாக, இரும்பு வலையை உபயோகித்தால் வலையின் அடிப்புறமிருந்து காற்று வரும். காற்றோட்டத்தால் கரியின் பசைகுறையும், பசை குறைந்தால் உருளும் வேகம் அதிகரிக்கும். என்று எண்ணினுள். முன்னிருந்த இரும்புப் பலகையை விட இன்னும் கொஞ்சம் பெரிதான இரும்பு வலை பின்னித் தன்னுடைய கண்டு பிடிப்பைப் பரிசோதித்

22-ம் பக்கம்

கிழக்கிந்தியத் தீவுகள்

கஜா

கிழக்கிந்தியத் தீவுகள் என்பன வற்றுக்கும் இந்தியத் துணைக் கண்டத்துக்கும் எவ்வகை தொடர்புமில்லையென்பதை மனத்திற் கொண்டு இக்கட்டுரையைத் தொடங்குவாம்.

*

இந்து மகா சமுத்திரமும் பசிபிக் மகாசமுத்திரமும் சங்கமாகும் சுமார் இருபத்தியிரண்டு லட்சம் சதுர மைல் விஸ்தீரணங் கொண்ட ஜலப்பகுதியிலே எண்ணிக்கைக்கு அடங்காத தீவுகள் இருக்கின்றன. கோடைகாலத்தில் வெளியில் தெரியும் அநேக தீவுகள் மழை காலத்தில் நீருக்குள் மறைந்து விடுகின்றன, எனவே இங்குள்ள அநேக தீவுகளில் மனித சஞ்சாரமே கிடையாது. ஆனால் நீரிலும் நிலத்திலும் வாசஞ் செய்யும் அநேக விசித்திர பிராணிகள் வாழ்கின்றன. பல்வகைக் காட்டு மிருகங்களும் ஏராளமாக இருக்கின்றன. அதே போல் விதவிதமான குரங்குக் கூட்டங்களும் நிறைய இருக்கின்றன. தென்னை மரங்களிலிருந்து தேங்காய் பறிக்கும் வேலைகளைப் பெரும்பாலும் குரங்குகளே செய்கின்ற காரணத்தால் வீடுகள்தோறும் அவை பட்சமாக வளர்க்கப் படுகின்றன, கண்ணைக் கவரும் வகையில் பல விதநிறம்படைத்த பறவையினங்கள் கூட்டம் கூட்டமாய் வசிக்கின்றன, இயற்கையிலேயே நீர்வளம் நிறைந்த அத்தீவுகளில் வாழும் சகல ஜீவன்களும், வளரும் தாவர வர்க்கங்களும் செழிப்பாக இருப்பது வியப்பின் பாற்பட்டதல்ல.

உலகிலே வேறெந்தப் பகுதியிலும் காணமுடியாத ஓர் வகை தவளை இனம் அங்கே உண்டு. உருவில் பெரியதாகக் காணப்படும், அத்தவளைகள் வெண்மை நிறம் கலந்த சாம்பல் நிறத்துடன் காட்சியளிக்குமாம். நீரிலே மிக வேகமாக நீந்துவதோடு மட்டுமின்றி நிலத்தில் மிக அலட்சியமாக தாண்டிக் குதிக்கும் திறமை பெற்றுள்ளன. உருவில் சிறிய ஆனால் செயலில் கொடிய கருஞ் சிறுத்தைகள் ஏராளமாக உள்ளன. அவை தம்மைவிட பல மடங்கு உயரமுள்ள பிராணிகளையும் அதிதீவிரமாகப் பாய்ந்து கொல்லும் எப்படிப்பட்ட வேட்டையில் வல்லவரும் அதனிடம் ஏமாந்து உயிரிழந்து விடுவதுண்டு. துப்பாக்கியேந்திய மனிதனைக் கண்ணுற்றதும் அக்கொடிய சிறுத்தை மறைவான இடத்தில் பதுங்கியிருந்து சமயம் வாய்த்ததும் திடீரென்று அம்மனிதன் மீது ஆவேசமுடன் பாய்ந்து குரல் வளையை கடித்து இரத்தத்தை உறிஞ்சிவிடும்.

மனிதர்கள் பேசுவதைப் போன்ற பேசக்கூடிய சில பட்சிகள் அங்கே உண்டு. குறும்புத்தனம் மிக்க அப்பறவையினம் பிற பட்சிகள் மிருகங்கள் போன்று சப்தம்செய்து, அத்தகு செயலால் மனிதர்களையும் பிற பிராணிகளையும் ஏமாற்றுவதை ஒரு பொழுது போக்காகக் கொண்டுள்ளது. வேட்டைக்காரர்கள் எந்தப்பிராணியைத் தேடிச்செல்கிறார்களோ அதே பிராணியைப்போல் இவ்வகைப்பட்சி குரல் கொடுத்து, அவர்களைக் காடு முழுவதும் அலையவைக்கும். வழிதவறிய வேட்டைக்காரர்களையும் பிறர் தேடிச் சென்றால் அவரைப் போன்றே குரல் கொடுத்து வேடிக்கைப் பார்க்கும். எனவே இப்பட்சியுள்ள பிரதேசத்தில் ஒருவரையொருவர் கண்டு பிடிக்க வேண்டுமென்றால் மிகவும் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டியிருக்கும். ஆடுமாடுகளை மேய்க்கும் சிறுவர்களும், காட்டிலே வேலை செய்யும் பெரியவர்களும் அடிக்கடி இப்பட்சிகளால் ஏமாறுவது இன்றும் வழக்கமாக இருந்து வருகிறது.

கிழக்கிந்தியத் தீவுகளில் இன்னும் அநேகம் சரியானபடி கணக்கெடுக்கப்பட்டு சோதனை செய்யப்படவில்லை. அலைகடல் கடந்து பல தீவுகளைக் கண்டு பிடிப்பதிலும், அவற்றின் அளவை எடுப்பதிலும் உலகிலே தலை சிறந்த மேதாவி என்று கூறப்பட்ட கேப்டன் குக் என்பவா கிழக்கிந்தியத் தீவுகளிலொன்றில் பூர்வீகக் குடிகளால் கொலை செய்யப்பட்டாரென்பது வரலாறு இதன் பின்னர் முயற்சி செய்தவர்களும் அவ்வண்ணமே உயிரிழக்க நேரிட்டது. இக்கோர நிகழ்ச்சிகள் நடைபெற்றுச் சில நூற்றாண்டுகள் ஆகி விட்டனவென்றாலும் சமீபகாலத்தில் கூட பலமான பாதுகாப்புடன் சென்ற அநேக மேனாட்டார் அங்குள்ள பூர்வீகக்குடி மக்களால் கொல்லப்பட்டு விட்டதால் கிழக்கிந்தியத் தீவுகள் சரியானபடி அளவெடுக்கப்படாமலே இருந்து வருவதால் அநேக தீவுகள் பற்றிய உண்மை விவரங்களை இதுவரை எவரும் அறிந்துள்ளதாகக் கூறுவதற்கில்லை.

இது நிற்க, அப்பகுதிகளில் ஏராளமான எரிமலைகள் இயற்கையிலே உண்டாகியிருக்கின்றன. அவை எதிர்பாராத விதமாக வெடிக்கின்ற காரணத்தால் பலதீவுகள் மறைந்து விடுவதும், வேறுபல தீவுகள் தோன்றுவதும் சாதாரண நிகழ்ச்சிகளாக விளங்குகின்றன.

ஆப்ரிக்காவுக்கு அடுத்தபடியாக மலைப்பாம்புகள் மிகுதியாக வாழும் பகுதி கிழக்கிந்தியத் தீவுகள்தாம். சில டன்களுக்கும் மிகுதியான நிறையுள்ள மலைப்பாம்புகளை அங்கு காணலாமாம். அவை மாதக் கணக்கில் ஓரிடத்தைவிட்டு அசையாமலிருக்கும் தன்மையன. அசையாமலிருக்கும் தருணங்களில் எவருக்குமே கெடுதல் ஏற்படுவது அபூர்வமாகத்தான் இருக்கும். மிருகமாயினும் மனிதனாயினும் மலைப் பாம்பின் நாக்கிலே சிக்கிக் கொண்டால் அதன் வயிற்றுக்குள் செல்வதைத் தவிர வேறு வழியில்லை, ஆகவே நிலத்தில் இப்பாம்புகள் இருக்கும் போது முன்னால் செல்வது ஆபத்தை வரவழைப்பதை யொக்கும். பின்னால் செல்வது அபாயமில்லாதது; ஏனென்றால் இப் பெரிய உருவம் அசைவதற்கே நெடுநேரமாகிவிடுமாம்' நிலத்திலே சுறுசுறுப்பாக அசைய வலுவில்லாத இப்பாம்புகள், நீரில்இருந்தாலோ அல்லது சேறும் சகதியும் நிறைந்த பிரதேசத்தில் இருந்தாலோ மின்னல்போன்று பாய்ந்து வருமாம். இவை பெரும்பாலும் ஆஸ்திரேலியாவை அடுத்த ஜலப் பகுதியில் உள்ள தீவுகளில் ஏராளமாக காணப்படுகின்றன.

கிழக்கிந்தியத் தீவுகளில் வாழும் எல்லா பயங்கர பிராணிகளைப் பார்க்கிலும் அச்சத்தை ஊட்டவல்ல மனித இனம் ஒன்று வாசம் செய்து வருவது வியப்பினும் வியப்பே.நினைத்தாலேமிகப்பயங்கரமுள்ள செய்கைகளைச் செய்யும் ஒருவகை மானிட இனத்தார் நியூகினியை அடுத்த 'சாம்பால்' மலைப் பிரதேசங்களில் வசிக்கின்றனர். அவர்கள் 'டேகோயல்லிங்கர்' என்று பெயரிட்டு அழைக்கப்படுகின்றனர். சுமார் நான்கு அடி உயரமுள்ள அம்மனிதர்களைப் பார்க்கவே மிக பயங்கரமாயிருக்குமாம். ஆண்களும் பெண்களும் ஆடைகளணிவதில்லை என்றாலும் ஆண்கள் தங்களின் இடையைச் சுற்றி கயிறுகளைக் கட்டி அவற்றில் மிருகங்களினுடையவும் மனிதர்களுடையவும் எலும்புகளையும் பட்சிகளின் இறகுகளையும் சேர்த்து சொருகிக் கொள்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது.

நெருப்பு போன்ற நிறமுள்ள அவர்கள்தம் உடல்கள் முழுவதும் உரோமம் அடர்த்தியாக வளர்ந்திருப்பதால் பார்வைக்கு மனித தலைகளையுடைய கரடிகளைப் போன்றே தோன்றுவார்கள். கண்கள் தீப்பந்தம் போல் ஜொலிக்கும், சப்பையான மூக்கு எடுப்பாக இல்லாமல் அமுங்கியே இருப்பதால் அது பார்வைக்கு முகத்தில் இரண்டு துவாரங்கள் போன்றே கோரமாகத் தோன்றும்.

எவ்வளவு தூரமாக இருந்தாலும் குறிதவறாமல் ஆயுதங்களை வீசுவதில் அவர்களுக்கிணை அவர்களே. புலியின் பாய்ச்சல் தவறினாலும் அவர்களின் குறி மட்டும் தவறாது அவர்களின் முக்கிய உணவு மிருகங்களே. கொன்ற மிருகங்களின் மாமிசத்தைக் கூட சிறிதளவே சுட்டுத்தான் உண்ணும் வழக்கம் படைத்துள்ளார்கள், நன்றாக வேக வைத்துப் புசிக்கும் பழக்க மற்றிருக்கிறார்கள். இவை யாவற்றையும் விட அவர்கள் ஆனந்தத்துடன் ருசியாக உண்பது மனித மாமிசம் தான். மனிதர்களை வேட்டையாடுவதற்கென்றே அவர்கள் கூட்டம் கூட்டமாகக் கடலோரப் பிரதேசங்களுக்கு அடிக்கடி செல்வார்கள்.

'டேகோயல்லிங்கர்' எனும் கொடுமை மிக்க இனத்தார் வேறு எந்த இனத்தாரோடும் எவ்வித உறவும் வைத்துக் கொள்வதில்லை இதர வகுப்பார் அவர்கள் கண்களுக்குத் தென்பட்டால் உடனே அவர்களைக் கொன்று புசிப்பதையே குலத்தொழிலாகக் கொண்டிருக்கின்றநிலையில் அவர்கள் வசிக்கும் பயங்கரப் பகுதிகளில் வேறெவரும் செல்லமாட்டார்கள் அதே போல் நான்கு அடி உயர வகுப்பாரும் வேறு பகுதிக்குச் செல்ல மாட்டார்கள் தப்பித்தவறி டேகோயல்லிங்கரும் வேறு வகுப்பாரும் எங்கேனும் சந்திக்க நேரிட்டால் அங்கு எவ்வித பேச்சுக்கும் இடமிருக்காது; உடனே அவர்களின் ஆயுதங்கள் பேச்சைத் தொடங்கி இரத்த ஆறு ஓடச்செய்யும்.

டேகோயல்லிங்கருக்கு ஆதரவான வகுப்பார் எவரும் இல்லாத காரணத்தால் மற்றவர்களுடன் எந்நேரமும் சண்டையி லீடுபாடு கொண்டவராயிருக்கின்றனர். எனவே அவ்வகுப்பாரின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது. குறிப்பாக ஆண்களின் தொகை மிகக் குறைந்து விட்டதால் பெண்கள் மிகுந்து விட்டனர். இதனாற்றான் போலும் ஒரு ஆடவன் ஐந்து மனைவிகளைவைத்துக் கொள்ள வேண்டுமென்ற கட்டாயம் இருந்து வருகிறது. சில ஆடவர்கள் இருபதிற்கு மேற்பட்ட மனைவிகளையும் உடையவர்களாகத் திகழ்கிறார்கள்: ஒருவனுடைய அந்தஸ்தை அவனே மணந்துள்ள பெண்களின் எண்ணிக்கையைக் கொண்டுதான் நிர்ணயிக்க வேண்டும்.

டேகோயல்லிங்கர் தம் இனத்தாரில் யாருக்காவது ஒரு குழந்தை பிறந்து விட்டால், அதுவும் அது ஆண் குழந்தையாக இருந்து விட்டால் அப்புறம் அவாகளுடைய ஆர்ப்பாட்டத்துக்கு அளவேயில்லை. அந்த வட்டாரமே குடியும் கூத்தும் கும்மாளமுமாகக் காட்சியளிக்கும். பொதுவாக அவ்வகுப்பார் மிக சிறப்பாகக் கொண்டாடும் களியாட்டம் இதுவே; ஆனால் ஒரு குழந்தை இறந்து விட்டாலோ பல நாள் வரை அவ்வட்டாரமே சோகக் கடலில் ஆழ்ந்து விடும். தங்கள் இனவிருத்தியில் டேகோயல்லிங்கர் எவ்வளவு தூரம் அக்கரையுடன் இருக்கிறார்களென்பதற்கு இஃதோர் எடுத்துக் காட்டாக விளங்குகின்றது.

நாகரிகத்திற்கப்பாற்பட்ட நரமாமிசம்தின்கிற கொடுமை மிக்கவர்ளின் இப் பயங்கர உண்மைகளை டென்மார்க்தேச விஞ்ஞானியான அறிஞரொருவர் 1953 பிப்ரவரியில் வெளியிட்டார்

திராவிடன்
சந்தா விவரம்

உள்நாடு

ஆண்டு சந்தா	... ரூ.	8	0	0
ஆறுமாதம்	... ரூ.	4	0	0
தனிப்பிரதி	... ரூ.	0	3	0

வெளிநாடு

ஆண்டு சந்தா	... ரூ.	9	0	0
ஆறு மாதம்	... ரூ.	4	8	0
தனிப்பிரதி	... ரூ.	0	3	6

உன்னையே நீ...தொடர்ச்சி

ஐயா உன் நிலைமை! உன் நாட்டின் நிலைமை! இன்னுமா உறங்குகிறாய் இளந்தமிழா! சோறிருந்தால் போதுமா? மானம் வேண்டாமா? உயிர் நீப்பின் உயிர்வாழாக் கவரிமான் உன்னினத்தானே! நீ மட்டும் ஏனப்பா மானத்தை இழந்தும் 'மனிதன்' என்ற உருவில் நடமாடுகிறாய். உயிர் போனால் உடல் செயலற்றுப் போகவில்லை! அதே போல மானம் பறிபோனபிறகு, அதைப் பறித்தவரை படுகுழியில் தள்ளும் முயற்சியில் செத்துத்தான் தொலையேன்.

நாய் கூட நன்றாகப் பிழைக்கிறதே எஜமானனுக்கு வாலாட்டி. எதிரிகளுக்குரல் காட்டி! அதைவிட மோசமான நிலைமைக்கா நீ தரத்தப்பட்டாய்! உன் இனத்துக்கு இன்னல் விளைவிக்கும் கொடுமையாளரை வாழவிடத்தான் நீ முடிவு கட்டி விட்டாயா?

ஏமாளியே, எண்ணிப் பாரப்பா! ஏமாந்தது ஏன்! ஏமாற்றியது யார்! நீ ஏமாந்ததற்குக் காரணம என்ன! அவன் ஏமாற்றியதற்கு யார் பொறுப்பு? நீ ஏமாந்ததற்குக் காரணம் அச்சம், ஆசை என்பவைதான் காரணங்கள் என்பது உனக்குப் புலப்படவில்லையா!

ஏழைகளுக்கு அச்ச மூட்டினன்; பணக்காரருக்கு ஆசை காட்டினன்

ஏ, ஏழையே! நீ ஆண்டவனை மறந்தால் — மறுத்தால் — இகழ்ந்தால் — அடுத்த உலகத்தில் உனக்குக கொடு நரகம் கோர வாய் திறந்து உனக்காக காத்துக் கொண்டு உன் வரவு நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறது. இந்த உலகத்தில் நீ படும் கஷ்டங்கள் உனக்கே தெரியும்; அவற்றின் கொடுமையும் நீ அறிவாய். தெரிந்தும் அடுத்த உலகத்தில் கூட அவதியை ஏன் சேர்த்து வைத்துக் கொள்கிறாய்! ஆகவே ஆண்டவன் புகழ்பாடு. அவன் அருள் தேடு; அது கிடைக்க ஆண்டவன் முசுத்திவிருந்து அவதரித்த எங்களை நாடு' என்று அச்சுறுத்துகிறான். அதற்கு அஞ்சிதானே, ஏழையே! நீ இவ்வுலகில் துன்பப்பட்டாலும் அவ்வுலகில் இன்பத்தைச் சேர்த்து வைக்க முடீல்கிறாய்.

ஏழைக்கு அச்ச மூட்டிய அதே 'ஏய்ப்போன்' அதோ அந்தப் பணக்காரனிடம் சென்று என்ன கூறுகிறான் என்பதையும் கொஞ்சம் செவி மடுக்கிறாயா?

ஏ, செல்வனே! ஆண்டவன் உனக்களித்த செல்வத்தைக் கொண்டு இவ்வுலகில் எவ்வளவு இன்பத்தை அனுபவிக்கிறாய்! இவ்வுலகில் நீ யடையும் இதே இன்பத்தை அவ்வுலகிலும் அடைய சொர்க்க மாளிகை உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. கொஞ்சம் கற்பனை செய்து பார். தேவாமிர்தம், அதோடு போட்டியிடும் தேவமாதர், உன்னைச் சுற்றிலும் தேவமாதர்கள்; அவர்கள் கையிலே தேவாமிர்தம். தேவாமிர்தத்தை முன்னால் பருகுவதா! தேவமாதரின் தேனிதழை முன்னால் சுவைப்பதா! இத்தகைய நிலை உன்னை இப்பொழுதே கிறுகிறுக்கச் செய்கிறதல்லவா ஆகவே ஏ, பணமுடையோனே! அந்த இன்பத்தை யெல்லாம் வாரி வழங்கும் வள்ளல்—தேவதேவனை மறவாதே; மறக்காதே; இகழாதே. ஆகவே இன்ப சாம்ராஜ்யத்து நிலைத்த குடிமகனாக என்னிடம் உன்னைப் பதிவு செய்து கொள்' என்று ஆசை வார்த்தைகளை அள்ளியள்ளி வீசுகிறான். அவன் மதி மயங்குகிறது; மண்டி யிடுகிறான். மதுவைக் குடித்தால்தான் போதை; ஆனால், இந்த மத அபினியின் வாசனை வீசினாலே போதும். அந்தோ! அவன் வீழ்வது உறுதி, உறுதி.

வெற்றிச் சிரிப்போடு அந்த வேதியன் அதோ செல்கிறான் பார்,

ஆசை மூட்டுவான்; மயங்காவிட்டால்...!

அச்ச மூட்டுவான்; பணியாவிட்டால்...!

ஒவ்வொருவனும் ஒரு சாணக்கியனாக ஒரு கங்குபட்டனாக, ஒரு வெங்கண்ணனாக, ஒரு திருஞான சம்பந்தனாக ஏன் ஒரு கோட்சேவாகவே மாறிவிடுவான்.

எண்ணிப்பார்; எண்ணிப்பார்; ஏ, மனிதா! நீ எண்ணிப்பார். ஏன் அஞ்சுகிறாய்!

சிந்திக்கத் தயங்காதே; சிந்தி!

முதல் முதலில் சிந்திக்கத் தெரிந்தவனே நீ சிந்தி; ஆனால் இன்று சிந்திக்க மறந்தவனே, மறக்கடிக்கப்பட்டவனே சிந்தி.

ஓரே சிரிப்பு கோரச் சிரிப்பு.

சிந்திக்கிறேன்; சிந்திக்கிறேன், நம்மைச் சிக்கவைத்த சிலந்திக் கூட்டை அறுத்தெரிகிறேன், எண்ணிப்பார்! எண்ணிப்பார்! என்று என்னைத் தூண்டி விட்ட ஏந்தலே! சொல்லைச் செயலாக்க இதோ வந்துவிட்டேன்;

இப்படி ஆவேசத்தோடு எழுந்தேன். ஆனால் இதுவரை நான் படுக்கையில் தான் கிடந்திருக்கிறேன். துயிலெழுந்தேன், 'என்னங்க! வந்துவிட்டேன் வந்துவிட்டேன் என்று ஏதோ பேசினீர்களே என்று என் மனைவி கேட்டாள், காலையும் மலர்ந்திருக்கக் கண்டேன். என் குழவி மழலை மொழி உதிர்த்துக் கொண்டிருக்கும் காட்சியையும் கண்டேன். கண்ட கனவை என் காதல் கிழத்திக்கு விளக்கினேன்.

அவ்வளவு காலையிலேயே அதோ அந்த 'மாதிரிப் பைத்தியத்தின் குரல் : 'உன்னையே நீ எண்ணிப்பாரு!'

அந்தக் குரல் இன்னும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டே யிருக்கிறது. என் உள்ளத்தில் சிந்தனை விளக்கு எரிந்து கொண்டே யிருக்கிறது; ஐயவிருளின் அடிச்சுவடே காணவில்லை.

தமிழ் மக்களால் நன்மதிப்புப் பெற்ற

வெண் சங்கு

சீயக்காய்த் தூள்

எங்கும் கிடைக்கும்

மணத்தில் மிகுந்த

செல்வம் ராணி

ஊதுபத்திகளை

உபயோகியுங்கள்

தயாரிப்பவர் :

வெண்சங்கு சீயக்காய்த் தூள் பாக்டரி

3037—38 டபீர் குளம்ரோடு தஞ்சாவூர்

பிள்ளையார் பேசுகிறார்...தொடர்ச்சி

நாட்களில் 'நான் கண்ட விநாயகர் என்ற தலைப்பில் என்னுடைய அருமை பெருமைகளை யெல்லாம் அழகாக. எடுத்துச் சொன்னாலும் சொல்வார். இன்னும் சொல்லுகிறேன் கேளுங்கள், திராவிட கழகத்தார் இந்திய சர்க்காரின் கொடியைக் கொளுத்தப் போவதாகக் கூறிவந்தார்களல்லவா — அதை எதிர்த்து அமைச்சர் பக்தவத்சலம் பேசுகையில் 'பிள்ளையாரை உடைத்தாலும் பொறுத்துக் கொள்வோம். தேசியக் கொடி எரிப்பதை விட்டுக்கொடுக்க மாட்டோம்' என்று பேசினாராம். அமைச்சரின் இப்பேச்சினை எதிர்த்து குடந்தை அருள்நெறி கூட்டத்தினர் கண்டனம் தெரிவித்துள்ளனராம், அவர் அவ்வாறு பேசியதை வாபஸ் வாங்க வேண்டுமாம்!

பக்தர்களின் இந்த போக்கினைக் காணும்போது 'படமுடியாது இனித் துயரம் படமுடியாதரசே பட்டதெல்லாம் போதும்' என்ற பதிகத்தை முகாரி ராகத்தில்பாட வேண்டிய நிலைதான் எனக்கு ஏற்படுகிறது. அமைச்சர் பக்தவத்சலம் ஏதோ சொன்னதை என் பக்தர்கள் அல்லவோ டம்மாரம் அடிக்க முற்பட்டு விட்டார்கள்! எனக்கு பெரும்பாலும் வம்பு நேர்வதெல்லாம் பக்தர்களின் 'குட்டை குழப்பும்' மேதாவித்தனத்தால்தான்!

பெரிய இடத்து பொல்லாப்பு எனக்கேன்? என் சொந்தத் தம்பியே என்னை மதிப்பதில்லை. எனது வாழ்வைப்பற்றி என்னை பெற்றெடுத்த பார்வதிக்கோ பரமசிவனுக்கோ கவலையுமில்லை. அவர்களுக்கு தங்களின் கோலாகல வாழ்வுதான் முக்கியமா யிருக்கிறது! இந்த லட்சணத்தில் என்னை மற்றவர்கள் எப்படி மதிக்க முடியும்?

ஆகவே இனியாவது பக்தர்கள் என்னை இவ்விதம் அவமானப் படுத்தும்படியான காரியங்களில் ஈடுபடாதிருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அவர் ஒரு மாதிரி-தொடர்ச்சி

ருக்கண்; அவர் பெயர் உலகெங்கிலும் ஜொலிக்க வேண்டும் என்பதுதான் அவர்கள் எணணம்! இருக்கவே இருக்கிறார் 'இந்து' ரங்கசுவாமி நேருவின் புகழ்பாட. அவரையும் மிஞ்சிவிடுகிறார் 'டைம்ஸ் ஆப் இந்தியா' ரெட்டி! 'பிளிட்ஸ்' ஆசிரியர் கரஞ்சியாவோ, 'நேரு இன்றி அவர் குல்லாயின்றி இங்கும் எங்கும் சமாதானம் இல்லையே! சமாதானம் இல்லையே என்று அனுராகம் பாடவே கிளம்பியிருக்கிறார்!

விசியெறியப்படும் ஓர் துண்டுக்காக நான்கைந்து பஞ்சைகள் போட்டிப் போடுகின்றனர்—சிகப்புக் கம்பளத்தில் நேரு! சுண்டைக்காய் நாடு போர்ச்சுக்கல் அவரைக் கண்டு எள்ளி நகையாடுகிறது. லண்டன் மாநகரத்தின் விருந்துக் கூடங்களில் நேரு! சிங்களத் தீவு இந்தியரை வெளியேற்றுவதிலே முனைந்திருக்கிறது தீவிரமாக. ஆனால் நேருவுக்கு ஆஸ்டிரியாவில் 'கௌரவப் பிரஜை' என்ற பட்டம்! மலேயாவிலே இந்திய மக்கள் அவதிப்பட்டுக் கொண்டுதானிருக்கின்றனா வாட்டிகான் நகரத்து உலகாண்டவராம் போப், அவரோடு இந்தியக் கத்தோலிக்கரைப்பற்றி பேச்சு வார்த்தை. ஆப்பிரிக்காவில் இந்தியர் வெறுக்கப்படுகின்றனர். ஆனால் நேரு உலகெங்கிலும் விரும்பப்படுகிறார். அவர் புகழ் உயர்ந்துகொண்டே போகிறது, நடு நிலைமை கொள்கைக்காக. ஆனால் உள்நாட்டு விவகாரங்களிலோ ஒருதலைக் கொள்கையை கையாண்டு வருகிறார்! இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் வடவருக்கு வாழ்வு தென்னவருக்கு தேய்வு. இந்த மாற்றாந்தாய் மனப்பான்மையானவர் தான் மாந்தருள் மாணிக்கம் என்று போற்றப்படுகிறார்!

கோர உருவம் தெரியவில்லை. காதலிக்கின்றன அயல் நாடுகள். பாண்டுங்கிலே ஆசியப் பிரதமர் மாநாடு கூடும்போது சில ஆசிய நாடுகள் நேருவிடம் யோசனை கேட்டன. குருபீடத்தில் உயர்த்திவிட்டன. உயர்ந்துவிட்ட நேரு, தூது சென்று வந்த நாடுகளின் தலைவர்களிடமும் ஆசிரியர் போலத்தான் நடந்திருக்க வேண்டும்!

எனவேதான், டில்லி மாமன்றத்திலே ஹரன் முகர்ஜியும் ரேணு சக்ரவர்த்தியும் தென் வியட்நாம் பிரதமரின் பெயரை 'டியம்' என்றுசொன்னபோது நேரு குறுக்கிட்டு 'டியம்' அலல அவர் பெயர். எழுத்து 'டியம்' என்று இருப்பினும் உச்சரிக்க வேண்டிய முறை 'ஜெம்' என்று கூறி அவர்களைத் திருத்தி யிருக்கிறார். ஆனால் அதிலும் தவறி யிருக்கிறார்! கவிஞனுக்கு புத்தி புகட்டக் கிளம்பிய குணசீலன் நினைவுவருகிறது நமக்கு! மாதிரி சோஷலிஸ்ட் அல்லவா நேரு எனவேதான மாதிரி ஆசிரியராகி யிருக்கிறார்!

தென்வியட்நாம் பிரதமரின் பெயர் 'ஜெம்' அல்ல; 'டிஜியெம்' எழுத்து—DIEM—தான் என்றாலும் உசசரிக்க வேண்டியமுறை—D'ZEE-EM—டிஜியெம்! முழுப்பெயர் எழுத்தில், NGO DINH DIEM—என்றுதான் இருக்கும்—ஆனால் உச்சரிகக வேணடியது 'N go din d'zee-em—ங்கோ டின் டிஜியெம்! இந்தப் பெயர் விவரம் அதிகாரப்பூர்வமான ஆதாரத்தோடு, டைம் நியூஸ் மேகஸைன், ஏப்ரல் மாதம் நான்காம் தேதி வார இதழில் 20-ம் பக்கத்திலே இரண்டாம் பத்தியில் இருக்கிறது என்பதையும் சொல்லிவிடுகிறோம். ஆனால் ஜெகம் புகழ் சூராம் நேரு பண்டிதர் 'ஜெம்' என்று கூறியிருககிறார்—சித்திரக்காரனுக்கு ஓவியக்கலை கற்பிக்க முயன்றவனின் ஞாபகம் வருகிறதல்லவா நமக்கு!

ஆசியஜோதிக்கு நாம் அடக்கமாக மற்றொன்றும் சொல்ல வேண்டியிருக்கிறது. டில்லி மாமன்றத்திலே நவசீனப் பிரதமரின் பெயரைச் சொல்ல நேர்ந்தபோதெல்லாம் 'சௌ-என்-லாய்' என்று கூறியிருக்கிறார்கள் — கூறிவருகிறார்கள். ஆனால் அந்த உச்சரிப்பு தவறு என்று திருத்தவில்லை நேரு. எனவே அவரும் சௌ-என்-லாய் என்றுதான் உச்சரித்து வருகிறார் போலும். ஆனால் அந்த உச்சரிப்பு தவறு. 'ஜோ-என்-லீ' என்றுதான் அழுத்தமாக உச்சரிக்க வேண்டும் அவர் பெயரை! அப்படிதான் அவர் அழைக்கப்படுகிறார். இந்த விபரம் டைம் நியூஸ் மேகஸைன் 1954-ம் வருடத்து மே மாதம் பத்தாந் தேதி வாரஇதழில் 19-வது பக்கத்தில் மூன்றாவது பத்தியிலே இருக்கிறது! இதை நேரு பண்டிதர் மற்றொருமுறை ஆசிரியராவதற்கு வாய்ப்பு கிடைத்தால் உறுப்பினர்களுக்கு எடுத்துச்சொல்ல வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்!

சித்திரக்காரனுக்குச் சித்திரக்கலை சொல்லிக் கொடுக்க முயன்றவன்—உண்மையான ஓவியனல்ல—மாதிரி ஓவியக்காரன், கவிஞனுக்குத் திருத்தம் கூறக் கிளம்பியவன் நிஜமான கவிஞனல்ல, மாதிரிக் கவிஞன். நேருவும் சமாதான தூதுவரல்ல, சமாதானத் தூதுவரைப் போன்றவர். ஆசிரியரல்ல, ஆசிரியரைப் போன்றவர்! ஏனென்றால் அவர் ஒரு மாதிரி சோஷலிஸ்ட்!

கோவா கொடுமை

நேரு சர்க்காரே உடனடி நடவடிக்கை எடு இல்லையேல் கோவாவை மறந்து விடு

சென்னையில் மாபெரும் கண்டன ஊர்வலம்.

கோவாவில் போர்ச்சுகீசிய ஏகாதிபத்தியம் நடத்திய கொடுமையான—மிருகத்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தையும்— அடக்குமுறையையும் கண்டிக்கும் முறையில் நேற்று சென்னை நகரில் கடையடைப்பும் — கண்டன ஊர்வலமும்—கடற்கரையில் சர்வகட்சி பொதுக்கூட்டமும் நடத்தப்பட்டன.

18—8—55 காலையிலிருந்தே சென்னை நகரெங்கும் தொழிலாளர் தோழர்களும் மாணவத் தோழர்களும் மற்ற பொது மக்களும் ஆங்காங்கே கூட்டம் கூட்டமாகக் கூடி கடைகளை மூடும்படியும் அலுவலகங்கள்—தொழிற்சாலைகள் ஆகியவற்றை கடையடைப்பு செய்யும் படியும் கேட்டுக் கொண்டிருந்தனர்.

இதைத் தொடர்ந்து மாலை 3 மணிக்கு சென்னை திரு. வி. க. திடலிலிருந்து (கான்ரான்ஸ்மித் நகர் மைதானம்) மாபெரும் கண்டன ஊர்வலம் ஒன்று புறப்பட்டது ஊர்வலத்தில் சென்னை தொழிலாளர் சங்கம், திராவிட முன்னேற்றக் கழகம், சோஷலிஸ்ட் கட்சி ஜனசங்கம், மற்றும் பல ஸ்தாபனங்கள் தங்கள் தங்கள் கட்சிக் கொடிகளுடன் கலந்து கொண்டன.

திராவிட முன்னேற்றக் கழகத் துணைப் பொதுச் செயலாளர் தோழர் என். வி. நடராசன் அவர்களது அறிக்கைக் கேற்ப சென்னை மாவட்ட தி. மு. கழகமும்—மற்றக் கிளைக் கழகங்களும் தங்களது வட்டக்கொடிகளுடன் கலந்து கண்டனக் குரலை எழுப்பிய காட்சிகள் கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. சுமார் ஐம்பதினாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் ஊர்வலத்தில் கலந்துக் கொண்டு தங்களது கண்டனத்தைத் தெரிவித்தனர்.

கண்டன ஊர்வலத்தை தி. மு. கழக துணைப் பொதுச் செயலாளர் என் வி. நடராசன் சென்னை தொழிற் சங்க பொதுச் செயலாளர் தோழர் எஸ். பக்கிரிசாமி பிள்ளை முன்னின்று நடத்தினர் சென்னை மாவட்ட தி. மு. க. செயலாளர் தோழர் இளம்பரிதி, முன்னாள் செயலாளர் தோழர் கண்ணபிரான் மற்றும் கிளைக் கழகச் செயலாளர்கள் உடனிருந்து ஆவன செய்தனர்.

ஊர்வலம் திரு. வி. க திடலை விட்டுப் புறப்பட்டு சூளை ஐரோடு, பெரிய மெட், ரிப்பன் பில்டிங், சென்ட்ரல், சைனாபஜார், நீதி மன்றம் ஆகிய வற்றின் வழியாக வந்து சென்னை உயர்நீதி மன்றத்தை அடுத்துள்ள கடற்கரையில் சேர்ந்தது.

இம்மாபெரும் கண்டன ஊர்வலத்தில் கோவாகொடுமைக்கு காரணமான —போர்ச்சுகீசியரின் அடக்குமுறைக்கு காரணமான ஏகாதிபத்திய வெறியன் சலாசரின் கொடும்பாவி கட்டி இழுத்து வரப்பட்டு—சென்னை கடற்கரை சர்வ கட்சி கூட்டத்தில் சிதைக்கப்பட்டது.

சர்வகட்சிக் கூட்டம்

சர்வகட்சிப் பொதுக்கூட்டத்தில் சுமார் $1\frac{1}{2}$ லட்சம் பேர்களுக்குமேல் கலந்துகொண்டு சிறப்பித்தனர். கூட்டத்திற்கு அண்ணாமலைபிள்ளை எம். எல். சி. தலைமை வகித்தார். தோழர்கள் ஜீவானந்தம், வரதராஜலுநாயுடு, சீனிவாசமூர்த்தி, சுயம்பிரகாசம், எம். எல். ஏ. ரத்னம் எம் எல். ஏ, ஆகியோர் பேசினர்.

உடனடி நடவடிக்கை எடு ! இல்லையேல் கோவாவை மறந்துவிடு !

அடுத்துப் பேசிய தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், எங்கள் இயக்கக் கொள்கையை முன்வைத்துப்பார்த்தால் இந்தியப் பேரரசுக்கும் எங்களுக்கும் பல வேறுபாடுகள் இருப்பினும் பொதுவாக இந்தியத் துணைக்கண்டத்தில் அந்நிய ஏகாதிபத்தியம் தலைவிரித் தாடுவதை நாங்கள் அனுமதிக்க முடியாது. எனவே போர்த்துகீசிய சர்க்காரின் வெறியாட்டத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம், ஆனால் இவ்வித நிலைமைக்குக் காரணம் நேரு சர்க்கார் கையாண்டுவரும் கொள்கையேயாகும். இதுவரை எப்படியோ தொலைந்தாலும் இனியாவது நேரு சர்க்கார் சற்று தெளிவுடன் போர்த்துகீசிய ஏகாதிபத்தியத்திற்கு எச்சரித்துவிட வேண்டும். ஒருவார தவணைக்குள் கோவாவைவிட்டு வெளியேறாவிட்டால் போலீஸ் நடவடிக்கை எடுக்கும் என்று கூறட்டும் இந்திய சர்க்கார். அதற்கு கோவா சர்க்கார் இணங்கவில்லையெனில் அடுத்து நடைபெறும் போராட்டத்தில் தி மு. கழகம் தனது வீரர்களை அனுப்பத் தயார் என்பதை நேரு சர்க்காருக்கு கூறுகிறேன். இதற்கு தைரியம் இல்லாவிடில் நேருசர்க்கார் கோவாவையாவது மறந்து விடட்டும் என்று கூறியதோடு கோவா போராட்டத்தில் ஈடுபட்டு உயிர் நீத்த தியாகிகளுக்கு தி. மு. கழகத்தின் சார்பில் அனுதாபம் தெரிவித்தும் உரையாற்றினார்.

பிறகு சென்னை மேயர், தோழர்கள் டி. செங்கல்வராயன், பி. ராமமூர்த்தி, அந்தோணிப்பிள்ளை பேசினர்.

கூட்டத் துவக்கத்தில் பந்தலில் கட்சிக் கொடிகளை ஏற்றுவிப்பது குறித்து சிறிது நேரம் தகராறு ஏற்பட்டு பின்னர் கூட்டம் அமைதியான முறையில் நடைபெற்றது.

பாலைவன ரோஜா தொடர்ச்சி

கோ : பார்த்தேன்! ஆனால் படம் பிடித்துக் கொண்டுவர மறந்து விட்டேனடி.

ரா : அய்யோ! கிள்ளாதடி!

கோ : ஆமாம் இந்தக் கன்னத்தை நான் கிள்ளினால் வலிக்கும் அவர் கிள்ளினால் சிவக்கும் வாடி. சீக்கிரம் போவோம். அப்போதே புலிபோலப் பார்த்தார்...இப்போது நானுன்னைக் காக்க வைத்திருப்பதைப் பார்த்தால் கரடிபோலக் கத்தினாலும் கத்துவார்.

காட்சி : 2

இடம் : ஆற்றோரம்.

நிலைமை [குடத்திலே நீரெடுத்த இரு குமரிகளும் வீடுநோக்கித் திரும்பிக் கொண்டிருந்தனர். நட்சத்திரத் தோழிகள் பின்னணி பாட நிலவழகி வான வீதியிலே நாட்டியமாடிக் கொண்டிருந்தாள். திண்ணைத் தூணிலே சாய்ந்திருந்தான் மூர்த்தி. மூர்த்தியின் மீது காந்தக் கண்களை மேயவிட்டாள் ராஜம். ஆடிவந்த புது அழகைப் பார்த்தான் மூர்த்தி. அந்தக் காதல் குயில்களின் பார்வை பேசிக்கொண்ட ரகசியத்தை கோகிலத்தால் புரிந்து கொள்ள முடியவில்லை. விடை பெற்றுக் கொண்டு போய் விட்டாள்!

நடுநிசி வந்தது! ஊரே தூங்கியது. மூர்த்தியும்—ராஜமும் மட்டும் விழித்துக் கிடந்தனர். வீட்டின் பின்புறப் பூந்தோட்டத்திலே காத்துக் கிடந்த மூர்த்தி — விழித்திருந்த ராஜத்தை ஆற்றோரத்துக்கு வரும்படி அழைத்தான். ஆற்றோரத்தில் இன்பக் கூத்தாட அழைத்த மூர்த்தியும்—ராஜமும் பக்கத்துப் பக்கத்து வீடு! வாழ்க்கைத் தொல்லைகள் ஈட்டியாகி அவனைக் குத்திக் கொண்டிருந்தன. அந்தத் தொல்லையோடு தொல்லையாக காதல் கத்தியும் அவன் நெஞ்சிலே பாயாமலில்லை. பஞ்சும்—நெருப்பும் பக்கத்துப் பக்கத்திலே. அது பற்றி எரிந்ததிலே ஆச்சரியமில்லை!

ரா : வந்தீரா அத்தான்!

மூர்த்தி : வந்துவிட்டேன் சுந்தரி. வைரத்தை இங்கே வைத்துவிட்டு அங்கே யிருந்துவிடுவேனா நான்.

ரா : வைரம் விஷம் அத்தான் விஷம்,

மூ : உன் கண்ணாடிக் கரம் பட்டாலே விஷமும் அமிர்தமாகுமன்பே.

ரா : புகழ் ஒரு காற்றடைத்த பலூன்...ஊத ஊதப் பெருத்து உடைந்துதானே போகுமத்தான்,

மூ : என் புகழுரைகள் காற்றடித்த பலூனோ, காற்றிலே ஊஞ்சலாடும் பட்டமோ அல்ல ராஜம். புது வாழ்வுக்கு நான் தரும் முன்னுரை—அதுதான் இந்தப் புகழுரை!

ரா : அந்த முன்னுரை என்னளவிலே பொன்னுரைதான், ஆனால்

மூ : காலத்தை ஏமாற்றுகிறோமே என்று குறைபடுகிறாய் ஏன், அப்படித்தானே!

ரா : சொல்லலங்காரத்தால் இன்பமாளிகை கட்டுவது சுலபமென்று நீங்கள்தான் கூறியிருக்கிறீர்களே!

மூ : அந்த மாய மாளிகையை அல்ல நம்வாழ்வு மாளிகையை விரைவிலேயே கட்டி முடிக்கிறேன் கண்ணே!

ரா : அதுவரை நாம் இடமில்லா நாடோடிகள் தான்!

மூ : வஞ்சகர்களின் நெஞ்சம் நம்மை அப்படித் தான் ஆக்கிவைத்திருக்கிறது ராஜம்,

ரா ; அத்தான்! பனித்துளிகளும், பன்னீர்த் துளிகளும் நிலைத்துவிடாது.

மூ : நெளிந்தாடும் புதுமயிலே! நெஞ்சைச் சுடுகிறது உன் நினைவு. அந்த நினைவு சொல்லும் காதல் கதையை உன் காதோடு காதாகக் கூறுகிறேன்—எங்கே நெருங்கி வா!

ரா : ஆற்றோரத்து நினைவுகளை நினைத்தாலே தித்திக்கிறதே அத்தான், தேன் என்று நீங்கள் சொன்னாலே சுவைக்கிறது. தேன் குடமே வந்து விட்டால்!

மூ : புதுமொழி பேசும் பூங்கொடி! இந்த ஆற்றழகி தன் கரைக் காதலனோடு என்ன பேசுகிறாளென்பதை உற்றுக் கேட்டாயா! ஒட்டிக் கிடக்கும் நம்மையும் எட்டி நிற்கும் அவர்களையும் பார்! என்று கூறித்தான் கலகலத்துச் சிரிக்கிறது அந்த ஆற்றழகி சிரிக்க நாம் இடம் வைக்கலாமா!

ரா : அய்யோ கிள்ளாதீர்களத்தான் — சிவந்து விட்டதே!

மூ ; ஆப்பிள் சிவந்தால்தானே ருசிக்கும்!

[ஆற்றோரத்து மணல்மேட்டிலே ராஜம் சாய்ந்தாள். அந்த மண்மேடு மலர் விரித்த மஞ்சமாக இருந்தது காதல் குயில்களுக்கு. இன்ப மூச்சு வீசிக்கொண்டிருந்த அதே வேளையிலே—வேதனை மூச்சும் தொலைதூரத்திலே வீசாமற் போகவில்லை. புதரின் மறைவிலே நின்று கொண்டு ராஜம்—மூர்த்தியின் காதல் நாடகத்தைப் பார்த்த பலவேசமும் வீரனும் பெருமூச்சு விட்டுத் திரும்பினர். ராஜம் பலவேசத்துக்கு முறைப்பெண். ஆனால் அந்த முல்லைக் கொடியோ மூர்த்தி மார்பிலே புரண்டது. காட்சியைக் கண்ட பலவேசம் ஏக்கத்தோடு நின்று கொண்டிருந்தான்!]

வீரன் : பாருடா பலவேசம்! உன் நெஞ்சு கொதிக்கல்லே! கோட்டையை விட்டுட்டியேடா— உன் கோமளவல்லியைக் கொத்தித் தூக்கிட்டுப் போயிட்டானேடா மூர்த்தி!

பலவேசம் : வீரா! என்னப்பா இது கலாட்டா: நானு இந்த மெழுகுக்கோட்டை கட்டப் போறேன். நவாப்பு கோட்டைகளிலேயே வெளவாலும், கோட்டானும் குடியிருக்கு!...அவ ஒரு ஓடு காலி! அவளை நான் நினைச்சதே யில்லையே! அழகு யிருந்தா போதுமா வீரா! புத்தி வேணும் இதுக ரெண்டும் படிச்ச முட்டாளுக! படிச்சிட்டுப் பயித்தியம் பிடிச்சு அலையுதுக! அவங்க பேசியதைக் கேட்டியா வீரா! ஆறு பேசிக்கிதாம்—அவங்க எட்டி நிற்கிறதைப்பத்தி. அதைக் கேட்டு இந்த அசடும் ஒட்டிக் கொண்டு நிற்கிறாளே! கிரகம்—எங்கோ பேயா அலைய வேண்டிய இது எங்க அக்காளுக்குப் பொண்ணாப் பிறந்திருக்கு!

வீ : தேன்குடமே வந்திருச்சாமேடா.

ப : வரும்டா வரும்—தேன் குடமும் வரும். சந்திரனைக் கூட பிடிச்சு விளையாடுறோ முன்னு சொல்லுவாங்கடா. நம்மதா ஏதோ அந்தி நேரத்திலே மல்லையைச் சுண்டக்கானு சொல்றோம்னு நமக்குப் போட்டியா இந்தப் படிச்சவங்களுங் கிளம்பிட்டாங்களே! காதல் போதையாம்! இது நம்ம சொந்த சரக்கைவிட போதையா யிருக்கும் போல இருக்குடா!

வீ : ஆத்திரம் வரவேண்டிய நேரத்திலே— ஆனந்தமா பேசறியேடா, நாளைக்கு அவகழுத்திலே மாலைபோடப்போறே. இப்ப அவ வேலையில்லாத சோம்பேறிப் பயலோட கொஞ்சிக்கிட்டிருக்கா!

ப : அந்த வெறிநாயை நானும் போயி கொஞ்சனும்னு சொல்றியா! போடாபோ அந்த எச்சல்இலை வீதியிலேயே கிடக்கட்டுமடா! எனக்கு என் வள்ளி யிருக்கா!

வீ ; வள்ளிகிட்ட சல்லிக்காசு இருக்கானு பாரு பலவேசம். வள்ளிஎன்னமோ உனக்குத்தான், ஆனால் ஸ்ரீவள்ளிக்காக குமரர் எத்தனை வேஷம்போட்டார். நீயும் ஒரு வேஷம் போடு பலவேசம். ராஜத்தின் கழுத்திலே எப்படியும் தாலியை போடப்பாரு. காரியம் மட்டும் வெற்றி ஆயிடுச்சுன்னா புதையல் நமக்கு கிடைத்த மாதிரியேதான்.

ப : பணமூட்டை கிடைக்கும்னு சொல்றே— நான் ஒத்துகிட்டாலும் மாமா அவளை எனக்குத் தரவேணுமே.

வீ : இருக்கவே இருக்கா உன் அக்கா அகிலாண்டம். அழுது கதறுடா! அங்கே யிருந்து திகைம்புச்சுன்னா அது லேசுலே அணையாது.

(அடுத்த வாரம்)



திராவிடத்தின் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவரான தோழர் மா. தங்கவேலர் திராவிடனின் 9-ம் ஆண்டு பயணத்துக் குத்துணையாக தரும் இத்தொடர் ஓவியத்தை வாரந்தோறும் தவறாது சுவைக்குமாறு வாசகர்களைக் கேட்டுக்கொள்கிறோம்

—ஆசிரியர்

மா. தங்கவேலர்.

காட்சி : 1.

இடம்...பூங்காட்டின் சோலைவனம் துவக்க நிலைமை (பூக்காடு—பழைய எண்ணங்கள் அஸ்தமித்துப் புதுக்கொள்கைகள் உதயமாகிக் கொண்டிருந்த நேரம். படித்தவர்கள் அங்கே அதிகமில்லாவிட்டாலும் 'பண்பு' நிறைந்தவர்கள் அளவிலே அதிகமாகத்தானிருந்தனர். நீலவானத்துக்குத் தலை தூக்கும் புதுநிலாமெருகைத் தருவதுபோல, ஊரின் மையத்திலிருந்த திகம்பரரின் அழகு மாளிகை புதுச் சேலையைத் தந்து கொண்டு கம்பீரமாக நின்றது. மாளிகைச் சொந்தக்காரர் திகம்பரருக்கிருந்ததோ புலியுள்ளமோ—குகைஇதயமோ அல்ல. மாணிக்கத்தையும்விட 'அன்பு' மதிப்பிலே பெரியதென நம்பிக்கொண்டிருந்தவர். அந்த நம்பிக்கைக்குப் பாத்திரமாகவேதானிருந்தார் அவர். அந்த அன்புள்ளத்துக்குத் தான் ராஜம் என்ற அழகு மயில் திருக்குமரியாக யிருந்தாள்.

ராஜத்தின் நிலாக் கன்னத்திலே— காலக் கலைஞன் மெருகு தீட்டிக் கொண்டிருந்த வேளையில் ஒரு நாள் மாலைப் பொழுதினிலே இடையிலே குடம் கொஞ்ச பொன்கரத்தால் அணைத்துக்கொண்டே சோலைவனத்தின் தடாகத்தை நோக்கி நடை போட்டாள்,

தடாகத்துக்கு அழகு கூட்டிய பச்சைப் புல் தரையிலே கோகிலம் லாகவமாக சாய்ந்திருந்தாள் அந்தத் தங்க மேனிக்குக் குடமே தலையணையாகி யிருந்தது, ஏதோ ஒருவகைச் சுவையைக் கண்டு பச்சைப் புல்லைக் கடித்துக் கொண்டே யிருந்தாள். கோகிலத்தின் பார்வை பாதையில் அன்னநடை போட்டுவந்த ராஜத்தின் மீது பதிந்ததும் துள்ளி எழுந்தாள். நகர்ந்துபோய் பக்கத்திலிருந்த ரோஜா மலர்ச் செடியை அணைத்துக் கொண்டே ...]

கோகிலம் :—சிவந்த ரோஜாவே! நேற்றெல்லாம் சிரித்துப்பேசி கதை கூறினாயே...இன்றென்ன முகங்கோணி மறைந்து கொண்டாய்! ஓடியலைந்த பொன் வண்டு உன்னைத் தேடிப்பாடிப் பறந்து வந்திருக்கிறதென்ற உண்மை எனக்கென்ன புரியாதா? அதற்காக அலட்சியப்படுத்த வேண்டுமா இந்த அன்பு இதயத்தை! முதலிலே சிரித்து விடு நான் போய் விடுகிறேன். பின்னர் முத்தத்தால் முழு நிலவு தேயும்வரை மூச்சுத் திணரவை உன் காதலரை—பொன் வண்டை!

ராஜம் :—வண்டாடும் சோலையில் பெண்ணாகி நின்று கவிதை மொழி பேசும் கட்டழகி...ஏனடி இந்தக் குறும்பு?

கோ : கரும்பானுள் அவள்—எறும்பானேன் நான். இடையே...இரும்புத் திரையாகி விட்டதே இந்தப் பொன் வண்டு. அடடா! சின்னப் பொன் வண்டே, நீ வராவிட்டால் காலமெல்லாம் பேசிக் களிப்பேனே. பேசாமல் பதுமையாகிவிட்ட அழகு ரோஜாவே துரோகமில்லையா இது...!

ரா : துரோக விளக்கம் பேசும் துடியிடையே என் கோகிலமே—உன் துயரந்தானென்ன சொல்லம்மா!

கோ : பேசாத ரோஜாவின் நிலையிலே நீ! பாசத்துக்காக கண்ணீர் வடிக்கும் போக்கிலே நான்!...

ரா : புரிகிறது கோகிலா—புரிகிறது. உன்னோடு இணை வரவில்லை—தாமதமாகிவிட்டது. அதற்குக் கதை கட்டிப் பேசுகிறாயே கள்ளி!

கோ :— நான் அவரல்லடி—நீ போதைப் பேச்சிலே எதைக் கூறினாலும் நம்பிவிடுவதற்கு!

ரா :— அம்மா வீட்டிலே யில்லை — தேவி பூஜைக்குப் போயிருந்தாள்...

கோ : நீ உன் தேவருக்குப் பூஜை செய்து கொண்டிருந்தாயாக்கும்!

ரா :— போடி உன் கேலிக்கும் எல்லையில்லை!

கோ : இல்லை...இல்லை சொல்லடி! அம்மா தேவி பூஜைக்குப் போய்விட்டாள், காத்திருந்த உன்னைத் தேடி வந்தார் 'அவர்', 'அன்பே' என்று வாய்குளிர அழைத்திருப்பார்...அத்தானென்ற சத்தான மொழியிலே அவரை பூஜித்திருப்பாய். பிறகு என்ன...! நீ அங்கே—நான் இங்கே...

ரா : அவர் அவரென்று அவரை ஏனடி இழுத்து வைத்து அவஸ்தைப்படுகிறாய். எங்கோ இருக்கும் அவரை வம்புக்கிழுக்கிறாயே...

கோ : எங்கோ யிருக்கிறாரா! இங்கேதானடி—இப்பவேதானடி—பார்த்துவிட்டு வருகிறேனே நான் உன் வீட்டை நெருங்கியபோது அவர் வீட்டுப் படிகளிலே டையுங்கையுமாக மடமட வென்று ஏறிப் போய்க்கொண்டிருந்தாரே! என்னை வெடுக் சென்று ஒரு பார்வை பார்த்தாரே...அப்பப்பா நான் பயந்தேபோய் உன்னைக்கூட பார்க்காமல் இங்கே வந்துதான் நின்றேன், மனுஷன் துரை மாதிரில்ல யிருக்காரு—அடேயப்பா!

ரா : கோகிலா என் தங்கமே! உண்மையைச் சொல்லடி, வந்துவிட்டாரா அவர். இதற்காகத் தானா உன் குறும்பும்—கதையும், நான் பார்க்கவேயில்லையடி, நீ பார்த்தாயா?...

23-ம் பக்கம்